# சிறியதும் பெரியதுமாக எட்டுக் கதைகள்

ஹஸீன்

ப்ரண்ஸ் வெளியீட்டகம்

RangaRakes

tamilnavarasam.com

வாப்பா ஆதம்லெப்பைக்கும்
உம்மா பர்ஜாணிக்கும்



# புல் ஓவியம்

விழுதுகள் இல்லாத ஆல் போன்ற கம்பீரம். மொளி மொளியாக மொட்டுண்டு உடைந்த கந்து கொண்ட உடல் வாகு. பம்மி இலையும், பாலை மரப்பட்டைபோல் பொரிந்த காட்டுமரப் பார்வையிலே குப்பைமேனியளவு பெயர் தெரியாப் புல். யாரைக்கண்டாலும் பல்லிழிக்காமல் ஒதுங்கி நிற்கும் அளவு பெறுமதி இல்லாத உதவாக்கரை, எனக்குத் தெரியும் அதன் கலை வடிவம்.

என் கண்களுக்கு அது பட்டதும் பிக்காசோவின் கையில் பட்ட வெண்கலக்கட்டி. அது அக்கரையில் நின்றது. கடல்தான் என்றால் பிரமாண்டமாக கப்பல் எடுத்திருப்பேன். அது அவ்வாறல்ல. அழுதாலே ஆறாக வெள்ளம் நிறைந்து நிற்கும் சந்திரனின் விண்கற்கள் மோதிய குழிகள் போல் உள்ள சன நடமாட்டம் நிறைந்த 'ரோட்'. 'பைசிக்கிள் ரிம்' நனையா வண்ணம் 'டயர்' நனையும் துண்டுக்கீறே நாங்கள் கடக்கும் வழி. அந்தத் திடலில் மாத்திரம் அரசியல்வாதிகளின் முட்டுதல்களைத் தாண்டியும் ஒரு மேடு. பாதையில் கண்ட குட்டையின் வலது புறமாக சாடி நின்ற அந்த மேட்டில் புல் எனக்கு இடது புறமாக இருந்தது. அந்தப் புல் இறந்துபோன வேலியின் ஊடே கூட தனது ஒரு கிளையை விட்டிருந்தது.

என் பார்வை வலையில் புல் சிக்கிய சமயம், நான் நண்பர்கள் வலையில் சிக்கியிருந்தேன். என் மனசு, சிற்பி வெங்கடாசலத்துப்பாறை கிடைத்து உளியிருந்தும் கைபோனதுபோல் துடித்தது. நண்பர்களின் ஏளனத்திற்குட்படாது போவதற்காக நான் அதை அடைவதை தவிர்த்துக் கொண்டேன். என் கண்ணில் பட்டதும், மாடுகள் நாவில் படமுன் பத்து மணியோடு கட்டிய வீட்டின் ஒழுக்க வரம்பை மீறி வெளியேறினேன். நேரம் பனிரெண்டு மணி, செருப்பின் மிதியில் கூழாங்கற்கள் கர்...கர்... என்று 'சென்றிமென்ற்' இசை போட்டன. இரண்டு சந்திகளை தாண்டி நடந்து மூன்றாவது சந்தியில் ஏறினேன். புல் நின்ற குட்டையின் அருகே இருந்த குட்டைகளில் நிலவுகள். அந்தக் குட்டையில் ஒரு நிலவு, இந்தக் குட்டையில் ஒரு நிலவு, அதற்கடுத்த குட்டையில் ஒரு நிலவு, பகலில் கண்ட செம்மஞ்சள் நீர்த்தொட்டிகள் இரவில் மேகம் நிறைந்த வானானது.



RangaRakes tamilnavarasam.com

நான் தேடிவந்த குழியில் ஒரு 'ஹில்மென்' கார் நின்றது. தூர நின்று பார்த்தேன். எனக்கிது நல்ல நேரமா? கெட்ட நேரமா? என்று கலவரமடைந்தேன். 'டேப்றோன்' மிசினையும், 'ஹில்மென் காரை'யும் 'ஸ்டாட்' இல்லாமல் நிற்கும்போது தூர நின்று காண்பது நல்ல நேரமென்று புல்லைப் பிடுங்காது வீடு திரும்பினேன். அரைகுறை நித்திரை போயிருக்கும் ''புடி... புடி... கள்ளப் புடி புடிக்காம வெசயவைங்க" என்ற சத்தம் விழிப்பின் கடைசிச் சொட்டில் கேட்டது.

காலத்தால கறியும் வாங்கிக் கொடுத்துப்போட்டு அங்கால என்னபாடுகள், பார்ப்போம் என்று போனேன். புல் இருக்கும் குட்டையினுல் இருந்து பத்துப் பாகம் தள்ளி வரும்போது பையன் ஒருவன் குட்டைனுள் இறங்கி பந்தொன்றை மின்னல் வேகத்தில் எடுத்துக் கொண்டு ஓடி மறைந்தான். அந்தப் பையனைக் கொழுவிச்சி பிடுங்கி எடுக்கக் கூடிய வாய்ப்பு நழுவியது. அங்கே வந்தவரின் கையில் பிள்ளை இருந்தது. முகத்தில் கோபம் இருந்தது. கொம்பினார் ''தெறித்த பொடியன் செஞ்ச வேலயப் பாத்தயலா? இந்தப் பிள்ளட கைலயிருந்த பந்து உழுந்திச்சி. எடுத்துதா என்று கேட்டன் எடுத்துக்கோடிட்டான்."

றோட்டில் சனமோயுமட்டும் காத்திருந்தேன். தொட்டு விடும் தூரத்தில் சூரியன் வந்தது போலும் அது என்னை மட்டுமே கண்டது போலும் சுட்டுக் கருக்குகிறது. என்நெற்றியில் விழுந்த தலைமயிர் ஊடே ஒளி பாய்வது மேற்கண் பார்வைக்கு வெள்ளிக்கம்பிக் கற்றையாக பளபளத்தது. அதே நேரம் தண்ணீரில் பட்ட ஒளி தகதக ஜோதி தங்கப் பிரகாசமாய் தெரிகிறது. தங்கத்தை விட மதிப்புள்ள என் கண்மணிப் புல்லைப் பிடுங்க இதுதான் சமயம் என்று 'றவுசர்' காலை மடித்தேன். அது சொளுசொளுவென்று இழுபட்டது. மடித்த 'றவுசரை' கொஸ்ஸிப் பிடித்துக் கொண்டேன். இலகுவாக உயர்த்தக் கூடியதாக இருந்தது.

சீழ், இரத்தம் இதெல்லாம் தாண்டியும் அருவருப்பாக்கும் வீணி முட்டைகளுடனும் நாவரை வழிந்த நீர்க்குமிழிகளுடனும் பாணியாய்க் கிடந்த அந்தக் கெறவல் நீரில் காலை வைக்க மனதை பக்குவப்படுத்தினேன். செருப்பையும் கழற்றினேன். மங்கலாய் நிழல் போன்ற உருவம் தூர நகர்வதை அறிந்து நிமிர்ந்தேன். 'அவ அவள்தான்' முணு முணுத்தபடி செருப்பை மாட்டி காலை உருவிக்கொண்டு கிறுகிக் பார்க்காமல் ஓடிவந்து விட்டேன். இன்றைக்கு எப்படியாவது பிடுங்கினால் தான். வரும் போது பார்ப்போம். இப்போ ஸ்கூலுக்கு போவோம். எட்டுமேல் எட்டு வைத்தேன். வரும் போது இரத்தம் வடிந்த பழம் புண்ணில் காய்ந்த அஸர் போல் இருந்தது. அதில் இலேசான கசிவும் இருந்தது. அதில் காலை வைக்கும்போது தொன்னூறு வயதுக் கிழவனின் தளதளக்கும் தோலில் விரல் நுனிகளை வைத்து உசுப்புவது போல் இருந்தது. பாதங்களில் சதைப்



பிண்டங்கள் ஒட்டிக் கீழே வீழ்வதாக நடந்து புல்லைப் பிடுங்கினேன். அதனை கழுவவேண்டும். காய வைக்க வேண்டும். இலைகளை உதிர்த்த வேண்டும். பின் பளிச்சிடும் மின்னல் வர்ணமிட்டு புத்தாண்டுப் பரிசாய் கேட்ட காதலிக்கு கொடுக்க வேண்டும். சங்கமித்தை இலங்கைக்கு கொண்டு வந்த போதிக்கிளை அழிந்தாலும் உலகில் என் பரிசு அழியக் கூடாது.

என் வீட்டுக் கூரையில் புல்லை கழுவிக் காய வைத்திருந்தேன். நான் பாடசாலை போய் வீடு வந்தபோது அழகிய சுள்ளிகளை முறித்தெடுத்துக் கொண்டு உதவாக்கரை வேரை விட்டுவிட்டு என் முற்றத்து தென்னை மரத்தில் என் கண் முன்னே காகமொன்று கூடு கட்டியது.

என் மனமும், ஆயிரம் தச்சன் கூடி அழகான மண்டபம் கட்டி ஒருவன் கைபட்டு உடையும் குழவிக்கூடாய் சிதைந்தது. என் ஆசைகளோ துளித்துளியாப் பறந்தன.

**1996, மனிதம்**



RangaRakes tamilnavarasam.com

# சிறு பறவை உறவு வழி

தூய வெண்ணிற ஆடை சுமந்து, குளிர்மை திருட வரும் சிறுபறவையாக என் முன்னே வரலான பலவீனமானதும், இரத்தல் நிறைந்ததுமான நமது உறவு இன்னும் அதிர்வுகளை உகுப்பதில் அரேபிய குதிரை ரோமப்பிடில் வயலின் இசை போலத்தான்.

கல்லறை வாசகங்களின் அர்த்தத்துடன் உறவின் முகத்தை மூடாதே. பின் மௌனங்கள், மௌனங்களை பேச வைக்கும் பிரயத்தனம், மௌனங்களாக முடிந்து நமது மனதரிசனத்திற்கான தருணம் தவறி, நேசத்தின் வாழ்வும், வாழ்வின் நேசத்தையும் துயரொளிரும் பகல் வெளிச்சத்துடன் புனைந்துரைக்க வேண்டியிருக்கும் என்றிருந்த போதே, நிலாச் சோகம் தரும் இரவின் வரிசையில் நேற்றைய இரவும் சேர்ந்து கொண்டதோ?

அதி அலறல் சப்தத்துடன் அறையை குளிர்த்தி விட பிரஸ்தாபிக்கும் மின்விசிறி, மின்னில்லாமல் இயங்காமல் போனதும், அந்த வாஸ்தவத்தை வைத்து றிஸ்வானையும், றசாக்கையும் மெழுகுவர்த்தியின் மெல்லிய பிரகாசத்தில் படித்துப் பட்டம் பெறுமளவிற்கு அவை திருப்திகரமானவையல்ல. என் மனசுக்குள் இதமாய்க் கிடக்கும் இன்று காலை 8.45ற்கு நடந்த சம்பவத்தை கதைப்பாட்டின் அழகில் கூறுவதாய்க் கூறி கடற்கரைக்கழைத்துச் சென்றுவிட்டேன். பிரியமான ஒளிரும் இரவின் கடற்கரைக் கடையில் சுடச்சுட கடலைச்சுருளை வாங்கி சேட் பையில் வைத்ததும் நெஞ்சுத்தோலும் சுட்டது. தேனீர் கோப்பைகளை விரல்களில் சாமர்த்தியமாய் கொழுவிவிட்டேன். றசாக் கடலைச் சுருளை தாளம் போட்டபடி நெருங்கினான். நேரம் 11 மணி இருக்கும் போதே சாந்த மாமாவின் ஈர ஒளியையும், காற்றையும் தசிரிக்க கடற்கரைக்கு வராமலே அட்டைத் துண்டுகளாலும், உடுத்தாடைகளாலும் வீசியபடி கிராமம் தூங்கிப்போனது.

வழமையை விடவும் பற்றான சுருதியோடு றிஸ்வானை ''மச்சினேன்'' என்றழைத்தேன். இந்தக் குரலின் தோய்வில் பாடசாலை, மாடிவீட்டு ஜன்னலிலும் தொக்கி நிற்கும் அவள் சேர்ந்திருந்தாள். அவள் றிஸ்வானின் தாயின் ஒன்றுவிட்ட சகோதரியின் இரண்டாம் மகள். நகைச்சுவை என்ற பூச்சின் பெயரால் வளர்த்துக்



கொள்ளப்பட்ட பேச்சு, காலம் தப்பியும் நிராகரித்து விட முடியாத றிஸ்வானின் புன்னகையின் ஆதரவுடன் – அது எந்த வரம்புகளையும் மீறி விடாமல் வளர்க்கப்பட்டு அதிகாரபூர்வமான முறையில் கூட கேட்டேன். அவன் நலிந்த பழம் புன்னகையுடன் நழுவிவிட்டான். அன்று மிகவும் மெதுவாய்த்தான் எனது றிஸ்வானுடனான உரையாடல் துயர் பீடிக்கத் தொடங்கியது.

அவள் குனிந்து இதழ்களை நோக்கி விரல்களை மேலெழுப்பியவாறு செல்லும்போது காதலில் புதைந்து போன என் முகத்தை கண்களுக்குள் சிறைப்பிடித்தபடியா செல்கிறாள்? என் ஹேஷ்யங்களுக்கான தகவல் அதி அரிதாகவும் முன்பின் முரண்பட்டதாகவும் இருக்கின்றது.

சௌந்தர்யங்களுடன் அரிதிலும் அரிதாய் சிந்தப்படும் என் புன்னகைகளும் எத்திசை மாறிப்போனதோ தெரியாது? இனிமையான காதற்பாடல் அனைத்தும் கண் கலங்கச் செய்தன. காதலைப் பற்றி வெறும் உதிரிப்பூக்கள் என்று எண்ணியபின் காதலிக்குரிய நேசத்தைச் சுரந்துவிடும் நான் போன்ற ஒருவனை பெறும் பேறு நான் விரும்பும் காதலிக்கு கிடைக்காமல் போவதுதான் என் வாழ்வின் அழியாத்துயர் என்னவோ தெரியாது.

அவள் வருவாளா? என்ற சந்தேகங்களுடன் இருந்த போதெல்லாம் கண்முன்னே குதித்து நிற்பாள். பிரமித்து போகமாட்டேன். பரபரப்பு தலையை கவிழ்த்துவிடும். அவள் கண்கள் வலது புறமாகச் சாய்ந்து என்னைப் பார்த்துவிடத் துடிக்கும். அவளிடம் நேரடியாகப் பேசினால் குரல் கனத்து அடைத்துவிடுவது மாத்திரமின்றி கண்கள் இருட்டி இடறியும் விழக்கூடும் என்ற போது அவளை நோக்கி எய்யப்பட்ட அம்புகள் அவளின் முகத்தை முறிக்காமல் உறவுக்காரர் ஆவதுதான் மிக வெதும்பல். அவளுக்கும் ஒரு நாள் காதல் வரும். அது என்னுடனாக வராமல் போனால் சோகம்தான். இறுதியில் நானே செய்யவேண்டி ஆயிற்று.

கால்களை வைக்கும்போது தூரிமண் சொளுசொளுப்பு நீரைக் கொப்பளிக்கும். பின் உறிஞ்சிக் கொள்ளும் மாரி காலத்துத் தெருவில் காத்திருந்தேன். சூரியன் கிளம்பி தனது காலையை விட்டு மிகக் கொடூரமாய் வெப்பத்தை எறியலாயிற்று இர்வு மழை பெய்த பொசிவு நிலம் சில காக்காய் பொன்களைத் தள்ளி சிலுப்பத் துவங்கியது. தெருவில் கால் வைத்ததும் வாஸ்தவமான எதிர்கொள்ளலை உண்டு பண்ணக்கூடிய வீட்டு வாசலொன்றை ஏற்பாடு செய்துவிட்டு கிலி கலந்த ஆவலுடன் தெருவில் வேவு பார்த்து உலாவலானேன். வீட்டின் வாசலில் நின்ற மாமரம் உதிர்த்திய சருகுக்குள் முன்னரென்றால் சில குருத்து இலையும்,



RangaRakes tamilnavarasam.com

வாற்பக்கம் கருக்கிச் சுருட்டிக் கிடக்கும். அணில் ஊம்பிய மாம்பழத்தின் கொட்டையும், பாதிச் செட்டையும் கடியன்களுக்கிடையில் கிடக்கும். அதுவல்லாமல் கடியனும் இல்லை. அணிலும் இல்லை. உயிர் நடமாட்டம் பல நூற்றாண்டு கண்டிராத வறட்சி மணம்.

கைகளோ எனது பையினுள் அழகிய நான்கு மூலையுள்ளதாய் மடித்த காகிதத்தை தொட்டுப் பார்க்க அஞ்சி ஒஞ்சிற்று.

இதுவரை பேசத் தயங்கும் அவள் சரிந்து போகாத பற்றுள்ள வார்த்தைகளை எதிர்பார்த்து எனது ஒவ்வொரு உரோமக்கண்ணும் சிலிர்த்து மன்றாடின.

அவள் வருகிறாள், பனிக்கிராமத்து ஆற்றுப் படுகையில் கரைந்து நிற்கும் வெண்பனியாக. கடிதத்தை கையிலெடுத்தேன். வாசலில் நின்றும் தெருவிற்கு வந்தேன். காற்றெல்லாம் ஏதோ சூனியம். தெருவெல்லாம் நிர்வாணமாய் போனது போன்ற புல்லரிப்பு. நிசப்த இசையில் மோகமணியின் சுடர் காதுகளில் பதுங்கியது. அவளின் கைகளோ அமளி துமளிப்பட்டு கடிதத்தை வாங்க உயராமல் என்னைத் தாண்டியபோது அவளின் முகத்தில் அழுத்தமான எதுவுமே இல்லை. இன்னும் இரு தனிமை வாசங்களா?

மிதமிஞ்சிய ஆற்றாமைப் புன்னகை ஒன்றுடன் கடிதத்தை கந்தலாக்கி விட்டேன். மனம் பேயின் கொம்பில் கொழுவிப் போயிற்று, வெறுமை வெளியில் ஒற்றை முள்ளாக நின்ற என்னில், மன்மதன் என்ற சாத்தான் வந்து வீழ்ந்து இருக்கின்றான். கடைசி நிமிசங்களின் போது "போதும் இது பற்றிய புரிதல் இதனோடு" என்றான்.

அந்த நாள், அஸ்தமனத்தின் விளிம்புப் பொழுது. பம்பரம் தளர்ந்த நான் ஊஞ்சலாடுகின்றேன். ஏதோ மெல்லிய ராகம் சுகந்தம் பரப்புகிறது. என் நண்பன் வழி காட்டியாக அவளின் பெரியப்பா என் வீட்டே வந்தார். அவரைக் கண்டதும் உச்சியில் அறைந்த ஆணி பாதங்களூடாக பாய்ந்தது. இதயம் நழுவி ஜடம் சிதிலம் சிதிலங்களாக பெயர்ந்து விழ அரூபமானேன்.

" என் மகள்" என்று ஆரம்பித்தார். " இந்த வயதில் கலியாணம் தேவைப்படுகிறது" என்றபோது உச்சி முதல் உள்ளங்கால் வரை எச்சி உமிழ்ந்தாற்போலிருந்தது. ஏதோ தெரியாது வீட்டில் அனைவரும் மௌனமாகினர். மௌனம் கொடியது அவள் போல்.



புரிதல் என்பது மௌனத்தின் மீள்சுரப்பின் மெலிதான சோகமாய் இழையோடியது. மீண்டும் கண்ணும் ஆத்மாவும் ஒன்றையொன்று தழுவி பிரிட்டு அழலாயின.

அன்றைய நாட்குறிப்பில், " ஊரில் உள்ள மூங்கில் காட்டில் ஒரு கருவேப்பமரம். அதில் ஒரு பூங்குருவி, வண்ணாத்தி பூச்சியொன்று பூங்குருவியை அண்டி அழகூட்டிப் பறந்தது. அருகே நின்று முருங்கை மரமும் பூங்குருவியை செண்பகம் என்று நினைத்து தன் புள்ளியிலைச் சிறகால் தடவிக் கொண்டது. ஏனோ பூங்குருவி சிணுங்கி இல்லை கர்ஜித்து தனது மஞ்சள் கால் நகத்தால் பிறாண்டி விட்டது.

1999 ஒகஸ்ட்



RangaRakes tamilnavarasam.com

# சூதாட்டியின் எதிரணியின் சிரம் பணிதல்

முத்தமிட்டுப் பிரியும் போர் வீரனின் காதலியின் துயரமும், புகையிரதத்தில் புறப்பட்ட காதலனின் மலர்ச் செண்டை வாங்க முடியாமல் போன காதலியினைக் கொண்டதுமான புகைப்படங்கள் இருந்த, மிகப் பிரகாசமான இரண்டு வாடகை வீடுகளை இழந்ததற்கான சோகம் வியாபித்ததை விடவும் இலகுவானதோ ''உயர் வளர்ச்சி பெற்ற ஞானிகளின் தனிவகை ஆற்றல் நிலையம்'' சோடை போனது? வாடகை வீடுகளை இழந்த சோகங்களை மேலாடிவிட்ட சோகங்களை உடையதான பச்சைக்கண் பூனையை இழந்த சோகம் பற்றி உபைத் காக்காவைத் தவிர வேறு யாரும் அறிய மாட்டார்கள்.

நலிந்த பாதங்களையும், அழுக்குப் பிடித்த மூக்கையும் உடைய பச்சைக்கண் பூனை உபைத் காக்கா இல்லாத போது அந்த வீட்டை விட்டு போகாததுதான் ஆச்சரியம். நான் சாப்பிட்டுவிட்டு வரும்போது அதற்கேதாவது கொண்டுவர நினைத்தாலும் சொற்பமாகப் பூனைக்கு என்று கேட்பதிலுள்ள சங்கடம் காரணமாய் எடுத்து வருவதில்லை. செப்டம்பரில் ஊருக்கு வந்தவர் மிக அரிதாகவே ஊரை விட்டு செல்லும் வாய்ப்பு இருந்தது உபைத் காக்காவுக்கு. அப்போதெல்லாம் பச்சைக் கண் பூனையின் எக்கல் விழுந்த விலா எலும்புகள் மூடப்பட்டு தாடைகள் விரியப்பட்டு தாவி மரத்தில் ஏறுவதற்கு தொந்தியும் சிரமப்பட வைத்துக் கொண்டது.

நான் இனி யாருக்கும் அச்சம் கவிவதை பற்றி எழுதப் போவதில்லை என்றிருந்தபோதே அச்சப்படுத்தக்கூடிய தனது பச்சைக் கண்களையும், கரிய உரோம மேனியையும் சுமந்து வந்தது. அதன் பின்னங்கால்கள் சோர்ந்திராத போதும் அதன் முன்னங்கால்களை நகர்த்த சோம்பல்பட்டுக் கொண்டிருந்தது. தனித்திருக்கும் போது கேடிப் பெண்ணைப் போல் அல்லது வசீகரமிக்க ஆணின் பார்வை போல் எனது கண்களைப் பார்த்துக் கொள்ளும்.

சருகு நீந்திவிழும் மதியம் புறப்படும் போது அதன் ஏக்கமும் மெல்லெனப் பனிஇருக்கும் காலைவரும்போது அதன் மகிழ்ச்சி பற்றியும் மெதுவாக பேச ஆரம்பித்தார் உபைத் காக்கா.



பூக்களைக் கம்புகளால் உடைத்தெறியும் சிறுவர்களை விரட்டும் பக்கத்து வீட்டு பையனின் அமைதியான சூழல் அந்தப் பூனையை விளையாட நாடியபோதெல்லாம் பச்சைக்கண் பூனை மிக எளிதாகவே உதாசீனம் செய்தது.

ஆனால் அது மெலிந்து போகும் காலம் அடுத்த வருடம் மார்ச் மாதம் ஆரம்பமானது. பொருளீட்டம் காரணமாகவும் தனி அலகு கேட்போரின் குதிகால்களை வரிசைப்படுத்துவோரின் தோள்களை இணைப்பதற்காகவும், நூற்றாண்டுகளுக்கு முன் ஊரிலிருந்த மரவள்ளிச் சேனைகளையும் வெள்ளை மணல் தெருக்களையும் அதில் குந்தியிருந்து அளவளாவும் மனிதர்களை பேசக்கூடிய கலை நண்பனைத் தேடியும், தனது சமூகத்தில் வாழ்க்கை முறை பற்றி உள்வாங்கிய இதயத்திலிருந்து பிரச்சினைகளை முன் வைக்கின்றதன் மூலம் இன்னோர் இதயத்தை அதிரச் செய்பவர். பிரபஞ்ச ஞானமும் அனுபங்களும் வாழ்வின் சீர்மையில் பீறிட்டு வழிகிறவர். வாழ்க்கைக்கும் கொள்கைக்குமிடையிலான போராட்டத்தில் வெற்றியீட்டிட பலரின் உழைப்பிற்குப் பின்னாலுள்ள பலதரப்பட்ட தீட்சண்யங்களை சகல சிறப்புகளுடன் அணிவகுத்து, மரணம் சூழ்ந்த வாழ்வின் உணர்வுகள் சாகடிக்கப்படாமல் உரிமைகளுக்காக நகர்ந்து கொண்டிருக்கும் தலைவனைத் தேடிப் புறப்பட்டதால் பூனை உணவுக்கு சிரமப்பட்டது. சோம்பியிருந்து, உணவு தேடாமல் மெலிந்தே போயிற்று. பக்கத்து வீட்டுச் சிறுவன் சற்று அன்னமிடக் கூடியவனாக இருந்த போதும், ஈன இரக்கமற்ற தூசிப் புழுதி படிந்த கணித மூளையை உடைய அவன் தந்தை அதற்கு விட்டதில்லை. தந்தைக்குத் தெரியாமல் சிறுவன் அன்னமிட்டுக் கொண்டிருந்த ஒரு வெள்ளிக்கிழமை மதியம்

'' காற்றில் கரையப் பாடுகிறேன்
உயிர் அலையையும் தாண்டி
பற்றுக்கள் கைவிரிக்கும்
பாசங்கள் ஏமாற்றும்
புதையுண்ட இவ்வாழ்வில்
காற்றில் கரையப் பாடுகிறேன்
உயிர் அலையையும் தாண்டி
என் உள்ளும் வெளியும்
ஒளிரும் நேர்வைத் தேடி
காற்றின் ஓரம்
அருளோ ஞானத்தில் பாதி
பல்திசை ஓர் கூர்மை
நோக்கிச் செல்லல் மீதிக்குப் போதும்''



RangaRakes tamilnavarasam.com

என்று மோட்சம் பற்றி பாடிப் புலம்பியபடி வந்த தடித்த புருவங்களை உடைய மூதாட்டி, பூனையைக் கண்டதும் அதிர்ந்து போனாள். " காதகப் பார்வை உடைய உயிர்கள் பற்றி அறிந்த பின்னும் இக்கருவுடலை விட்டு வைத்ததும், பல்லனின் சூழ்ச்சியின் ஞானி என்று சிக்குண்டு கிடப்பதும் குற்றம்" என்றாள். மீண்டும் பூனையின் பச்சைக்கண்களைப் பார்த்துக் கொண்டு என் கைரேகையை வருடிக்கொண்டு சிறிது தொலைவில் பனிமூட்டத்தில் பிரகாசிக்கும் வாழ்வு பற்றி ஆரூடம் பாடினாள். புறப்பட்டாள். அத்தர்வாடையும், துர்நாற்றமும் கலந்த அவள் மேனி இருந்த இடைவெளி அவள் நினைவுகளை இதழ் விரித்தது. பூனையின் பச்சைக் கண் பார்வைகளோ ஆத்மாவில் அவளுக்கிருக்கும் இடைவெளிகளை திரும்பத் திரும்ப வெளிப்படுத்தியது.

புறப்படுவதற்கான தருணம் வருவது பற்றி நாமறிவதற்கு முன்னே பூனை புறப்பட்டது பற்றி உபைத் காக்கா மிக வருத்தம் தோய்ந்த தொனியில்,

" உன்
மெல்லிய சீரான காலடி ஓசைகள்
ஞாபங்களை அதிரச் செய்கிறது
அப்பாவித் தனத்தோடு விடப்பட்ட
அவ்விடைவெளிகள்
மௌனத்தைச் சிதைக்கும்
அன்பைத் தட்டியெழுப்பும்"
என்று கூறினார்.

மின் கம்பத்தில் சலசலத்து வடியும் நீரோட்டம் உள்ள ஒரு பகுதி மாத்திரமே எங்கிருந்தோ வந்த வெளிச்சத்தில் ஜன்னலூடே தெரியும். அவ்விரவில், வீட்டிலிருந்த சாமான்களெல்லாம் மூட்டை கட்டி அனுப்பப்பட்டது. கட்டில் - இருந்த உள்வீட்டு மூலையைப் பார்த்ததும் தேனீர்ச் சாலையிலிருந்து உறக்கத்தில் கேட்கும் மிக அதிகாலை இஸ்லாமிய கீதம் வாழ்வில் தொலைந்து போன ஒரு நிகழ்வானது.

எஞ்சிய காகிதங்களை விரித்தமர்ந்து ஊர் பஜனைப் பாடல்களுக்கு சிறந்த மெட்டுப் பாடல்கள் எவையென்று அலசிப் பாடிக் கொண்டிருந்தார்கள். பாடலில்



நிறுத்தம் ஒன்றில் கொதிபிடித்த தோழர் "இந்த இடம் எழுதப்பட வேண்டியது" என்று சொல்லி தனது நரை தெளித்த நெற்றி மயிரை கோதிக் கொண்டார். மூதாட்டியின் பல்லன் சொண்டை நீட்டி ஆமோதித்துக் கொண்டார்.

நான் பூனை பற்றி யாருமே எழுதப் போவதில்லை என்று துடிதுடித்துப் போனேன். எழும்பியபோது நான் உட்கார்ந்திருந்த காகிதம் ஒதுங்கிய மூலையில் ஒரு கரித்துண்டைக் கண்டேன். எரியும் விழிகளில் நடுங்கும் ஆழத்தில் பூனையில் இடை சரியும் முகநடனவெளியில் காற்றில் பூத்த சொற்களை மெல்லிய பிரகாசத்தில் வீட்டின் பின் சுவரில் கரித்துண்டால் எழுதலானேன்.

நான் பிரிவதற்கு முன்னாலே
நீ பிரிந்தது
குரூரமான மகிழ்ச்சியை உண்டாக்கிற்று.

இரண்டு மௌனங்களுக்கிடையில்
சிறிது புழுதி இருந்தாலும்
முகத்தை அழுத்திக் கொள்ளலாம் போலில்லையா?
தொடர்ந்திருந்தோம்
எல்லாமெதற்காக... ?
எதற்காக உன்னை பழி சொல்ல வேண்டும்... ?

உள்ளுக்குள் பூத்துக்குலுங்கி கிடந்ததெல்லாம்
நான்தானே...

நிலவில் துவட்டிய
பனியின் வாசமிகு
தொனியில் கேட்கிறேன்
.......எல்லாவற்றிற்கும் காரணம்
நான்தானே?

எட்டாத வரிகளை மனசால் போட்டு நிரப்பும் காற்றில் கலந்து வந்த இனிக்கும் மெட்டின் லயமாகவேனும் அதன் முள்முனை விழிச்சிறகு பற்றி சில உயிரோட்டமான வரிகளை கூரிய துளிகளாய் பதித்துச் செல்வது மழை கழுவிய அந்த ஈரச்சுவரில் இனிமையானது.

1999 மே ,



# புட்டம்பை

உபதலைப்பு: ஈரநில காதல் மருள் நீங்கக் கோரல்

"தாராக்கள் தருவதாக புஹாரிமாமி ஏமாற்றவில்லை. நீ ஹலால் சொல்லி விடு"

தாராக்கள் தருவதாகச் சொல்லி முத்தங்களைச் சுவீகரித்து கொஞ்சி விட்டுப்போன மாமி, களிமண் கூட்டில் அடைத்த தாராக் குஞ்சுகள் அவள் வராமலே மண்ணோடு மண்ணாகியது.

ஷவியா சொன்னது பொய்தான். மூன்றண்டு மாமி கௌஸாக வந்திருந்தால் என் தாராக் கடனை அடைத்திருப்பாள். மாமி வராமலே போனதால் விடுதலைக் காதல் சுரந்தது.

மாமியின் தொடைத்தசையில் மண் தட்டுவதற்கு சில நிமிடங்களுக்கு முன்பாக, சாமத்திற்கு சில கணங்கள் பிந்தி, அசோக்கு மரக்கட்டையை நாட்டி அபுல்ஹஸன் கோச்சுப்பெட்டிக் கிராமத்தை ஆரம்பித்து வைத்தான். அது புட்டம்பை கிராமம் என்றழைக்கப்பட்ட போதும் அது சில வாரங்களில் கோச்சுப்பெட்டிக் கிராமமாக மாற்றப் பட்டது.

செல்லமாக நாய் என்று அழைக்கப்பட்ட தலைவனிடம், அபுல்ஹஸன் தலைவர் மற்ற அனைவரும் கைது செய்யப்பட்ட செய்தி வேட்டையாடிக் கொண்டிருந்த வேளை சொல்லப்பட்டபோது, 'ஏன் அவசரப்பட்டு வந்தாய்' என்று தலைவன் கறுவிக்கொண்டான். அந்தக் கணங்களில் அபுல்ஹஸன் தான் நீட்டி வைத்திருந்த கிராமத்துண்டின் தேவையை விளக்க நினைத்தான். பின் "உனக்கெதுவுமே விளங்காது" என்று கிராமத்துத் தலைவன் சொல்லக் கூடும் என்பதால் விட்டு விட்டான்.

அதன் பின்னர்தான் பிடரியில் இருந்து இடுப்பில் இருக்கும் மரினாவாரின் அரைவாசி வரை வில்லுக்கத்தியால் முதுகு பிளக்கப்பட்ட மூத்தப்பாவிடம் சொல்ல அபுல் சென்ற போது, புஹாரிமாமி பற்றிய வதந்தியை பரப்பியமைக்காக ஷவியாவிற்கு



RangaRakes
tamilnavarasam.com

தொடையில் சூடு போடப்பட்டுக் கொண்டிருந்தது, பாலாவின் ஆட்களை முந்தியதால் புட்டம்பை கோச்சுப்பெட்டிக் கிராமமாக ஆனது. ஆனாலும் அனைவரும் வியந்து கொண்ட விடயம் புட்டம்பையின் எல்லை அபுலுக்கு எப்படித் தெரியும் என்பது.

மென்கோது விளாம்பழத்தின் புது வாசனை பெருகிய சாமத்தில் புஹாரி மாமி இறால்களை விரும்பி உண்ணும், பறக்கும் நாய்களை வசியம் செய்யும் ‘இஷ் முகளை’ மூத்தப்பாவிற்கு விரித்துக் காட்டியபோது மூத்தப்பா தோணிக்கொல்லாவின் முகப்பிலிருந்து கடலுக்கும் கோணாவத்தைக்கும் இடையில் நிலாவில் கம்புச்சுள்ளி பளபளக்கும் இடத்தை புட்டம்பையின் எல்லையாக உத்தேசித்துக் கொண்டார்.

இருந்தும் திட்டவட்டமான வரைபடத்தை பெறுவதற்காக ‘பவாஹித்’ கிதாபின் 94ம் பக்கம் இவ்வாறு எழுதப்பட்டிருந்தது. ‘‘படைப்புக்களை படைக்கின்றவனை” எனும் இத்ரீஸ் நாயகனுக்கு தரிபாடாக்கியதை யாராயிலும் ஒருவர், புதன்கிழமை தினம் குளித்து, துப்பரவாகிய புடவை அணிந்து, தனித்த வீட்டில் இருந்து 1551 தரம் ஓதினால் ஏழு ‘ அதுவாஹு ’ வெளியாகும். அதில் பசிந்த உடையணிந்த வீட்டின் மதில்கள் எல்லாம் பிரகாசிக்க ஒருவர் வந்தால், எழுந்து நின்று ஏதும் பேசாமல் தொடர்ந்து ஓதுவான். அப்பால் உன் நாட்டம் என்ன என்று கேட்பார். எப்போதும் எந்த ‘ஹாலி’லும் நீங்கள் எனக்கு உதவி செய்ய வேண்டும் என்று சொல்லும். அப்போது பறவையின் முட்டை போல் பசிந்த கத்துடைய ஓர் கணையாழி கொடுப்பார். அதை வாங்கி இரண்டு கண்ணிலும் ஒத்திக் கொண்டு அப்பால் மரியாதையாக சலாம் சொன்னால் போய்விடுவார். அதன் பின்னர் அதை பச்சை மீன் வயிற்றில் வைத்து ஈரமான பூமியில் இரு கப்றுகளுக்கிடையில் புதைத்த இடத்தில் தீங்கை நாடாத மனதோடு பார்த்தால் வரைபடம் தெரியும்.

மூத்தப்பா சொல்லித்தான் அபுலுக்கு தெளிவான வரைபடம் கிடைத்தது. அபுலின் மகன் புஹாரி மாமியின் தாராக்களை ஹலால் சொல்லாத வரை நிலம் குருதி கசிந்து கொண்டிருக்கும் என்றும், அபுலின் மகன் ஜாமியின் காதலில் சிக்கல் இருக்கும் என்றும் தொங்கல் கதையிலிருந்த ஐதீகத்தை ஜாமி ஒருபோதும் நம்பவில்லை.

கோச்சுப்பெட்டிக் கிராமத்து மண்ணில் முதன் முதல் ரோஜாப்பதியம் விழுந்த ஆறு நாட்களில் பொன்னவரைச்சாந்து பூசி முகத்தை ஆறு நாட்கள் மினுக்கி ஏழாம் நாள் தேன் பூசிய பின் நடந்த எட்டாம் நாள் –



‘‘ உங்களோடு கொஞ்சம் பேசணும் நிற்கமுடியுமா? கொஞ்சம் நிற்க முடியாதா?” என்று ஜாமி கேட்டான்.

சுபைதா எதுவுமே பேசாமல் நடந்தாள். சுபைதாவின் தாயின் சகோதரியின் மகள் வாயோ ஓர் பக்கம் கோணி படபடத்தது. சுபைதாவிற்கு ஒருமுறை திரும்பி ஜாமியின் முகத்தைப் பார்க்க மனம் சொல்லியது. ஆனாலும் அதில் அவள் அவமானம் இருப்பதாக உணர்ந்தாள். திரும்பவில்லை. அவள் வழமையை விடவும் சற்று கூடுதலாகவே உதட்டை பற்களால் கடித்து நீவி விட்டாள். தன் கண்களுக்கு ஜாமியின் சாம்பல் நிற மெல்லிய கோடுகள் இட்ட சட்டையும் கருநீல சாறமும் வழமையை விடவும் சாதாரணமாக உடுத்திருந்த அமைப்பு எல்லாம் வந்து போனது. அவனிடம் இருந்த மௌனம் இவ்வளவு மென்மையாய் உடைபடும் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. இவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தை அவளும் இழப்பதற்கில்லை. அவருக்கு சரியான விளக்கம் சொல்லப் போவதாக வன்மையான தொனியில் ஒரு சாக்குச் சொல்லி சகோதரியை அழைத்துக்கொண்டு விறுவிறுவென நடந்தாள். ஜாமிக்கு எவ்வளவு நம்பிக்கை. அவள் திரும்பி வருவாள் என்று. மெதுமெதுவாக நடையின் வேகத்தை குறைத்துக் கொண்டாள். சிறிது தொலைவில் சகோதரி நின்று கொண்டாள். அந்த மெல்லிய சீரான நடையில் குழறுபடி வருமோ என்று அஞ்சினான். மென்ரோஸ் விரல்களை ஒருமுறை பிசைந்து கொண்டாள். அந்த இரு கண்களும் சந்தித்த இன்பம் பரவசம் பற்றி யாரறிவர்?

‘‘இனி நீங்க எனக்கு பின்னால சுத்த வேணாம்” எப்படி இந்த வார்த்தைகள் வாயிலிருந்து விழுந்தன என்பதை அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை. அதற்காக அவள் துடித்தாள்.

அதிர்ந்து கொண்டிருக்கும் நேரம், எப்படித்தான் சமயோசிதம் வந்ததோ ஜாமிக்கு ‘‘ இதைப் பேச நான் உங்களைக் கூப்பிடல்லையே” என்றான்.

‘‘எங்கிட குடும்பம் அப்படிப்பட்ட குடும்பம் இல்ல எனக்கேலாது”

‘‘நான் பேசுறதக் கேளுங்க... நான் ஊரை உட்டு போகப் போறேன்”

‘‘நான் உங்கட கால்ல உளுந்து கேக்கன். இனி எனக்குப் பின்னால சுத்தாதீங்க”

‘‘ச்சே... இல்ல... இஞ்ச இப்படி எல்லாம் ஏன் கதக்கையல்”



RangaRakes tamilnavarasam.com

‘‘உங்களுக்கு நல்லா இருக்கா? ஏன் இப்படி செய்றயல்’’

‘‘பத்தில்ல இருவது வருஷத்துக்குப் பிறகாவது எப்படி வர என்டுதான் கேக்கன்’’

‘‘என்னை விட ஒரு அழகான புள்ளையைப் பாருங்கோ’’

‘‘நீங்க இப்ப கூட அழகாக இருக்கையல்’’

‘‘ஆ... என்ன... என்ன...’’

‘‘இப்பையும் அழகா இருக்கையல்’’

ஷவியாவின் தொடைச்சதை உருகி வழிந்த இடத்தில் முளைந்த முள் முருக்கை பற்றையை நோக்கி இருவரும் நகர்ந்து நின்றனர். சகோதரியும் சுபைதாவோடு ஒட்டிக் கொண்டாள். சில கணங்களில் நிசப்தம் உடைந்தது.

‘‘என்னப் புடிக்கல்லையா... ?’’

‘‘இது ஒங்களுக்கு அழகா இருக்கா?’’

‘‘ஏன் என்ன புடிக்கல்லையா ? ’’

அப்படி இருக்கையில் சிபாயாவின் குறுக்கீடு காரணமாக இருவரும் விலகிப் போயினர் மனமின்றி.

நடந்த வேதனை படர்ந்த சம்பவத்தைச் சுருட்டி வாப்பாவின் முகத்தில் எறிந்தான் ஜாமி.

அப்போதுதான் அபுல் மகன் தூதுவள்ளலையில் மக்கத்துச்சால்வை பட்டுக் கொண்டது போல் காதல் வயப்பட்டிருப்பதை உணர்ந்தார். ஹலால் சொல்ல வேண்டிய ஐதீகத்தை புட்டம்பையின் கதையிலிருந்து பிரித்துக் கூற, ஹலால் சொல்லும் கோச்சுப் பெட்டிக் கிராமத்தின் நாக மரப்பொந்தையும் காட்டினார். ஜாமி நாகமரப்பொந்தில் ‘‘ஹலால் மாமி’’ என்று கத்தியபோது நாகவிருட்ஷமாக ஊருக்கு வராமலே போன புஹாரி மாமி மாறியிருந்தாள்.

1999 பெப்ரவரி



# எமது பள்ளிப்போர் நாடகத்தின் தளபதி கடலின் குளம்படியோசையில் கலந்து போனான்

நாம் முன்னர் மேசைகளில் தட்டிப்பாடும் ‘சோலை புஷ்பங்களே...’ பாடலை ஒரு இரவுச் சாப்பாட்டுக்குப் பின் சாஹிர் ஹுஸைனுக்காக பாடவேண்டும் போலில்லையா? அவ்வாறு பாடலாமென்று நம்புகின்றீர்களா? அழுது கொண்டே என்னால் பாடமுடிவதில்லை.

பள்ளிச் சிற்றுண்டிச்சாலையில் பொன்னிற தேனீர் அருந்தச் சென்ற ஏமாற்றம் பற்றி அல்லது தென்னோலைகளைப் பிடித்தபடி ‘‘என்னைக் காதலிக்க வேண்டாம்’’ என்று கூறும் காதலியின் பணிவான வேண்டுகோளைப் பற்றி அவன் வந்தால் பேசலாம். மைதானத்தை சுற்றியிருக்கும் தென்னங் கன்றுகளில் ஒன்றின் பூக்கநெட்டியை விரல்களால் அதிரச் செய்தபடி சாஹிர் யாருடனேனும் பேசிக் கொண்டு நிற்கலாம்.

ஒரு மழைக்காலம் வருவதற்கு முன் தேடினால் சுவரோரமாயேனும் அவன் சப்பாத்துத்தடம் பார்க்கக் கிடைக்கும். அச்சுவடும் நம்முள் வேதனைப் பெருமூச்செறிவது போலவே அவனது கவிதைகளும் நம்முள் அனல் தகிக்க வைக்கும். வாழ்வு பதுங்கி இருப்பதாக நினைத்து அவன் புரட்டிய கொப்பித்தாள்களில் எழுதப்பட்ட கவிதைகள் அவனைப்போல் தாமதித்தேனும் சந்திக்கக் கிடைக்கலாம்.

பின்னேரம் ஐந்து மணியளவில் குட்டி ஆலமரத்தின் கீழான புற்றரையில் நம்மில் ஒருவரை பகிடி பண்ணிச் சிரித்து புரையேறும் அவன் சப்தம் காற்றலைகளால்



RangaRakes tamilnavarasam.com

நமது காதுகளில் எழுதப்பட்டிருக்கின்றது. அவன் அதிக நளினமாக நடந்து வருகிறான் என்பதால் கண்களை மூடத் தோன்றுகின்றது. அவன் விழித்திருப்பதைப் போல் பாசாங்கு செய்கிறான். இல்லை அவனுக்கு தூங்கக் கிடைத்த அவகாசம் அவ்வளவுதானா? இப்போதெல்லாம் என்ன செய்கிறான்.?

பிரிவின் கதறல் தட்டில் சாஹிர் முதலாவதாக இருக்கின்றான். இருளின் கூர்மைகளை முறித்து அதன் கண்களில் செருகிவிட்டு அவசர அவசரமாக சவரம் செய்த முகக் காயங்களோடு எங்களோடு சேர வருவான்.

அவன் ஒருநாள் உறங்குவது போல் பாசாங்கு செய்தான்.

('எனது உயிரின் முடிவிற்காக...' சாஹிர் ஹுஸைனின் கவிதை தொகுப்பிற்கு எழுதியது – 1999.08.02)



# செங்க வெள்ளை

நெற்கதிர்கள் பழுக்கத் துவங்கியகாலம். அந்த வயல்களை ஊடறுத்துச் செல்லும் பாதையோரம் அறுகும், இலுக்கும் ஆள் உயர வளர்ந்திருந்தன. வானம் நீலத்தை இழக்கத் துவங்கியது. வானில் துடைக்கப்பட்ட பகுதிகள் மஞ்சளாக இருந்தது. குருவிப்பாட்டம் தூரமாய் தாழ்வதும் உயர்வதுமாயிருந்தது. அது ஒரு போர்வையைப் புரட்டி வீசுவது போலிருந்தது. பாதையில் அருகே இருந்த சின்ன மரங்களிலிருந்து கிளிகள் பறந்தன. மாமரங்களிலிருந்தும் கிளிகள் பறந்தன. 'பொர'யடித் தென்னையில் இருந்து கிளி விழுவதை ஓயாமல் துரத்திக்கொண்டிருந்த வயற்காரன் வாயிலிருந்த கொய்யாவை எடுக்காமலே எங்கள் இருவரையும் கையசைத்து வழியனுப்பி வைத்தான். அந்தச் சின்னக்குடிசைக்குப் பின்னால் எங்கள் மோட்டார் சைக்கிள் வளைந்து சென்ற போது அங்கிருந்து மூன்று கிளிகள் பறந்தன. அதிலொன்று நீளமான பைத்தங்காயை தூக்கிக்கொண்டு தாழப்பறந்து மூங்கில் புதர்ப்பக்கமாய் சென்றது.

வாய்க்காலுக்கு அந்தப்புறமாக தாஜ்தீனின் வீடிருந்தது. வீட்டிற்கு போடப்பட்டிருந்த முழு அத்திவாரத்திலும் மூன்றில் இரு பகுதியே கட்டப்பட்டிருந்த, பூசப்படாத செங்கல்வீடு. வேலிக்குக் கீழால் வெறும் திண்ணையில் படுத்திருந்த தாஜ்தீனின் பாதங்கள் தெரிந்தன. சறாக் ஹோனை அழுத்தியதும் தாஜ்தீன் காலை இழுத்து எழும்பிக்கொண்டு சாரனை உடுத்திய படி வாசலுக்கு வந்தார். "தேத்தண்ணி குடிப்போம் வாங்கோ" என்றதும். தலையை ஆட்டிக்கொண்டு தாஜ்தீன் திரும்பி வீட்டுக்குள் சென்றார். வாய்க்காலில் குளித்துக்கொண்டிருந்த பெண் எங்களைத் திரும்பிப் பார்த்துவிட்டு கைகளை நீட்டித் தேய்த்துக்கொண்டாள். அவள் மேலால் வாய்க்காலைக் கடந்து நாங்கள் நின்ற றோட்டுப்பகுதிக்கு வரும் நீளமான முடக்கு மரம் கிடந்தது. அந்த முடக்கு மரத்தில் நடந்து பழக்கப்பட்ட தட்டையான வழமான பரப்பு உருவாயிருந்தது. தாஜ்தீன் சேட்டை அணிந்து கொண்டே அதன் மேல் நடந்து வந்தார். புளிய மரத்தடிக்கடையில் தேநீர் குடித்தோம். சாப்பிடுவதற்கு எதுவுமே இருக்கவில்லை.

மூன்று பேரும் றோட்டோரப் பசளியின் கீழ் நின்று கொண்டிருந்த போது வந்தவர் சறாக்கிடம் மௌலானாவாப்பாவை சந்திக்க முடியாதது குறித்து



RangaRakes    tamilnavarasam.com

போது நிலம் உயரமாக இருக்கும் என்று நினைத்த போது ஆழமாக இருக்கும். சிலாகித்தார். ''நெஞ்சி நோவுக்கு கஸ்தூரி நல்லமாமே'' என்று சொன்னார். அவர் மானில் இருந்தே கஸ்தூரி கிடைக்குமென்றும். தாஜ்தீன் வேட்டையாடிய மான்களில் இல்லையா என்றும் கேட்டுக்கொண்டார். தாஜ்தீன் அது எல்லா மான்களிலிருந்தும் கிடைப்பதில்லை என்றும் தானும் வாப்பாவும் குறவர்களிடம் வாங்கி வந்ததாகவும் கொட்டைப்பாக்களவு இருக்கும் அதை நீரில் விட்டபோது வேர் இறங்குவது போல் படிந்ததைத்தான் நீண்ட நாட்கள் தொடர்ச்சியாக அருந்தியதாகச் சென்னார். அப்போது ஞாபகம் வரவே "நாங்க தேன்... ஒரிஜினல் தேன் வாங்கந்திருக்கம்" என்றார் தாஜ்தீன்.

''இப்ப அவனுகள் தான் தேன் நல்லாக் காச்சிறானுகளாம்'' என்றார் வந்தவர்.

''வதையிலயிருந்து புளிஞ்சி எடுத்துக்கு வந்தோம் ஒரு போத்தல்''

சறூக் அதற்கு ''முயல் காஞ்செறச்சி இருக்குமே'' என்றார்.

தாஜுதீன் சிரித்துக்கொண்டார். நான் ஒன்றும் பேசவில்லை. முடக்குக் கட்டையைக் கடந்தபோது அந்த பெண் துவைத்து முறுக்கி வைத்த ஆடைகளை எடுத்துக்கொண்டு சென்றாள்.

கற்போறணை எரிந்து கொண்டிருந்தது. அந்த இடத்திற்கு பொருத்தமே இல்லாத கதிரைகள் நான்கை தாஜ்தீன் கொண்டுவந்து போட்டு விட்டுச் சென்று தேன் போத்தலுடன் வந்தார். தேன் என்றால் சிவப்பாயிருக்கும் என்பவர்களுக்கு அது பொய் வர்ணம். அது செம்மஞ்சளாகி இருந்தது. தேனின் வர்ணம் பூக்களைக் கொண்டும் மாறுபடும். தேனை இரண்டு கிளாசில் ஊற்றி சறூக்கிடம் முதலில் கொடுத்தார். அவர் என்னிடம் தந்தார். இரண்டு பேருடைய கைக்கும் தேன் வந்ததும் குடிக்கத் துவங்கினோம். தாஜ்தீன் போத்தலின் வாயில் மூக்கை வைத்து முகர்ந்து பார்த்துவிட்டுச் சிரித்தார். அவர் போத்தலோடு உயர்த்திக்குடிக்க நினைக்கிறார் என்றபோது வந்திருந்த குழந்தையின் நாவை நீட்டச்சொல்லி சில சொட்டுகளை ஊற்றினார்.

எங்களைப் பார்த்து ''எப்பிடி தொண்டையில வெளங்குமே'' என்றார். சறூக் தலையை அசைத்துக்கொண்டு என்னைப் பார்த்து "இனிப்ப எனக்கி வேகமா குடிக்கேலா''

அது கிளாசிலிருந்து வேகமாய் வரவில்லை கடைசியில். நன்கு உயர்த்தியே குடித்த போதும் கிளாசின் கண்ணாடிச் சுவர் கனத்தில் அதுவும் ஒட்டியிருந்தது.



நாய்க்கு தேன் ஊற்றி வைத்து அழைத்தபோது வேகமாய் நாய் வந்து நாவை நீட்டி தடவியது. அது வேகமாய் திரும்பிச் சென்றது. தாஜ்தினுக்கு தனது தேனின் மகத்துவத்தில் உச்சி குளிர்ந்தது. "எப்பிடி சேர் தேன்" என்று சத்தமாய்க் கேட்டார் சறூக்கைப் பார்த்து. நாயை "உஞ்சு உஞ்சு" என்று அழைத்தார். அது பின் வரவேயில்லை.

அது முன் இருள் காலம், இருட்டிக் கொண்டது. தாஜ்தீன் கற்போறணைக்கு உமி போட்டுவிட்டால் இனி காட்டுக்குள் புகுந்து விடலாம்.

கடையில் இன்னும் சில 'பெற்றரி'களையும் வாங்கிக்கொள்ள சென்ற தாஜ்தீனிடம் "சாப்பிடுவதற்கு என்னையாவது வாங்கேலுமா? "என்றேன். சறூக் "ஒன்றுமில்லை, பிஸ்கட்டாவது வாங்குங்கோ" என்றார்.

தாஜ்தினின் மோட்டார் சைக்கிளில் நான் தனியே பின்னால் செல்ல, சறூக்கின் மோட்டார் சைக்களில் தாஜ்தீன் பின்னால் இருந்து கொண்டு மடியில் 'சொட்கண்'ணை முறித்து தோட்டாவை என்னேரமும் போடுவதற்கு ஏதுவாய் வைத்துக்கொண்டார். தரிசு நிலங்கள் வழியாய்ப் போய் காட்டில் மண் திட்டிகள் இரு பக்கமும் உயர்ந்திருக்கும் பள்ளத்தாக்கு காட்டு வழியால் வேகமாய்ப் புறப்பட்டோம். இமைகளில் மரங்களின் கம்புகள் தொட்டன. முன் சென்ற மோட்டார் சைக்கிள் புழுதி, பின்சென்றதன் வெளிச்சத்தில் மேலெழுந்து சுழன்றது. இதற்கு முன் பகலில் வராவிட்டால் நகரவே முடியாத திடீர் திருப்பங்கள். வழியில் துருத்திக்கொண்டிருக்கும் பாறைகள், நீரடித்த மண் மேடுகள், கூழாங் கற்தரைகள் எல்லாவற்றையும் கடந்து காட்டின் அடர்ந்த பகுதியான மலையடிக் குளத்திற்கு அருகில் உள்ள ஒரு புதரில் பைசிக்கிளை வைத்துவிட்டு தாஜ்தீன் தனது 'டோச் லைட்டை' தலையில் 'டீயுப்'பால் கட்டிக்கொண்டார். அந்த வெளிச்சத்தில் மானின் கண்களோ முயலின் கண்களோ தெரியும் என நடக்கத் துவங்கினோம்.

'டோச்' வெளிச்சத்தைப்பார்த்துக்கொண்டு நடந்து போகும்போது இருள் பழகிப்போனது. இருளின் வர்ணங்களை கண் தேடத்துவங்கியது. நட்சத்திரங்கள் மிக ஐதாகவே காணப்பட்டன. புதர்கள் கறுப்பு மண்டி இருந்தன. புதர்களுக்கு மேல் வானம் கறுப்பு இல்லைதான். ஆனால் அது இருளின் சௌஜன்யத்துக்கு ஒரு குறையுமே இல்லை. அதில் இருட்டின் முரட்டு சுபாவம் கவிந்திருந்தது.

முயலுக்குக் கேட்காத படி மூவரும் நடக்க வேண்டும். எவ்வளவு கவனமாக நடந்தாலும் சத்தம் வராமலில்லை. காலிலே கோரை சிக்கிக்கொள்ளும் படி வளர்ந்திருந்தது. புள்ளி புள்ளி இலைகளின் ஸ்பரிசம். கால்களை வைக்கும்



RangaRakes
tamilnavarasam.com

போது நிலம் உயரமாக இருக்கும் என்று நினைத்த போது தாழ்வாக இருக்கும். தாழ்வாக என்று நினைத்த போது நிலம் உயரமாகவும். தாழமாகவோ உயரமாகவோ எதிர்பார்த்த போது சமதரையாகவும் நீள நேரம் நடந்தபின் 'டோச்' வெளிச்சம் குளத்தின் ஒரு பக்கம் தட்டிவிட்டு மீண்டும் காட்டின் பக்கம் திரும்பிக் கொண்டது. தாஜ்தீன் கால்கள் தண்ணீரில் பட்டு சப்தம் செய்தது. நான் தண்ணீர படாதவாறு விலகி நடந்து கொண்டேன் பின்னால் வந்த சறூக்கின் கால்கள் உரமாய் தண்ணீரில் வைக்கப்பட்ட சப்தம் கேட்டது.

இப்போது காட்டின் கொய்யா இலை அளவுள்ள மரங்களின் அருகால் இலேசான ஈரமுள்ள தரையில் நடந்து கொண்டிருந்தோம். நான் நின்றேன். தாஜ்தீன் குளத்தில் நின்ற மரத்தைச் சுற்றிப்போக அழைத்த போது காலை வைத்தேன் சில்லென்று இருந்தது. அதன் சதுப்புத்தன்மையின் அருவருப்பு இன்னும் என்னவோ செய்தது. குளத்தின் மறுபக்கமாய் 'பிரித் ஓதும்' சத்தம் மிக மெல்லிதாய் இரண்டொரு முறை கேட்டது. திரும்பிப் பார்த்த போது சறூக் தனது சேட்டைக்கழட்டி தலையைக் கட்டியிருந்தார். மரத்தைச் சுற்றி கரையில் ஏறிய பின் ஏதோ நீரில் நடைச்சத்தத்துடன் நெருங்குவது போல் கேட்டது. தாஜ்தீன் கீச்சுக்குரலில் ''மொதள மொதள'' என்று விட்டு வெளிச்சத்தை விட்டுத் துளாவினார்.

''இஞ்ச நீளத்தப்பாருங்கோ''

''கண்ணா அது'' மினுமினுப்பான ஒன்றைப் பார்த்து சறூக்கேட்டார். நானும் அதைத்தான் கண்டேன். எனக்கு முதலை உருவம் போலோ அல்லது மரக்கட்டைபோலோ தெரியவில்லை. ''கிட்டப்போவோமா'' தாஜ்தீன் கேட்டார். ''சுடுவோமா? சுடுங்காப்போம்'' என்றார் சறூக். ''இல்ல போவோம்'' என்ற படி தாஜ்தீன் பின்னால் காலை வைத்து திரும்பி முன்னே நடந்தார்.

சிறு தூரம் போனதும் நின்று திரும்பிய வெளிச்சம் செருப்பில் நின்றது. "அதையும் எடுத்துக்கு, உங்கட செருப்பையும் கழட்டுங்கோ" என்றார். செருப்பைக் கழட்டிக் கொண்டு குனிந்தபடி சருகுகள் மீது கால்வைத்து நடந்தோம். சறூக்கின் நிழலுருவம் ஏதோ கம்பில் சிக்கி திணறியபடி வந்தது. எவ்வளவு கூர்மை. எவ்வளவு நீண்ட அவதானம். ஏதோ சின்னப்பறவை பறந்தது.

ஒவ்வொருவராக முதுகை நிமிர்த்திக் கொண்டோம். புற்கருகியிருந்த தரையில் நடந்துகொண்டிருந்தோம். பின்னால் வந்த சறூக் ''செருப்பைப் போடல்லையா?''



என்ற பிறகுதான் நான் செருப்பைப் போட்டுக்கொண்டேன். இன்னும் தூரம் நடந்த பிறகு தனிக்காய்ந்த முள்ளுமிலாறுகள். எவ்வளவு அடர்த்தியாக முட்புதர்கள். முட்காடு சற்று நிதானம் தவறினால் கண்ணில் இருக்கும். இல்லையென்றாலும் கன்னத்தைக் கீறிவிடும். தாகம் எடுக்கத்துவங்கியிருந்தது. இதோ முடிந்து விடும் போல்தான் இருக்கிறது. ஆனால் முடிவதாய்க் காணவில்லை. பெரிய பிடிவாதமும் முயலைக்காணாமல் திரும்புவதில்லை என்ற மனோநிலையும் தாஜ்தீனை தொடர வைத்தது. என்னால் இவ்வளவு சகிப்புணர்வுடன் தேட முடியாது. ஆனாலும் அவர்களை விட்டு விட்டு காட்டில் எங்கே தனித்து நிற்பது.

அப்போது இன்னும் அடர்ந்த காட்டின் நுழைவாயிலுக்குப் போய்ச்சேர்ந்திருந்தோம். அதிலிருந்து சிறிது தூரம் போன பின் ''பாம்பு'' என்று சத்தம் கேட்டது. அப்போதுதான் பார்த்தேன். மலைப்பாம்பு ''வெங்களாத்தியா'' என்ற படி சறூக் தாஜ்தீனிடம் கம்பைக் கொடுத்தார். தாஜ்தீன் வாங்கி எட்டி ஒரு அடிஅடித்தார். சற்று முன்னே வந்தது. சறூக் கம்பை வாங்கி அடித்தார் படவில்லை. ஆனால் பின்னால் வேகமாக நகர்ந்த பின்புதான். அதைத் தெளிவாகப் பார்த்தேன். அது சாதாரணமான ஒருவரின் தொடையளவு இருக்கும். வேகமாக மரத்தில் ஏறிக்கொண்டிருக்கும் ஒரு பகுதி மாத்திரம் தெரிந்தது. அதன் நீளம் எவ்வளவு போட்டுக்கொள்ளலாமோ அவ்வளவுக்குப் போடலாம். திரும்பி விடுவார்கள் என்று நினைத்தேன். தொடர்ந்து நடந்தார்கள். ஒரு குட்டிப்பாம்பு சங்குவழலையாம் சறூக் சொன்னார் ''சா... என்ன கலர். சின்னப்படம் எடுக்குதே நல்ல பாம்புக்குட்டியா'' அதை அடித்து நசுக்கி எறிந்து விட்டு இன்னும் நடந்தபோது வழியில் குறுக்கு மரம் சரிந்து வழியை அடைத்திருந்தது. தாஜ்தீன் ''வெங்களாத்தியக் கண்டொன்ன கிறுகுவோம் என்டு நெனச்சன்'' திரும்பி வந்து இன்னொரு வழியால் நடந்தோம். வெட்டைவெளிதான் இனி நடக்கமுடியவில்லை. இருந்து, பிஸ்கெட்டைச் சாப்பிட்டோம். வறண்ட தொண்டையில் உரசியபடி இறங்கியது. அந்த நிலத்தில் அமர்ந்திருப்பது முள்ளிலிருப்பது போல். இடுப்புத் தெறித்தது. மீண்டும் ஒரு சுற்று ஆரம்பித்தது. ஒரு பகுதிக்குப் போனதும் இரண்டு பேரையும் நிற்கச் சொல்லிவிட்டு தாஜ்தீன் போன போது நான் கருகிய அந்தப்புற்தரையில் படுத்து விட்டேன்.

சறூக் ''என்ன உயிர் பெய்த்தா?'' என்றார்.
''வாப்பா போதும் போவோம்''
''தாஜ்தீன் வந்தா போறான்''
''கண்ணில தேன் மறு இருந்தா அதிர்ஷ்டமாம் மொதல்ல அத இல்லத்



RangaRakes tamilnavarasam.com

தாக்கனும். இந்தப்பெரிய காட்டுல ஒரு முயல்கூட அம்புடலென்டா பாருங்களன்"

தாஜ்தீன் களைத்திருந்தார். மனம் விட்டுப்போகாமல் பேசினார். "இவனுகள்ள புள்ளையல் காட்டக்கலக்கிக் கலக்கி எல்லாம் கள்ளப்பட்டுப் பெய்த்து"

திடீரென்று வெளிச்சத்தைத் திருப்பினார் தாஜ்தீன். அப்போதுதான் தெரிந்தது. எமக்கு அருகில் இருந்த புதரில்தான் மோட்டார் சைக்கிள் இருந்தது. தாஜ்தீன் வீடு வந்து சேரும்வரை நம்பினார் வழியிலாவது ஏதேனும் படும் என்று படவேயில்லை. இரவுச்சாப்பாடு முட்டையும், போஞ்சும், டின்மீனோடும்.

இரவைய அலைச்சலில் அசதியை முடித்துக் கொண்டு பாயில் எழுந்திருப்பது கஷ்டமாக இருந்தது. தாஜ்தீன் எல்லோரையும் எழுப்பிவிட்டார். இப்போதே புறப்பட்டால் வயல்கோழிச்சாவல் சுடலாம் என்பதனால் வேகமாய் கைகால்களைக் கழுவிக்கொண்டு தேநீர் ஏதானும் அருந்தாமல் புறப்பட்டு விட்டோம். ரகசியமாய்க் கிடந்த காடு மலர்ந்து கிடந்த போதும் ஒன்றும் கண்ணில் படவில்லை என்றிருந்த நேரம் தாஜ்தீன் கையால் என்னையும் நிறுத்தச் சொல்லிவிட்டு சறூக்கின் மோட்ட சைக்கிளில் இருந்து இறங்கி ஏதோ சப்தத்தின் பால் காதைத் தீட்டிக்கொண்டு மெதுவாய் நடந்தார். ஏதுமில்லை.

குளத்தடிக்கு போனதும் என்னை நிற்கச்சொல்லிவிட்டு போனார்கள். கொன்றைப்பூக்களின் மஞ்சள், குளத்தில் பிரதிபலித்தது. குளத்தின் அலையடித்த இடத்தில் நுரையுடன் சிவப்பு நிறத்தில் இலைகள் தெரிந்தன. அது இலை அவிந்த நிறமாக இருக்கலாம். குளத்தின் கரையில் நின்ற மரத்தின் வேரில் ஏறி தண்ணீரில் காலை நனைத்த போது முதலையின் ஞாபகம் வரவே, திரும்பிய போது அவர்கள் வந்து கொண்டிருந்தார்கள். மீண்டும் மோட்டார் சைக்கிளில் ஏறிக்கொண்டு குளத்தோரமாய்த் தேடிக்கொண்டு போன போது அலுப்பு மேலிட்ட அவநம்பிக்கையுடனான எமது எதிர்கொள்ளலில் இரண்டு நாரையும், மூன்று நான்கு ஆத்து வெள்ளையனும் பறந்தன. அது சுடுவதற்குரிய அண்மையாய் இருக்கவில்லை. குளமுனையின் வளைகரையின் மரத்தில் ஆலா ஒன்று நின்று கொண்டிருந்தது.

தெருவிற்கு வந்து ஆங்காங்கே குட்டைகளிருக்கும் பாதையொன்றில் வந்து கொண்டிருந்த போது எமது சலனத்தில் குட்டையில் நின்ற பல பறவைகள் பறக்கத்துவங்கின. தாஜ்தீன் இறங்கி நடக்கத்துவங்கினார். செங்கவெள்ளப் பறவைகள் போய் அமர்ந்த கிளைகளின் பக்கம் போனதில் தாஜ்தீன் மறைந்து போனார். சில கணங்களில் தாஜ்தீன் "தோட்டாப்பத்தல்ல" என்ற படி திரும்பி வந்தார்.



வேறு தோட்டாக்கள் போட்டுக்கொண்டு இருவருமாய் சிறிது தூரத்தில் உச்சாணிக்கொப்பில் நின்ற செங்கவெள்ளையை சுடப்போனார்கள். நாய் குரைக்கும் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தேன். ஒரு சிங்களவர் கொழுத்த பன்றியை தனது பைசிக்கிள் கெரியலில் வைத்துக் கட்டிக்கொண்டு போனார். அதன் வயிற்றுப்பகுதியில் வெடில்ப் பட்டு இருந்தது. தாஜ்தீன் சறூக் இருவரும் வந்து சொன்னார்கள் "சே இந்த தோக்க நம்பி வந்தோம். அறாம் ஊசடிக்குதில்ல" ஊர் எல்லைக்கு வந்து மீண்டும் ஒரு 'சொட்கண்'ணை எடுத்துக் கொண்டு போனோம். அதுவும் பழைய துவக்குச் சாதியாகவே இருந்தது. அதனால் நம்பிக்கை குறைவாகவே இருந்தது. தாஜ்தீன் துவக்கை யாரோ வாங்கிக் கொண்டு சென்று விட்டார்கள். இல்லை என்றால் யாரிடமும் வாங்கத்தேவையில்லை.

பேசிக்கொண்டே வரும் போது இன்னொரு குட்டையில் நிறையப் பறவைகள் நின்றன. நாரை, செங்கவெள்ளை, ஆத்து வெள்ளையன் என்று. தாஜ்தீன் இறங்கிக் கொண்டார். நாங்கள் தூரப்போய்ப் பார்த்துக் கொண்டிருந்தோம். ஒரு கப்பின் ஊடாக தெரிந்தது தாஜ்தீன் பதுங்குவது. துவக்கைச் சந்தில் வைத்து குறிபார்த்து குதிரையை அழுத்துவதும் தெரிந்தது. ஊசடிக்கும் சத்தம் கேட்டது. வெடில் பற்றவில்லை. இரண்டாவது முறையும் ஊசடிக்கும் சத்தம் கேட்டது பற்றவில்லை. சிறிது தளர்ந்த தாஜ்தீனின் முகம் மீண்டும் இறுகி பள்ளத்தில் இறங்கியது. வெடில் சத்தம் கேட்டது. தொண்டைக்குள் இருந்த கெளித்தி மீனையும் இன்னோரன்ன மீன்களையும் துப்பிக் கொண்டு பறவைகள் பறந்தன. ஒரு பறவை தாழப்பறந்து ஒரு பற்றைப்பக்கம் போனது. அதன் பக்கமிருந்த பார்வை இன்னொரு பக்கம் ஓடமுடியாமல் நின்ற பறவையின் பக்கம் போனது. நான் ஒரு பக்கமாயும் தாஜ்தீன் ஒரு பக்கமாயும் ஓடி பறவையை நெருங்கினோம். என் கையில்தான் கத்தி இருந்தது. உயரமான அந்தப்பறவை தனது நீண்ட அலகுகளால் எங்களைக் கொத்த முயன்றது. நான் விலகி நின்று பார்த்தேன். சறூக் அதனோடு ஒரு பரிதாப உணர்வுடன் எத்தி எத்தி விளையாடினார். தாஜ்தீன் "மத்தது ஒன்டுக்கு வெடில் பட்டுச்சு அது எங்கால உழுந்துச்சு என்று பார்த்தையலா?" என்றார்.

"இல்லையே" என்றேன்.

"அதுவும் சுவறா உழுந்திருக்கும்"

சறூக் ஓடிப்போய் மேட்டில் ஏறிப்பார்த்தார். அங்கிருந்த படி "தாஜ்தீன் உங்களுக்கிட்ட சொல்றலா ரெண்டடிக்கப் பார்க்கப்போட ஒண்டு போதும். அல்லாஹ் பறக்கச் செய்ய மாட்டான்" என்றார்



RangaRakes tamilnavarasam.com

வழியில் பார்த்தபடியே வந்தோம், எந்தப்பறவையையும் காணவில்லை. செங்கவெள்ளையை நான்தான் தூக்கிக் கொண்டு வந்தேன். சுமார் இரண்டு கிலோ பாரம் இருக்கும். இதை இப்போது தாஜ்தீன் அவர்களின் வீட்டில் சமைத்து சாப்பிட்டு விட்டு வீட்டுக்கு பின்னேரமாய் போவதாகத் திட்டம் இருக்கும்.

மோட்டார் சைக்கில் தாஜ்தீன் வீட்டுக்கு முன்னால் நின்றது. சறூக் தாஜ்தீனைப் பார்த்து ''இதைப்போட்டுக் கொண்டு போவதற்கு பேக் ஒன்டு வேணும்'' என்றார். எனக்கு ஒரு மாதிரியாய்ப் போனது. எவ்வளவு கஷ்டப்பட்ட தாஜ்தீனுக்கு இதில் இரணம் இல்லையா? தாஜ்தீன் பறவையை மனைவியிடமும் குழந்தையிடமும் காட்டக் கொண்டு சென்றார். நான் கத்தியைக் கொடுப்பதற்காக பின்னால் போனேன். வாய்க்காலில் சிவப்புப்பாவாடை உடுத்துக் கொண்டு ஒரு பெண் குளித்துக் கொண்டிருந்தாள்.

வரும் வழியில் இலுக்குச்சேனை தேமாத்தடியில் 'அம்பலமோயா' செல்வமீன் ஒன்றை நூறு ரூபாய்க் கொடுத்து வாங்கினார். பெரிய உருப்படி. இரண்டு பிரதான கறிகள் ஒரு விருந்தில் இருக்கக்கூடாது என்று விரும்புவர் மீன் வாங்கியதில் நான் அது பொரியலுக்காக இருக்கும் என்று நினைத்தேன். இன்றைய சறூக் அவர்களின் மதிய போசனத்தில் நானும் விருந்தாளியாக அழைக்கப்படுவேன்.

சறூக் அவர்களின் வாசலில் மோட்டர்சைக்கிள் நின்றதும் மீனை, செங்கவெள்ளப்பறவை வைத்திருந்த பேக்கில் இருந்து எடுக்கச் சொன்னார். நான் பிரித்தெடுத்தேன். செங்கவெள்ளப்பறவையை என்னிடமிருந்து வாங்காமல் மீனை வாங்கிக் கொண்டார்.

''என்ன இது'' என்றேன்.
''ஒங்களுக்குத்தான் கொண்டு போங்க''
''ச்சே வேணாம்''
''என்ன இது சின்னப்புள்ளமாதிரி''
''நான் இதப்போட்டுப்போட்டு போப்பறன்''
''சீ எடுத்துக்குப் போங்களன். சின்னப்புள்ளமாதிரி''

ஒரு முறை இமைகளை அழுத்தமாக வெட்டிக் கொண்டு மெதுவாக செங்கவெள்ளப்பறவையுடன் நகர்ந்தேன்.



# ஆட்கொண்டுவிடுதல் அது

வருத்தம் தவிர என்னுள் இப்போது வேறு எதுவும் எழுவதில்லை. எவ்வளவு வன்மையாக நடந்துகொள்ளமுடியுமான நான் இப்போது எவ்வாறு இப்படிப் போனேன். அந்த மௌலவியின் குரல்வளையை என்னால் நசித்துவிட முடியும். இதைக்கூட ஒரு பேச்சுக்காகவே சொல்ல வேண்டியிருக்கிறது – இதில் ஒன்றும் குரூரம் இல்லவே இல்லை. எனது அறையின் கதவை ஏதோ ஊசாட்டத்தின் பேரில் திறந்தேன். என்னை விட பதினொரு வருடங்கள் இளைய எனது பதினொரு வயதுத் தம்பி அழுது கொண்டிருந்தான். அந்தக் குழந்தையின் மனவுலகில் மிக ஆழமான ஒரு காயம் இன்று நிகழ்ந்து விட்டது. உம்மா புடவையை சரி செய்து கொண்டிருந்தார். அவருக்குத் தெரியும் நான் சண்டைக்கு அனுப்புவதற்குரிய தகுதியை இழந்து கொண்டிருக்கின்றேன் என்று. தம்பியின் முகம் நரகத்தின் வாசலை எட்டிப் பார்த்துக் கொண்டிருப்பவனின் முகத்திற்கு ஈடாக இருந்தது.

நான் இரவுச் சாப்பாட்டுக்கு வரும் போது தம்பி உறங்கிவிட்டிருந்தான். இன்று அந்த மத்ரஸாவின் ஓராண்டு பூர்த்தி விழாவுக்கு தைத்த ஜுப்பாவையும் தலைப்பாகையும் அணிந்து கொண்டு சென்றவன், அந்த மௌலவியைப் பார்க்கும் போது அழுகை வருவதாகச் சொல்லிக் கொண்டு திரும்பி வந்து விட்டான். எல்லாக் குழந்தைகளும் இன்று தெருவில் மகிழ்ச்சியாக இருக்கும் போது இவனை இன்று அந்த மௌலவி வஞ்சித்து விட்டான். தம்பியின் கண்ணீரில் ஒரு துளி ஊழிப் பெருவெள்ளமாக பிரவாகித்து மௌலவியை திணற வைத்தது.

தம்பியை 'சைக்கிள் இருக்கிற வீட்டிற்குப் போய் எடுத்து வா' என்று சொல்லி விட்டு பின்னால் சென்று கொடுப்பை நசித்திருக்கின்றான். தான் எந்த குற்றமும் செய்யாத போது எதற்காக தனது கொடுப்பை நசிக்கின்றான் என்று குழந்தைக்குப் புரியவில்லை. உம்மாவிற்கும் புரியவில்லை. ஒருநொடியில் எனக்குப் புரிந்துபோனது. உம்மாவை இருக்கச் சொல்லிவிட்டு நான் அங்கே போனேன். சைக்கிள் எடுக்கப் போன வீட்டை எது என்று கேட்டேன். ஆட்கள் வேறுயாருமில்லாத அந்த பழைய வீட்டை சொன்னதும் எனது யூகம் சரியென்று நினைத்துக் கொண்டேன்.



RangaRakes
tamilnavarasam.com

நான் போகும் போது விழா மேடை அமைந்திருந்த பள்ளியின் புற வளவுக்கு அப்பால் உள்ள வேலிக்கு மறுபுறம் நின்றிருந்தான். மேடை போடும் சனம் அங்கே கூட்டமாய் நின்று கொண்டிருந்தது. மௌலவியை வருமாறு அழைத்தேன். அவன் முகம் காய்ந்து போயிருந்தது. 'என்ன செஞ்ச' என்று கேட்டேன். வாயில் வெங்காய வாடை வருகிறதா என்று மோர்ந்து பார்த்ததாகச் சொன்னான். அதற்கு நான் எதுவுமே பேசவில்லை. என்னால் எதையுமே பேச முடியவில்லை. ஒருவன் என்கால்களில் மண்டியிட்டுக் கிடக்கும்போது அவன் பிடரியில் நான் ஓங்கிக் குத்தவோ வாளால் வீசவோ வேண்டியதில்லை. நான் திரும்பி வரும்போது மீண்டும் வேறொரு அபத்தமான பொய் சொன்னான். பலூன் வைத்து ஊதினான் அது நாறுகிறதா என்று மோர்ந்து பார்த்ததாக அப்போது கூட திரும்பி அங்கே இருந்த இரும்புக் கம்பியினாலோ, மண்வெட்டியாலோ தாக்குவதற்கு மனம் எனக்குச் சொல்லவே இல்லை.

வீட்ட நான் வந்தபோது, உம்மா என்ன நடந்தது என்று கேட்டார். மிக வன்மையாக சத்தமிட்டு ஏசிக்கொண்டே போனதில் தம்பிக்கு ஏன் அடித்தாய் என்று கேட்க வாய்ப்பில்லாமல் போய்விட்டது, என்று சொன்னேன். மிக ஆத்திரம் வந்து கடுமையாக ஏசிவிட்டு வந்தேன் என்று சொல்லியும் தம்பி திருப்தியடையவில்லை அவன் அழுகையை நிறுத்தவுமில்லை. இப்போது தம்பியிடம் மோசமாக நடந்த மௌலவியை மத்ரஸாவின் பிரதான மௌலவி வந்ததும் முறைப்பாடு செய்யும்படி தம்பி சொன்னான். அப்போதுதான் பார்த்தேன், அது எவ்வளவு கேவலம் என்று. அந்த பிரதான மௌலவி எனக்கு முன்னால் ஒரு பையனின் தொடையைக் கையால் ஓங்கி அடித்து இறுக ஒரு பிடிபிடித்து விட்டு உதட்டைக் கடித்ததை. அந்த தடிமாட்டின் தாடியையும் ஜுப்பாவையும் அவன் கழற்றி எறியாமல் இன்னும் ஏன் அதற்குள் இருந்து கொண்டு அதை அவமரியாதைப் படுத்துகின்றான். அந்த தசைப்பிண்டத்தினால் எவ்வாறு ஆசானாக இருக்க முடியும். நபியின் வயிறு வாடி வதங்கி அல்லவா இருந்தது. ஞானத்தின் பார்வையில் கூட வயிறு தாழ்ந்துதான் இருக்க வேண்டியிருக்கிறது. அவனிடம் முறைப்பட முடியாது என்றபோது நிருவாக சபைத் தலைவரிடத்தில் சொன்னபோது, உம்மாவிடம் சொல்லிவிட்டாயா என்று கேட்டிருக்கின்றார். சொல்லாமலே இருந்திருக்கலாம்தானே என்று சொல்லியிருக்கின்றார். ஆனால் தம்பி தனது மௌலவி தன் குரல்வளையை நசிக்கவந்ததை சொல்லாமல் விடமாட்டான்தானே உம்மாவிடம்.



தம்பி தனது கையை இறுகப் பிடித்துக் கொண்டு எத்தனித்த மௌலவியை தள்ளிவிட்டு கத்தி அழைத்திருக்கின்றான். யாருமே வரவில்லை ஆனால் மௌலவி விட்டு விட்டான். தம்பி செருப்பைக் கழற்றி கையில் எடுத்துக் கொண்டு ஓடி வந்திருக்கின்றான். மத்ரஸாப் பிள்ளைகள் அவன் ஓடிவருவதைக் கண்டு என்னவென்று கேட்டிருக்கின்றார்கள். அவன் நடந்ததைச் சொல்லியிருக்கின்றான். அவனை விட மூத்தபிள்ளைகள் விஷயத்தைப் புரிந்து கொண்டிருக்கின்றார்கள். ஆனால் தம்பிக்கு இன்னமும் புரியவில்லை. தனக்கு ஏன் அடித்தது என்று கேட்கச் சொல்லுகின்றான்.

உண்மையில் தம்பிக்கு இன்றைய நாள் எவ்வளவு சந்தோசமாக அமைந்திருக்க வேண்டிய நாள். அங்கு இருந்து தப்பி ஓடிவந்து வீட்டில் முதலில் எதுவுமே பேசாமல் உறைந்து போய் இருந்திருக்கின்றான். உம்மா என்ன ஒருமாதிரியாக இருக்கின்றாய் என்று விசாரித்த பின்புதான் அவன் விம்மி வெடித்திருக்கின்றான். அவன் விம்மும் போது உம்மா தலையை கோதி விட்டார். தம்பியின் நெஞ்சில் நான் கையை வைத்துப் பார்த்தபோது உலக்கையால் இடிப்பது போன்று இருந்தது. அப்போது கூட அவனைத் தண்டிக்க என் மனம் ஏன் சொல்லவில்லை? உணர்வுகளை நான் மதித்தது காரணமா? அல்லது மௌலவியின் ஏமாற்றத்தின் உணர்வு அளவை துல்லியமாய் கணக்குப் போட்டதா? அல்லது அவனை எவ்வளவு தண்டித்தாலும் போதாது என்பதாலா? ஆனாலும் ஒரு நாய் துரத்தும் போதுதான் குழந்தைகள் செருப்பைக் கழற்றிக் கொண்டு ஓடும் என்பதை நான் தெளிவாக அறிவேன்.

2001.06.22



RangaRakes tamilnavarasam.com

# பூனை அனைத்தும் உண்ணும்

நிஸ்தாருக்கு உபைத்தை முதலில் புத்தகக் கடையில் வைத்து நண்பரொருவர் அறிமுகப்படுத்தி விட்டார். ஆனாலும், அவர் அவனோடு நெருக்கமான நாள் 10.05.1997. நஜிமை இழப்பதற்கான புள்ளியும் அன்றுதான் வைக்கப்பட்டிருக்க வேண்டும். இரவு 09.00 மணிக்கு றிஸானை தேடிச்சென்று காணாமல் திருப்பி வரும்போது நிஸ்தாரைக் கண்டு 'றிஸானை காணவில்லையா?' என்று கேட்டார். வீட்டுக்கு உபைத்தை நிஸ்தார் அழைத்த விதம் நஜிமுக்கு சுருக்கென்றுதைத்திருக்கவேண்டும். நஜிம் திடீரென்று போவதாகச் சொல்லிவிட்டு புறப்பட்டு விட்டான்.

கட்டிப்பூசாமல் கிடக்கும் புது வீட்டில்தான் நிஸ்தாருக்கு படிக்கும் அறை. அதற்குள்தான் உபைத்தை அழைத்துச் சென்று இருத்தாட்டி விட்டு, வலது புறமாக இருக்கும் அவர்களின் பழைய வீட்டிற்குள் போய், உம்மாவை தேனீர் ஊற்றச் சொல்லிவிட்டு வந்தான். கம்பி வலைக்கட்டிலில், தலையணையை, ஜன்னலைத் தற்காலிகமாக அடைத்து வைத்திருந்த மரப்புறவெட்டுப் பலகையின் மீது வைத்துச் சாய்ந்திருந்தார் உபைத்.

நிஸ்தார் உள்ளே நுழைந்ததும் 'என்ன நடக்கிது?' என்று கேட்டார். நிஸ்தார் ஒன்றும் பேசவில்லை சிரித்தான். 'நீங்க பேசுறது மிச்சம் கொறய' என்றதற்கும் சிரித்தான். ஏதோ நினைவு தட்ட எழும்பி பள்ளிக் கொப்பி புத்தக அடுக்கிலிருந்த 'ஒட்டோகிராஃப்பை' இழுத்த போது, எல்லாவற்றிற்கும் மேல் இருந்த பேனை உருண்டு பூசாத திண்ணையில் விழுந்தது. பேனாவைத் திறந்து மூடியைப் பின்புறம் செருகி ஓட்டோகிராஃபுடன் சேர்த்துக் கொடுத்தான். உபைத் ' என்னயிது' என்றார். 'சந்திச்சத்திற்கு ஞாபகமா இருக்கட்டுமே.' தம்பி கொண்டு வந்த தேனீரைக் கண்டதும் நிஸ்தார் எழுந்து சென்று ஜன்னலால் தேனீரை வாங்கிவந்து கொடுத்த போது உபைத் எழுதிக் கொண்டிருந்தார். மூன்று வரிகளை எழுதிவிட்டு நான்காவது வரியை மூன்றாவதிற்கு மேல் செருகிக் கொண்டிருந்தார்.



அதன் பிறகு இருவரும் எதுவுமே பேசவில்லை. உபைத் சிகரட் புகைத்துக் கொண்டிருந்தார். அவரின் விரல்கள் அந்தப் பழக்கத்தினால் பழுப்பேறிப் போயிருந்தன. ஆனாலும் உதடுகள் சிவப்பாகவே இருந்தன. குறுந்தாடி வைத்திருந்தார். அகன்ற நெற்றி. முடி கொட்டியிருந்தது. இலேசாக குனிந்த தோள்கள், சின்ன கூர்மையான கண்கள், அவ்வளவு உயரமுமில்லை. கொண்டு வந்திருந்த உபைத் வெளியிடும் "இமையம்" சஞ்சிகையில் ஒன்றை நிஸ்தாருக்குக் கொடுத்தார்.

உபைத் கொழும்பிற்கு, தான் செய்த 'புது உணர்வு' பத்திரிகை அச்சு வேலையாகப் போனவர், நிஸ்தார் கேட்ட படி, ஒரு மொழி பெயர்ப்புக் கதைப்புத்தகத்துடன் வந்திருந்தார். அதன் பிறகு அவர் தனது கொழும்பிலிருந்த இருப்பை மாற்றி ஊருக்கு வந்து விட்டார். உபைத் தனது பத்திரிகைக் காரியாலயத்தை ஆயிரம் ரூபாய் மாத வாடகைக்கு, பிரதான வீதியில் இருந்து கிழக்குப் பக்கமாக இருக்கும் முதற் தெருவில் எடுத்திருந்தார். இருபத்தி ஐந்து வயது மதிக்கத்தக்க வீடு. பணிவாகக் கிளைவிட்ட இரு மாமரங்கள். நிஸ்தார் உள்ளே போகும் போது கழுவிக் காய்ந்தும் காயாததுமான நிலத்தில் பத்திரிகைகளைப் போட்டு எண்ணிப்பிரித்துக் கட்டிக்கொண்டிருந்தார்கள். அந்த 'ஹோல்' நெடுப்பத்திற்கு வலது புறமாய் ஒரு 'ஹோல்' சென்று அதில் இரண்டு அறைகள் முன்னதாக இருந்தன. ஹோலைத் தாண்டி இன்னோர் அறைக்குச் செல்வதற்கான கதவிருந்தது. அறைகள் விசாலமானவை. அறை ஜன்னலிலிருந்து பார்த்தால் மதிலைத்தாண்டி தென்னைகள் நிறைந்த வளவும் அதைத்தாண்டி பிரதான வீதி மின் கம்பங்களும் தெரிந்தன. தேனீர்க் கடையிலிருந்து வரும் பாடல்களும் கேட்டன. உபைத் வெளியே இருந்து வந்து மாமரத்தில் பைசிக்கிளை சாத்திவிட்டு உள்ளே வந்தவர் நிஸ்தாரைப் பார்த்து 'அஸ்ஸலாமு அலைக்கும், என்ன நடக்கிது' என்றார். காகிதத்தை விரித்து அமர்ந்து கொண்டு பத்திரிகைகளில் அனுப்பப்படவேண்டிய விலாசங்களை எழுதிக் கொண்டு, 'நிஸ்தார் மணி, ரீ வாங்காரயேளா' என்று கேட்டார். அதற்கு நிஸ்தார் சரி என்று தலையாட்டினான். 'நாலு ரீயும் ஐந்து சிகரட்டும்' வாங்கி வருமாறு நூறு ரூபாய் காசு கொடுத்தனுப்பினார்.



RangaRakes
tamilnavarasam.com

# 2

உபைத்தின் ‘புது உணர்வு’ பத்திரிகைக் காரியாலயத்தில் நீல நிற பிளாஸ்ரிக் கதிரை வந்து கொண்டிருந்த மாலை, பத்திரிகை இரண்டாது இதழ் ‘புறுப்’ திருத்தியதை எடுத்துக்கொண்டு பிரதான வீதியில் உள்ள கொம்பியூட்டர் டைப்செட் செய்யும் இடத்திற்கு சென்ற நிஸ்தாரை நஜிம் கண்டான்.

‘என்ன ரெண்டுமூணுநாளா வெரக்காணல்ல’ என்றான் நிஸ்தார். நஜிம் பைசிக்கிள் ஹென்டிலில் இரண்டு முழங்கைகளையும் குத்தியபடி இறங்காமலே நின்று ‘கிட்டவாங்கோ’ என்றான்.
நிஸ்தார் அருகே போனதும் ‘நீங்க உபைத்தோடு கூடுறயள், என்னையுமெண்டா அனேகமா என்ரபேர்லதான் முடியும்’ என்றான் நஜிம்.

நிஸ்தார் அதற்கு ‘நீங்க என்ன செல்றயள் என்று எனக்கி வெளங்கல்ல’ என்றதற்கு தனது விழுங்கிவிழுங்கிக் கதைக்கும் உணர்ச்சிகரமான மொழிக்கு இறங்கினான் நஜிம். ‘நான் பொறக்கக்கொள மொறடன் மொகத்தோட பொறந்தாலும் எங்கிட மனசு வேற. அது பிரச்சினையில்ல. எங்கள ஒழிச்சொழிச்சி ஒங்குட ஊட்ட கூட்டிக்கிப்போற. நீங்க அவர வாங்கோ எண்டு கடுமையா கூட்டிக்கிப் போனயளே, அது பிரச்சினல்ல – உபைத் ஆர் எண்டு தெரியுமா? எங்கிட றஹீம் சின்னாப்பாட மகன இயக்கத்துக்குக் கூட்டிக்குப்போனது அவர்தான். புள்ளையள கூட்டிக்கொண்டு போய் வித்து காசி வாங்கிறான். அதுதெரியாப்பா என்னோட கூர்ற எண்டுதான் ஒங்குட ஊட்ட தெரியும். நான்தான் மொறடன் நான்தான் செஞ்செண்டு செல்வாங்க – நான் ஒங்களக்கண்டா என்னேண்டு கேப்பன், இனி கஸ்டம் பிரச்சினயில்ல’ என்று தனது நெஞ்சிலிருந்த பாரத்தைக் கொட்டினான். இலோசாகக் கண்கலங்கியிருந்தது. மீசையை பல்லால் இழுத்துக் கடித்துக் கொண்டான். தான் நிஸ்தாரைக் காணாத நாட்களில் கைகளில் சிகரட்டினால் சூடுபோட்ட தடங்களைப் பார்த்துக்கொண்டான். அவனின் தலையைக் கோதியபடி கடற்கரை மணலில் வானை வெறித்துப்பார்த்தபடி இருவரும் கிடக்கும் இரவுகளுக்காக தியாகம் செய்த சிகரட் பழக்கத்தையும் யோசித்தான்.



நிஸ்தாரை மிக அதிகமாகவே மது அருந்திக் கொண்டிருந்த நாட்களிலேயே நஜிம் சந்திக்கக்கிடைத்தது. கடும் மழை பெய்து ஓய்ந்த இரவின் நடுப்பகுதியில்தான் முதல் முதலாகக் கண்டான். முதலாம் குறிச்சியில் இருந்து ஐந்தாம் குறிச்சிப் பக்கம் கோழி திருடப்போகும் திட்டமே நிஸ்தார் வந்தபின்புதான் தோன்றியது. நிஸ்தாருக்கு தான் கோழியை அழைத்தால் வரும் சாகசத்தை காட்டவேண்டும் போல் இருந்தது நஜிமுக்கு. கோழியை அறுக்கும் அளவிற்கு பக்குவமான நல்லவனாகவும் நிஸ்தார் பட்டான்.

வரும்போது மழை கொட்டத்தொடங்கி விட்டது. ஒரு கடையோரமாய் இருவரும் நின்றபோது நிஸ்தாரின் மேல் தன் உடம்பு படவேண்டும் போல் இருந்தது. அந்தக் கண்களைப் பார்த்துக்கொண்டிருக்கலாம். மெல்லிதான மீசை, சோகமான முகம், சில இமை வெட்டுதல்களுக்கொரு தடவை இமையை இறுக்கி மூடித் திறக்கும் அழகு, உதட்டில் ஏதோ நெழிவது முடி வாரப்பட்டிருக்கும் லாவகம், உச்சியிலும் வகிடு வரும், இடது பக்கமாயும் வரும்.

அதன் பிறகு, அவனின் சினேகிதத்தைக் காப்பாற்றுவதிலேயே கண்ணாய் இருந்ததில் எல்லாம் மறந்து போனது. வாழ்க்கையில் கூட ஒரு பற்றுதல். இப்போது கூட கடற்கரைக்கடையில் வடை வாசமும், ஏதேனும் ஒரு பாடலும் நெஞ்சில் அவனை நினைக்கையில் பரவுகிறது. எவ்வளவு தயங்கித் தயங்கி வந்தவன், எனக்கு எவ்வளவு மரியாதையை என் வீட்டிலேயே அள்ளித் தந்தான். வீட்டாரிடம் நெருங்கிவிட்டான். அழுது கொண்டே என்னை என்னமாதிரி அலட்சியம் செய்கிறான்.



RangaRakes tamilnavarasam.com

# 3

‘கூர்மை’, சஞ்சிகையின் மூன்றாவது இதழ் வெளிக்கொணர்வதற்கான வேலைகள் நடந்து கொண்டிருந்தன. சலித் ‘நாயகன்’ என்ற கவிதையும், ஜிப்ரி, நிஸ்தார் இருவரும் சிறுகதைகளும் எழுதியிருந்தார்கள். அந்த வித்தியாலயத்தில் இல்லை அந்தப் பிரதேசத்திலேயே மாணவர்களிடையே அந்த சஞ்சிகை ஒன்றுதான் வந்து கொண்டிருந்தது. சலித் எப்போதாவது பள்ளிக்கு ஒரு விருந்தாளியைப் போல் வந்து கொண்டிருந்தான். நிஸ்தார் பள்ளிக்கு வந்தாலும் ஆசிரியரை பாடத்திட்டத்திலிருந்து விலக்குவதிலேயே சமர்த்தனாக இருந்தான். இப்திகார் கொதிப்படைந்து காலவரையறைக்குள் பாடத்திட்டம் முடிக்கவிடமாட்டான் என்று புலம்பிக்கொண்டிருந்தான். முபாரிஸ் என்ன என்றாலும் ஒன்றுமில்லை, கொஞ்சம் மனனமாக்கும் சக்தி இருந்தது. ஜிப்ரி விழுந்து விழுந்து படித்தான். எல்லாவகுப்புக்களிலும் பெண்பிள்ளைகள்தானே அதிகம் படிக்கும். அதற்கு முரணாகவே அந்த வகுப்பு இருந்தது. சலீத் முறைத்துப்பார்த்துக்கொண்டிருந்த ஒரு பெண் பிள்ளை வேறொருவருடனான காதல் முற்றி வராமலே போனாள்.

ஆனாலும் பின்னேரங்களில் எல்லோருக்கும் பள்ளிக்கூடத்தின் வளவிற்குள் வராமல் விட மனம் சொல்வதில்லை. மத்தியில் மைதானத்தை வைத்து கட்டிடங்கள் அமைந்திருந்தன. உப்படித்திருந்தாலும் குட்டி ஆலமரத்தின் கீழ் கோரை ‘ஜில்’ என்று எழுந்திருந்தது. கட்டிடங்களின் ஓரமாய் நடைபாதையிட்டு புல்மேட்டுப் பாத்திபோட்டு தென்னைமரங்கள் நாட்டியதில், நல்ல இன தென்னங்கன்றுகள் சில இட்டபாளையில் பூக்கநெட்டியும் நுனி கருக ஆரம்பித்திருந்தது.

முதலில் அங்கு ‘அல்லாஹ்’ இருக்கிறான், இல்லை என்ற விவாதத்துடன்தான் ஒன்று கூடல் ஆரம்பமானது. பின்னர் அது யாரையாவது ஒருவரை நக்கலடிக்கும் இடமாக மாறிப்போனது. ஏனோ அதில் அடிக்கடி மாட்டிக் கொள்வதில் இப்திகார் முதலாவதாக இருந்தான். அவன் அங்கே இப்போதெல்லாம் அந்த முறையைத் தவிர்ப்பதற்கு நிஸ்தாரைப்போல் அதிகம் கதைக்காமல் இருப்பது, அடிப்பது என்ற முடிவுக்கெல்லாம் வந்தான். அவனுக்கு அது சரிவரவில்லை. அந்த முடிவினால் முபாரிசுக்கு ஒரு முறை அடித்தான். அது நிஸ்தாருடையது போலல்லாமல் மிக



விகாரமாக இருந்தது. அதற்குக் காரணம் முபாரிசுக்கு அடித்ததாகக் கூட இருக்கலாம். நிஸ்தாரை அவ்விடத்தில் பின்பற்றுவதில் ஜிப்ரி ஓரளவிக்கு வெற்றி பெற்றிருந்தான். சலீத் தொடர்ந்து நாஸ்திகம் பேசிக் கொண்டிருந்தான் ‘கடவுள்’ என்று கிண்டலாக அவனை அழைக்கும்வரை.

பாடசாலை மட்டத்திலான ஆங்கிலதினப் போட்டியும் அந்தக் காலத்து இடவுக்குள் செருகிக் கொண்டது. அதுவும் சேக்ஸ்பியரின் நாடகத்தில் ஒரு துண்டு. ‘புரூட்டஸ் நீயுமா?’ என்று கேட்கும் சீசரின் பாத்திரத்தை மனனமாக்குவதில் அதிகமான சக்தியுள்ள சியானையும் முதல் துரோகியாக சப்ரினும். அதில் இன்னும் புர்க்கான், நிஸ்தார், சம்சுடீன், அஸ்வர் எல்லோரும் இருந்தார்கள். அதற்காக நிஸ்தார் அவர்களின் வீட்டில் சிவாஜி ஒரு படத்தின் அந்தக் கட்டத்தில் நடிப்பதை வீடியோவில் போட்டுப் பார்த்தார்கள். அதன் பிறகு சியான் சிவாஜியை விட அந்தக் கட்டத்தை உருக்கமாக நடித்தான். நிஸ்தாரின் துண்டு புர்க்கானிடமும், புர்க்கானின் துண்டு நிஸ்தாரிடமும் மாறிக்கொண்டதில் புர்க்கான் வாழ்த்திக்கொண்டே அரசனைக் கொலை செய்தான். நல்லவேளை நாடகப் போட்டியில் கலந்து கொள்ள வேறு பள்ளி மாணவர்கள் வராததால் முதலிடம் பெற்று வெற்றியுடன் திரும்பினார்கள். அந்த ஒத்திகையெல்லாம் குட்டி ஆலமரப் புற்தரையில்தான் நடந்தது. பொழுது நன்கு கறுக்குமட்டும் ஆசிரியர்களுடன் இருந்து கதைத்துக்கொண்டிருந்தார்கள். முபாரிஸ் ஆசிரியர்களுக்கு ஐஸ் வைப்பதில் கில்லாடி. அந்தக் கிளுகிளுப்புக்காகவே ஆறரை மணிக்கு அனுப்பவேண்டியவர்களை ஆசிரியர்களே வைத்துக் கொண்டு கதைத்துக் கொண்டிருந்தார்கள்.

கடைசிப் பாடவேளை, அது ஆங்கிலப்பாடவேளை. முதல் ஆறுமாதமும் மொட்டை காசிம் மாஸ்டர்தான் பாடத்திற்கு வந்து கொண்டிருந்தார். ஆரம்பத்தில் ‘ஹெபிச்சுவல் எக்சன்’ என்ற விடயத்தை திரும்பித் திரும்பிப் படித்துக் கொடுத்ததில் பிள்ளைகள் பராக்குப்பார்க்கத் தொடங்கினார்கள். அதனால் அவர் ஒருநாள் ‘பாடத்தில் விருப்பமில்லாதவர்கள் எழும்பிப் போகலாம்’ என்று சொன்னார். முதலில் யார் எழும்புவது என்றுதான் பிரச்சினை. அஸ்வர்தான் முதலில் எழும்பினான்.



RangaRakes tamilnavarasam.com

அதைத் தொடர்ந்து எல்லா ஆண்பிள்ளைகளும் வெளியேறியதும் பரவாயில்லையென்று எண்ணிக்கொண்டிருந்த மாஸ்டருக்கு, பெண்பிள்ளைகளும் ஒன்று விடாமல் எழும்பியதில் அதிபரோடு முறைப்பட்டுவிட்டு கால்களை ஒரு லயத்தில் ஆட்டிக் கொண்டு இருந்து விட்டு சில நாட்களின் பின் வராமலே போனார். இப்போது அந்தப்பாடத்திற்கெல்லாம் பிள்ளைகள் இருப்பது குறைந்து, இருந்தாலும் பாட்டுப்பாடுவதற்கே இருந்தார்கள்.

ஏ.எல் படிக்கும் மாணவர்களுக்கு நான்கு பாடத்தையும் இரண்டு இரண்டு பாடவேளையாகப் பிரித்துப் போட்டபின் மிஞ்சியதொரு பாடவேளை. அதில்தான் கடைசி ஆங்கிலப் பாடம். ஆங்கிலப் பாடத்தை வைத்தவர்கள் நல்ல வேளை முதலாம் பாடம் ஆங்கிலப் பாடமாக வைக்கவில்லை. இல்லையென்றால் அந்நேரமே இவர்களின் கச்சேரி ஆரம்பிக்கத் தொடங்கிவிடும்.

பாலர்களுக்குக் கட்டிய மண்டபத்தில் இவர்களுக்கு இடம் கொடுக்கப்பட்டது. மண்டபத்தில் முழுவதும் பாலர்களுக்கான சித்திரம் நிறைந்திருந்தது. வெளியே கம்பிவலையால் கூட அடைத்திருந்தார்கள். அதற்குள் நடந்த ராஜ்யத்தைக் கேட்க ஏ.எல் பாட ஆசிரியர்களைத் தவிர வேறு ஆசிரியர்களை அவர்கள் அனுமதிப்பதில்லை.

அந்த மண்டபம் முழுவதிலும் இரண்டு வகுப்புத்தான். ஒரு பக்கம் கலைப்பிரிவினர்களும் மற்றப் பக்கம் வர்த்தகப்பிரிவினர்களும் இருந்தார்கள் நடுவில் நான்கைந்து மேசையும், கதிரையும் கிடந்தன. அதில் விவசாயப்பாடம் அல்லது புள்ளிவிபரவியல் பாடம் நடந்துகொண்டிருந்தது. ஆசிரியர் வராத நாட்களில் புள்ளிவிபரவியல் பாடம் எடுக்கும் ஒரு ஆணும், பெண்ணும் தாம்மட்டும் என்பதால் கால்களை உரசி பொழுது போக்கிக்கொண்டிருந்தார்கள். முதன் முதலில் பள்ளியில் ஏற்படுத்தப்பட்ட ஏ.எல் மாணவர்கள் என்று கரிசனையுடன் பாடம் நடத்தி வந்தாலும் சிறிது காலத்தில் நடுத்துண்டு வரும்போது வரும் தொய்வு அங்கும் தலை தூக்கியது. பாடம் நடத்துவதில் வாத்திமார்களின் சிரத்தை குறைந்தது. அந்தப் பாடவேளைகளில் பெண்பிள்ளைகளெல்லாம் ஏதாவது ஒரு வகுப்பில் ஒன்றுகூடி கதைத்துக்கொண்டிருக்கத் துவங்கினார்கள். ஆண்பிள்ளைகள் கல்லை ஒரு பலகையால் தட்டிப்பிடித்து விளையாடிக் கொண்டிருந்தார்கள் பிறகு காலால்



அடித்து விளையாடினார்கள். ஏ.எல் மண்டபத்தை ஒட்டிய மாதிரியே 'கென்ரீன்' இருந்தது. அதனால் அங்கு வந்த ஆசிரியர்களெல்லாம் இவர்களின் அட்டகாசம் தாங்கமுடியாமல் அதிபரிடம் முறைப்பட்டுக்கொண்டிருந்தார்கள். அதனால் அதிபருக்கு, பிள்ளைகளுக்கு தான் தமிழ்ப் பாடம் படிப்பிக்கும் ஆசான் என்று ஞாபகம் வந்ததில் வகுப்பிற்கு வந்தார்.

அப்பாவிபோல் அதிபருக்கு முன்னால் முகத்தை வைத்துக்கொண்டிருந்ததில் நான்காம் பாடத்திலே அன்று சலீத்திற்கு நித்திரை போய்விட்டது. அதிபர் அவனை முகம் கழுவிக்கொண்டு வரும்படி அனுப்பினார். அவன் நீண்ட நேரம் கழித்தே வந்தான் 'என்ன சொணக்கம்' என்றதற்கு நித்திரை தீர உலாத்திவிட்டு வந்ததாகச் சொன்னான். 'ரம்யம்' என்றழைக்கும் நஸீர் ஆசிரியர் வரவில்லை. மற்ற எல்லா ஏ.எல்லிற்கு பாடமெடுக்கும் ஆசிரியர்களும் தமிழ்ப் பாடமுடிவில் கூடி இரண்டு வகுப்புகளுக்கு இடையில் தற்காலிகமாக வேலி கட்ட முடிவெடுத்தார்கள்.

மாலை எல்லோரும் கூடி மட்டையால் குறுக்குவேலி கட்டினார்கள். ஆசிரியர்கள் அந்தப்பக்கம் வெளியேறும்போதே வேலியைப் பிரித்து விட்டார்கள். மறுநாள் வந்த ரம்யம் பிள்ளைகளை மெச்சினார். 'நல்லவேளை என்ர கண்ணால பார்க்காமலே பிரிச்சிட்டயள்' என்றார்.



RangaRakes          tamilnavarasam.com

# 4

நிஸ்தார் பாடசாலையில் இருந்து இடைவேளையில் வெளியேறி உபைத்தின் பத்திரிகைக் காரியாலயத்திற்குப் போனான். அன்றுதான் உபைத் எழுதும் அறைக்குள் புத்தகங்கள் பெட்டிபெட்டியாய் வந்து இறங்கியிருந்தன. உபைத் ஏதோ ஒரு புத்தகத்தை அவசரமாக எடுக்கவேண்டி எல்லாப்பெட்டிகளையும் அவிழ்த்துக் கொட்டி தேடிக்கொண்டிருந்தார். அதனால் புத்தகங்களெல்லாம் சிதறிக்கிடந்தன. நிஸ்தார் அதை இயன்றவரை திண்ணையில் அடுக்கி வைத்தான். உபைத் கையில் பட்ட சில புத்தகங்களை வேறாக்கிக்கொண்டு வரும்போது, லா. ச. ரா. வின் 'த்வனி' யையும் எஸ்.பொவின் 'ஆண்மை' யையும் எடுத்துக் கொடுத்து உபைத்திடம்,

'இத நீங்க நல்லா வாசிங்கோ. நல்ல மொழி, ஒங்குட மொழியும் நல்லாத் தேறும்' என்றார்.

நிஸ்தாரும் அதைக் கண்களில் ஒற்றாக்குறையாக வாங்கி எடுத்துக் கொண்டான்.

'புக்செல்ப் ஒண்டு எணக்கக்கொடுக்கனும் ஆருக்கிட்ட கொடுக்கலாம்' என்று உபைத் கேட்டார்.

'முன்னுத்தூட்டுல வேலசெய்றானுகள். அங்க இரும்புப்பைப்பிலேயே கொறஞ்ச வெலயில செஞ்செடுக்கலாம்.' என்று நிஸ்தார் சொன்னதும், உபைத் ஓடர் கொடுக்க எழும்பிப் போனார். மேசையின் மேலிருந்த பேனாவை காற்று மெதுவாக உசுப்பி கீழே தள்ளிவிட்டது. நிஸ்தார் அதை எடுத்து மேசையில் வைத்துவிட்டு கதிரையில் முதுகை நிமிர்த்தினான்.

நிஸ்தார் பள்ளிக்குப் போனபோது 'கேற்றில்' நின்ற 'வாச்சர்' சுபையிர் மௌலவி பாடம் நடத்துகிறார் என்று சொன்னதால் கட்டிடங்களின் பின்னால் சற்று உயரமாக வளர்ந்திருக்கும் புற்களுக்குள்ளால் நடந்து தனது கட்டிடத்திற்கு



எதிரால் மைதானத்திற்கு அப்பால் உள்ள இரு மண்டபத்திற்கிடையில் நின்று பார்த்தான். சுபையிர் மௌலவியின் பாடம் நடந்து கொண்டுதான் இருந்தது. எல்லா மண்டபச் சுவர்களையும் துள்ளிப் பார்த்தால் தான் சுவருக்கப்பால் இருக்கும் வகுப்பறைகள் தெரியும். ஆனால் ஒரு மூடிய அறையுள் இருந்த வகுப்பின் ஜன்னல் திறந்திருந்தபோது யாரும் ஆசிரியர்கள் நிற்கிறார்களா என்பதை எட்டிப்பார்த்தபோது இல்லை. ஆனால் ஓர் பெண்பிள்ளையைக் கண்டு கொண்டான். அவளை ஏற்கனவே பல முறை பார்த்திருக்கிறான். அந்த வகுப்பில் சில பிள்ளைகள் 'பர்தா' அணிய ஆரம்பித்துவிட்டார்கள். அவள் இன்னும் 'ஸ்காப்'தான் அணிந்து கொண்டிருந்தாள். முழங்கைக்குச் சற்று உயரமாகவே அவள் சட்டைக்கைகள் இருக்கும். அதனால் அடிக்கடி 'ஸ்காபிற்குள்' இழுத்துக் கொள்ளப்பார்ப்பாள். அதுவே அவளின் கைகளைப் பார்க்கத்துண்டும். மெலிதான உடம்பு. அதிகம் கூச்சப்படும் சுபாவம். அவள் பெயர் என்னவென்று அறிய நிஸ்தாருக்கு எண்ணம் வந்தது.

சுபையிர் மௌலவி பாடத்தை முடித்துக் கொண்டு போய்விட்டார். போகலாம் என்று நினைத்து நிஸ்தார். மண்டபத்திற்கு முன்பாக வரும்போது அஸ்வரும் எங்கிருந்தோ வந்தான். 'என்ன மச்சான் கன்நேரமா வந்த? மௌலவி பெய்த்தார் போவேமே' என்றான்.

நிஸ்தார் அதற்கு 'அதுக்கு முந்தி இந்த வகுப்புக்க கொஞ்சம் போவம் வா' என்றான்.

'என்னத்திற்கு'

'வாவன் பொறகு செல்றன். ஒரு பொம்புளப்புள்ளட பேர் கேக்கனும்'

நிஸ்தார் உள்ளே போனவன் வெளியே வந்து சுவரில் எழுதியிருந்த வகுப்பைப் பார்த்தான். 'ஆண்டு பத்து எச்' என்று எழுதி இருந்தது. அவள் மெதுவாக எதையோ பக்கத்தில் இருந்தவளிடம் பேசிவிட்டு வாயைக் கைகளால் மூடிக்கொண்டு சிரித்தாள். வகுப்பின் பின்வரியிலிருந்த பையன் ஒருவனிடம் அவளை விரலால் சுட்டி 'பேரென்ன' என்று நிஸ்தார் கேட்டபோது திரும்பியவள், ஒரு நொடி உற்றுப் பார்த்துவிட்டு மீண்டும் திருப்பிக் கொண்டாள். அதற்கு அந்தப் பையன்

'அவடபேர் சிபானி. அவட சாச்சிரமகள் பின்னுக்கு இருக்கிறது நளீமா' என்றான்.



RangaRakes tamilnavarasam.com

சிபானியின் மேசைக்கு முன்னிருந்த மேசையில் இருந்த ஒருவனிடம் கையை மேசையில் குத்தி அஸ்வர் பேசிக் கொண்டிருந்தான். நிஸ்தாருக்கு சிறிது நெஞ்சு படபடத்தது.
நிஸ்தார் சிபானியின் மேசை அருகில் சென்று
'அஸ்வர் வா, ஹலோ! சிபானி ஒங்குட பேர்தானே' என்று கேட்டுவிட்டு இருவரும் வெளியேறி விட்டார்கள். சிபானி வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தாள் – பின்வரிசையில் இருந்த பெயர் சொல்லிக் கொடுத்தவனை.

பள்ளி கலைவதற்கான மணி அடித்ததும் எல்லா மாணவர்களும் வெளியே வந்து நின்றது மைதானத்தைச் சுற்றி ஒற்றைக் கோடு போட்டது போல் இருந்தது. நிஸ்தாருக்குப் பார்வை அந்தப்பக்கமே போனது, சிபானி எதேச்சையாகத் திரும்பும் போது தூரத்தில் நிஸ்தார் பார்த்துக்கொண்டிருப்பதைக் கண்டாள். குனிந்து மெல்ல உதடுகளை நாவினால் நீவிக் கொண்டாள். விரல்களைப் பிசைந்த படியே அன்னம் போல் நடந்தாள். வெளிவாயிலால் மறையும் வரை நிஸ்தார் பார்த்துக் கொண்டுதான் இருந்தான்.



# 5

உபைத்தின் அறைக்குள் ஜன்னலோரமாய் 'புக்செல்பை' வைத்து நிஸ்தார் புத்தகங்களை அடுக்கிக்கொண்டிருந்தான். சஞ்சிகைகளை வேறாகவும், புத்தகங்களை வேறாகவும் பிரித்து, புத்தகங்களின் பருமனை மாத்திரம் கணக்கில் கொண்டு வரிசைப்படுத்தி வைத்தான். பத்திரிகை நறுக்குகளை கீழே ஒரு அட்டைத் துண்டைப் போட்டு அதன் மேல் அடுக்கிவைத்தான். அதுவோ எவ்விடத்திற்கும் பொருந்தாது துருத்திக்கொண்டிருந்தது.

உபைத் அப்போது பேனாவை வைத்துவிட்டு ஒரு இருநூறு ரூபாய்த் தாளை நிஸ்தாரிடம் நீட்டி 'நாங்க இலக்கியத்தில் மட்டும்தான் கொப்பியடிப்பவர்களைப் புடிக்கிற என்றில்லை; இப்ப வந்திருக்கே இருநூறுரூபாத் தாள் புருணையின் காசி மாதிரி இருக்கும் பாருங்க' என்று விட்டு, பையில் இருந்து ஒரு புருணையின் நோட்டை எடுத்துக் காட்டினார். நிஸ்தார்தான் லேசில் வாய் திறப்பதில்லையே, மெதுவாகச் சிரித்தான். உபைத் நிஸ்தாரிடம் காசு இருநூறு ரூபாயையும் நீட்டி 'ஐந்து கோள்லிப்'பும் இரண்டு ரீ பார்சலும் சாப்புறத்திற்கு என்னையாவதும் வாங்கிக்கு வாங்கோ' என்றார்.

நிஸ்தார் வந்து உபைத் எழுதிக் கொண்டிருந்த மேசையின் முன்னால் சாமான்களை வைத்தான். சம்சா சாப்பிட்டுக்கொண்டே நிஸ்தாரை உற்றுப்பார்த்துக் கொண்டிருந்த உபைத் நீல பிளாஸ்ரிக் ஜக்கில் இருந்த தண்ணீரை கிளாசில் ஊற்றி அலசியபடி போய், தண்ணீரை ஊற்றிவிட்டு கையில் கிளாசை வைத்தபடியே பைசிக்கிளை உள்ளுக்குள் தள்ளி வைத்தார். அறைக்கு நேரே இருந்த ஹோல் ஜன்னலையும் சாத்திவிட்டு வந்தார். பொலித்தின் பையிலிருந்த ரீயை பல்லால் கடித்துப் பிய்த்து கிளாசில் ரீயை ஊற்றினார். நிஸ்தாரின் கண்களைப் பார்த்தபடியே ரீயைக் குடித்தார். நிஸ்தாரும் ரீயைக் குடித்துக்கொண்டிருந்தான். எழும்பி நிஸ்தாரின் பின்னால் நின்று உபைத் தலையை கோதி விட்டார். வலது கையால் உதட்டை ஸ்பரித்தார். பிறகு அவரின் சிகரட் வாசனையான உதடுகள் நிஸ்தாரின் உதட்டை முத்தமிட்டன.

கண்களைப் பார்த்தபடியே இருவரும் இருந்தார்கள். உபைத் நிஸ்தாரிடம்



RangaRakes
tamilnavarasam.com

'ரன்னிங் சோட்ஸ் உள்ளுக்குப் போர்ர பழக்கம் இருக்கெண்டா – நீங்க புட்போல் விளையார்ரா முந்தி? கோபமா இல்லையே?' என்றபடியே சிகரட் ஒன்றை எடுத்து கொழுத்திக் கொண்டார். அதன் பிறகு லா.ச.ராவின் 'த்வனி' கதையில் வரும் தொலைபேசியில் சாலிகிராமுடன் ஒரு பெண் உரையாடும் உரையாடலை நிஸ்தாருக்கு உபைத் வாசித்துக் காட்டினார்.



# 6

மெல்லமெல்ல ஒவ்வொரு ரியூசன் கிளாஸாகப் போவதைக் குறைத்து நிஸ்தார் தமிழ் ரியூசன் கிளாசுக்கு மாத்திரம்தான் போய்க்கொண்டிருந்தான். தமிழ் வகுப்பில் நூற்றி ஐம்பதிற்கு மேற்பட்ட பிள்ளைகள். அதில் அரைவாசிக்கும் கூடுதலாக பெண்பிள்ளைகள் இருந்தனர். நிஸ்தார் இலேசில் பேசமாட்டான் என்று எல்லோரிடமும் பதிந்து போனது. நன்கு உடுத்து நாகரிகமாய் வந்தாலும் பெண்பிள்ளைகளை பகிடி பண்ணமாட்டான். அதனால் அவனுக்குப் பெருமையாக இருக்கும் என்று பெண்பிள்ளைகள் நினைத்தார்கள். நிஸ்தாருக்கு பெண்பிள்ளைகளோடு பேசுமளவிற்கு தைரியமிருக்கவில்லை. தமிழ் வாத்தியாரிடம் சற்றுக் கெட்டித்தனத்தின் பெயரால் நெருக்கம் இருந்தது. ஆனால் பாடத்தில் கூட பேசமாட்டான். ஒரே ஒரு நாள் அவன் பேசியதில் வகுப்பே கொல்லென்று சிரித்தது. பாரதியின் பாடலை ஆசிரியர் படிப்பித்துக் கொண்டிருக்கும் போது பெண்ணைப்பற்றி பாரதி பாடியதை, 'பாரதியாரும் கொஞ்சம் பொம்புள விசயத்தில மோசம்தான்' என்றதற்குத்தான்.

அன்று நிஸ்தார் நேராக ரியூசன் கிளாஸிற்கு வராமல் உபைத்தின் பத்திரிகைக் காரியாலயத்திற்குப் போய்த்தான் வந்திருந்தான். சபீனா வாய்த்துடுக்கானவள்.
'நிஸ்தாரோட றிப்கா கொஞ்சம் பேசணுமாம்' என்றாள்.
'என்னத்துக்கு?' என்றான்.
'றிப்காவுக்கு உங்களோடு விருப்பமாம் அதச் செல்லத்தான்' என்றாள்.
'நிஸ்தாருக்கு விருப்பமில்ல இல்ல அப்பிடிச் செல்லொணாம். நிஸ்தாருக்கு வேறொரு பிள்ளையோட விருப்பம் என்று செல்லுங்கோ' என்றான்.
சபீனாவிற்குத்தூக்கிவாரிப்போட்டது. நிஸ்தாருக்கும் அதைச் சொல்வதற்கு கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருந்தது. ஜிப்ரி, ஒரு பொலிஸ்காரன், இன்னும் அண்ணளவாக பத்துப்பேர் அளவில் அவளின் பின்னால் திரிகின்றார்கள் ஆனாலும் நிஸ்தாருக்கோ ஏதோ ஒன்று அவளில் குறைந்தது. 'இத ஒத்தரோடையும் செல்லமாட்டயள்தானே' என்றாள் சபீனா.
'செல்லமாட்டேன்' என்று வாக்குக்கொடுத்துவிட்டு ஒரு தரம் இமைகளை மூடி அதை யாரிடம் ரகசியமாகச் சொல்லவேண்டும் என்று யோசித்தான்.



RangaRakes tamilnavarasam.com

இரவு எட்டு மணியிருக்கும் முபாரிஸின் வீட்டிற்கு நிஸ்தார் போனான். அங்கு முபாரிஸைக் காணவில்லை. அன்று ரியூசன் கிளாஸில் நடந்ததைச் சொல்லிவிட்டுப் போகலாம் என்றுதான் நிஸ்தார் வந்திருந்தான். முபாரிஸின் வீட்டிற்கு நிஸ்தார் வருவது என்பது எப்படியும் ஆறாம் வகுப்பில் ஆரம்பமாகி இருக்கவேண்டும். நிஸ்தார், முபாரிஸ் இருவரும் அதற்கு முன்னரே நண்பர்களாகி இருந்தார்கள். நிஸ்தாரையும் அவர்களின் வீட்டுப்பிள்ளையைப் போல்தான் முபாரிஸ் வீட்டில் நினைத்துக்கொண்டிருந்தார்கள். நிஸ்தார் முபாரிஸைக் கண்டு சொல்லிவிட்டுப் போகும் போது நேரம் நன்கு போய்விட்டது.

மாங்கந்துகள் சில மறைத்தாலும், பள்ளியின் முன்புறம் முபாரிஸின் வீட்டருகில் நின்று பார்த்தபோது தெரிந்தது. அதுவே பள்ளியின் பிரதான வாயிலாகவும் இருந்தது. பள்ளி வெளிமதிலிலிருந்து பள்ளிச் சுவர் வரையிலும் இரண்டு ஓரத்திலும் கல்லால் ஓடைபோட்டு உயர்த்திக்கட்டி அதனுள் மாதுளம் மரங்களை நாட்டி இருந்தார்கள். அது புச்சிக்காய்களுடன் மிலாறு பத்திக்கிடந்தது. மற்றும்படிக்கு பள்ளி செழிப்பாகத்தான் இருந்தது. நிஸ்தார் பள்ளியின் முன்புறத்தைப் பார்த்துக்கொண்டு நின்றபோது மூன்று பெண்பிள்ளைகள் அவன் நின்ற வீதியைக் குறுக்கறுத்துச் சென்றதில் ஒருத்தி சிபானி. நிஸ்தாரை சிபானி சற்று நிமிர்ந்து பார்த்து விட்டு சற்று கூடுதலாகவே குனிந்து பார்த்தபடி நடந்தாள். நிஸ்தாருக்கு சிறிது பதட்டமாக இருக்கவே உள்ளே போனான். முபாரிஸின் வீட்டு மேசையில் பச்சை நிற மாபிள் ஜக்கும் ஒரு கிளாசும் இருந்தது. ஜக்கை எடுத்தான் கை இலேசாக நடுங்கியது.

முபாரிஸ் 1979ம் ஆண்டு பிறந்திருந்தான். அவனுக்கு இரண்டு வருடங்களுக்கு அவனின் ராத்தா மூத்த ரிஜிஸ். எப்படியும் முபாரிஸின் தாய்தந்தைக்குத் திருமணமாகி ஒருவருடத்திலேயே ரிஜிஸ் பிறந்திருக்கவேண்டும். முபாரிஸின் வீட்டிற்கு வயது எப்படியும் இருபத்திரண்டுக்கு மேல்தான் இருக்கும். பிரதான வீதியின் அருகில் உள்ள குறுக்குவீதி என்பதால் வீதியை அடிக்கடி உயர்த்தியதில் வளவு பணிந்து வீடும் பணிந்துவிட்டது. ஆறுமாதங்களுக்கு முன்தான் சியாத்திற்கும் றிப்னாசிற்கும் கத்னா செய்வதற்கு நீல நிற பெயின்ற் வீட்டிற்குப் பூசினார்கள். ஏற்கனவே இருந்த



நிறத்தை மறைத்ததில் இலேசான இருள் நிறம் உண்டாகி இருந்தது. பழைய முதிரை ஜன்னல்கள், கதவுகள், கதிரைகள் எல்லாவற்றிற்கும் வழித்து ‘பொலிஸ்’ பண்ணியதில், அவை உதட்டுச் சாயம் அளவுக்கதிகம் பூசியதுபோல் இருந்தது. வீதியோரமாய் ஒரு நீளமான மண்டபம். அதற்கு இடது பக்கமாய் படுக்கையறை, அதற்கப்பால் இன்னுமொரு புழுதியறை, அந்த இரு அறைகளுக்கு முன்னால் திண்ணை, படுக்கையறைக்கும் புழுதியறைக்கும் அப்பால் இருக்கும் அறைக்கு முன்னால் திண்ணைக்கு மேற்குப்புறமாய் குசினி. திண்ணைக்கு வெளியால் ஓட்டுவீட்டிற்கு சீற்றினால் எடுத்த பந்தல். அதற்கப்பால் ஒரு பத்தடி நீளமான வாசல். அதில் இரு மாமரங்கள். ஒரு செவ்விளநீர் மரம், கொஞ்சம் பூக்கண்றுகள், றோட்டோர மண்டபத்தின் வெளிக்கதவிற்கு நேரே கேற். மதிலுக்கும் வீட்டிற்கும் இடையே ஒரு ஆறடி இடைவெளியிருக்கும். அதில் கிழக்குப் பக்கமாக கேற்றை மதில் படும்படி திறக்கமுடியாமல் ஒரு கத்தா மரம். திண்ணையில் வடக்குப்பக்கக் கதவு திறந்தால் றோட்டோர மண்டபத்தில் உள்கதவடியில் நிற்பவருக்கு வடக்குப் பக்கமாகப் பந்தல். பின்னர் ஊஞ்சல் அதற்கப்பால் இப்போது பிரத்தியேகமாகக் கட்டியிருக்கும் அடுப்பங்கரை குடிலில் தான் தற்சமயம் எல்லோரும் இருந்தார்கள். எல்லோரும் என்றால் வீட்டின் அங்கத்தவர்கள் பண்ணிரண்டுபேருமில்லை. றஸீதா, றிஜிஸ், உம்மா, பிள்ளையைத் தூக்கியபடி சில்மியா. அந்த அடுப்பங்கரைக் குடில் கீழ்மட்டம் தகட்டினாலும் நிலத்திற்கு சீமெந்து போடப்பட்டும் இருந்தது. தகட்டுக்கு மேல் கம்பிவலை. கூரை கிடுகு வேயப்பட்டிருந்தது.

அடுப்பில் இறைச்சி காய்ந்து கொண்டிருந்தது. அடுப்படி பலகைக் குத்தியில் றஸீதா அரிசரித்துக் கொண்டிருந்தாள். றிஜீஸ் கடைக்கு பெரிய வெங்காயம் உரித்துக்கொண்டிருந்தாள். உம்மா பிள்ளைக்குப் பால் கலந்து கொண்டிருந்தார். நிலம் எங்கும் அழுக்கறையில் அமுங்கிக் கசிந்தது. நிஸ்தார் கால்களைக் கூசியபடி வைத்தான்.

‘இதுக்க கால்வைக்கையா—’ என்றாள் றிஜிஸ்

‘வேறென்ன’ என்றபடி அங்கே இருப்பதற்கு இடம் தேடினான் நிஸ்தார். உரல்தான் இருந்தது. அதில் இருப்பதற்கு முனைந்தபோது அதற்கு றிஜிஸ்.

‘கொஞ்சம் பொறு’ என்று விட்டு எழும்பி கூரையில் செருகியிருந்த பேப்பர் ஒன்றை எடுத்துக் கொடுத்துவிட்டு ‘ஒரல்ல மாவிருக்கி கறுப்பு ரவ்சர்ல பட்டாத்தெரியும், போட்டுக்கிரி’ என்றாள்.

உம்மா குழந்தையை வாங்கிக்கொண்டு சில்மியாவிடம் பால் போத்தலை



RangaRakes tamilnavarasam.com

எடுத்துக் கேட்டதற்கு ‘புள்ள நித்திரகொண்டுட்டே’ என்றாள்.
‘உன்ன நித்திரையாகாமப் பாத்துக்கோ எண்டு சென்னெலா’ என்றபடி அடுப்படியை விட்டு வெளியேறினார். இறைச்சி காய்ந்த அடுப்பு இலேசாகப் புகைய ஆரம்பித்தது. றிஜிஸ் இறைச்சிக்கு மேல் பழுப்பேறிக்கிடந்த காகிதத் துண்டைக் கிழித்து அடுப்புக்குள் போட்டாள்.
அது எரிந்து அணைந்தது. புகை குறைந்தது.
‘ஜிப்ரி’ புள்ளைக்கு ஒங்கொளொட விருப்பமாமே’ என்றாள் றஸீதா,
நிஸ்தார் கண்ணை விரித்து ‘ஆர்சென்ன’ என்றான்.
றிஜிஸ் ‘ஆர் ஒங்குட கூட்டாளிதான். அவனுக்கிட்ட ஆரும் ரகசியம் செல்வாங்களா? அவன் வகுத்துக்க வெப்பானா? செல்றாக்களுக்குப் புத்தியிருக்கணுமே. உனக்கு செல்றத்துக்கு வேறாக்கள் கிடைக்கலயா? அவர் றிப்காட விசயத்தை எல்லாம் இஞ்ச புள்ளா செல்லிட்டார்’.

‘என்ன இனிப் புள்ளாக்குமா’ என்றாள் ரஸீதா
‘இல்ல எனக்கி வேறொரு ஆளோட விருப்பம்’ என்றான் நிஸ்தார்.
இறைச்சித் தட்டை இறக்கி கொள்ளியின் மீது வைத்துவிட்டு, உப்பைப் போட்டு உலையைத் தூக்கி அடுப்பில் றஸீதா வைத்தாள். றஸீதா முபாரிசின் உம்மாவின் தங்கை. அங்கே தான் தொடர்ந்து இருந்து வருகின்றாள். பருமனான உடம்பு, எண்ணை போடாமல் வாரி விடப்பட்ட கூந்தல், மையிட்ட சிறிய கண்கள், மெல்லிதாக சாயம் பூசி ஈரமாக்கி விடப்பட்ட உதடுகள், செல்லமான முகம். நெஞ்சுப்பகுதியில் சட்டையை விரலால் பிடித்து உயர்த்தி விட்டு எழும்பினாள்.

றோட்டோர மண்டபத்தில் கிழக்குச் சுவர்ப்பக்கம் 501 என்று இலக்கத்தில் கறுப்புப் பென்சிலால் கோணலாக எழுதியிருந்தது. அதன் கீழ் ஒரு ‘கபினட்’. அதன் மேலுக்கு சில கொப்பி புத்தகங்கள் கிடந்தன. மற்றும்படிக்கு வயர் பின்னிய சதுரமான மரக்கதிரைகளும் ஒரு டீப்போவும் இருந்தன. டீப்போவுக்கு இஞ்சால ஒரு பழைய பெட்சீட்டில் குழந்தையைத் தூங்கவைத்து முபாரிசின் உம்மா தூங்கிக் கொண்டிருந்தார். உம்மாவுக்கு அதிக வயதில்லையென்றாலும், ஒவ்வொரு ஆண்டும் குழந்தை சுமந்ததில் சோர்ந்து போனார். வயிறு எப்போதும் பெரிதாகவே இருக்கும், குழந்தைகள் பிறந்த பின்பும். அதனால் குழந்தை பிறப்பதற்கு ஓரிரு மாதங்களுக்கு முன்புதான் குழந்தை பிறக்கப்போகின்றது என்பது தெரியும். அது அவர்களுக்கு சௌகரியமாக இருந்திருக்கலாம். முடி கூட முன்னுக்கு நரைத்திருந்தது. முகத்தில் இலேசான தேமல் புள்ளிகள்.
குடில்பக்கம் இருந்து உள்ளே வந்த நிஸ்தார் “வேறொருத்தரும் இல்லையா?” என்று கேட்டுவிட்டு திண்ணைக்கு வந்தான். தண்ணீர் ஜக்கிருக்கும் மேசைக்கருகில்



கிடக்கும் கதிரையைப் பிடித்துக் கொண்டு நின்றான். பின்னர் சுவரோரமாய்க் கிடக்கும் இரு பணிந்த கதிரைகளில் ஒன்றிலிருந்தான்.

அங்கே வந்த சில்மியா படுக்கையறைக் கதவருகிலிருக்கும் உடைந்த கண்ணாடிக் ‘கபினேட்’ மேலிருக்கும் பழைய டேப் றெக்கோடரின் கட்டையை தட்டிவிட்டாள். மேசை அருகில் கிடந்த கதிரையில் வந்தமர்ந்தாள். நிஸ்தாரைப் பார்த்து “வேறொரு ஆளோடு விருப்பமெண்டா ஆரது’ என்றாள்.
‘சிபானி எண்டு – இயர் ரென்’ என்றான் நிஸ்தார்.
‘பேபி அவியிர கிளாஸ்தானே’ என்றாள்.
‘ ஓம்’
‘என்னோட நல்லம்’
சற்று நேரம் இருவரும் பேசாமல் இருந்தார்கள். நிஸ்தார் மெதுவாக மௌனத்தை உடைத்து ‘எப்பிடி நமக்கு நல்லாளா?’ என்றான்.
‘நல்லம் உங்களவிடக் கொஞ்சம் கறுப்பு’ என்றாள் சில்மியா.
‘பரவாயில்லெ’ என்றான் நிஸ்தார்.
‘ஏன் றிப்காவ புடிக்கல்லையா’ என்றாள்.
நிஸ்தார் அவளின் கண்களைக் கூர்மையாகப் பார்த்தான். அதிலிருக்க வேண்டிய சலனத்தை அவள் என்னமாதிரியாக மறைத்து விட்டாள். இலேசாகத் தடித்த அழகான உதடுகள். புதிதான சின்ன முகப்பருக்கள், குறைவான கூந்தல், மெல்லிய உடம்பு, யாரையுமே கிண்டல் செய்யத் தயாராகிக் கொண்டிருக்கும் இயல்பு.



RangaRakes tamilnavarasam.com

# 7

வெயில் முறுக்கில் தூசிக்காற்று பரவிக் கொண்டிருந்த போது பாடசாலை விட்டது. முன்னரென்றால் பசியொன்றுதானே அவள் ஞாபகத்திற்கு வரும். சிபானிக்கு திரும்பிப் பார்க்கவேண்டும் போல் இருந்தது. எல்லா நாட்களும் நிஸ்தார் பின்னால் வருதில்லை. பின்னால் மட்டும்தான் வருவான் என்றுமில்லை. ஒன்றுமட்டும் நிச்சயம் அவளை ஏறிட்டுப் பார்த்து தலைகுனிய வைத்துவிட்டு எதுவுமே பேசாமல் போய்விடுவான். அவள் தாயின் தங்கச்சியின் மகள் நஸீமாவும் சிபானியின் எதிர்பார்ப்பில் கண்ணாகத்தான் இருந்தாள். சிபானி தெருவின் மூன்று திருப்பங்களில் எதிர்பார்த்தாள். வரவேயில்லை பிரதான வீதியைக் கடந்தால் அவர்களின் வீடுதான்.

உடைமாற்றிக் கொண்டு வரும்போதுதான் நஸீமா வெடுக்கென்று கேட்டாள், 'என்ன வெரலையாக்குமா?' என்று.
சிபானி தெரியாதது போல் 'ஆர்' என்றாள்.
சிபானிக்குப் பட்டது. இதற்குப் பிறகு நானாக வீட்டில் சொல்லவில்லை என்றால் நிஸ்தாரைப் பற்றி நஸீமா சொல்லி விடுவாள். ராத்தா ஹாறிஜா ஓ/எல் பரீட்சை எழுதிவிட்டு முடிவுக்காகக் காத்துக் கொண்டு இருப்பவள். மற்ற அனைவரும் இரண்டு மணிக்கு முன்னர் பாடசாலையை விட்டு வருவார்கள். அதனால் தனியாகவே சாப்பிட அமர்ந்தாள். பீங்கானை விட சற்றுத் தூரத்தில் பாய் விரிபட்டுவிட்டதால் பீங்கானை அருகே இழுத்தாள். சாப்பிட முடியாதது போல் இருந்தது.

இரண்டு வீடுகளுக்குமிடையிலான இலேசான பிரிப்புடன் இரண்டு சகோதரிகளின் குடும்பங்கள் வாழ்ந்தன. நகர வாசனையில் இழந்து போன கிராமத்தின் முற்றத்தை நிவர்த்தி செய்வது போல் மொட்டைமாடிக் கலாச்சாரத்தின் சின்னக் கீறல் விழுந்திருந்தது. மொட்டைமாடியில் போய் சிபானி பார்த்துக் கொண்டிருந்தாள். எத்தனை நேரம் மனிதர்களைப் பார்த்துக் கொண்டிருப்பது. நஸீமாவின்



வீட்டுப்படியில் இறங்குகிறோம் என்ற நினைவு எரிச்சலை ஊட்டியது. முன் சின்ன விறாந்தையில் இருந்த உம்மா தையல்மெசின் ஊசிக்கு நூல் கோர்த்துக் கொண்டிருந்தார். கறுப்பு நூல் என்பதால் கஷ்டமாக இருந்தது. மின் விளக்கு எரிந்து கொண்டுதான் இருந்தது. மண்டபத்திற்குள் விளக்கு எரியவில்லை. பகலில் கூட அதற்குள் இருள் மண்டிக்கிடந்தது. வீட்டின் பச்சை வர்ணத்தின் குளிர், மனதை வருடுவது போல் இருந்தது. அந்த மனநிலையால் வெளிச்சத்தைப் போடாமலே 'விர்' என நடந்து மண்டபத்திலிருந்த ராத்தா ஹாறிஜா பார்க்காமலே நடந்தாள். எல்லா அறைகளும் பூசப்பட்ட பின்னும் பூசப்படாத அந்தத் தொங்கல் அறை வரைப் போனதும் சிபானிக்கு ஹாறிஜாவிடம் சொல்லிவிடலாம் என்று மீண்டும் தோன்றவே, புத்தகம் பார்த்துக் கொண்டிருந்த ஹாறிஜா அருகில் வந்தமர்ந்தாள்.
'எனக்கிப் பின்னால ஒரு பொடியன் தொடர்ந்து சுத்துறான்' என்றாள் சிபானி.
'உங்குட வகுப்புப் பொடியனா?, பேர் என்ன' என்றாள் ஹாறிஜா
'நிஸ்தார் எண்டுபோட்டு, ஏ/எல்'
'என்ன செய்றார்'
'ஒண்டும் கதைக்கிறல்ல. பின்னால வாறார். புள்ளைகள்தான் பகடி பண்ணுது'
'பின்னால வரணாம் எண்டு செல்லன்'
'நான் என்னசெஞ்சன், நான் றோட்டால போறன். எண்டு சென்னா என்ன செல்ல'
'அப்பிடி எண்டா கொஞ்சநாளைக்கி சுத்துவார். கிறிகிப்பாக்காட்டி உட்டுப்போட்டுப் பெய்த்திருவார்'
சிபானிக்கு ஆசுவாசமாய் இருந்தது. ஹாறிஜாவுக்கு யார் என்று பார்க்கவேண்டும் போல் இருந்தது. எழும்பி வெளிச்சத்தைப் போட்டாள் சிபானி.



RangaRakes tamilnavarasam.com

# 8

உபைத்தின் பத்திரிகைக் காரியாலயத்தில் ஜேசுதாசின் 'ஏழிசைக் கீதமே...! பாடல் அனேகமான நேரத்தைப் பிடித்துக் கொண்டிருந்தது. அந்தப் பாடலும், செய்தியும் கேட்பதற்காகவே அவர் நிறையவே அலங்கார பல்புகள் கொண்ட அந்த டேப்ரெகோடரை வாங்கியிருந்தார். அதோடு அங்கே சீட்டாடுவதற்கும் நண்பர்கள் வரத்துவங்கியதில் நிஸ்தார் இரண்டொருமுறை வந்து தூரநின்றே பார்த்துவிட்டு சனம் ஓய்ந்த நேரம் பார்த்து வருவான். அவன் போகும்போது உபைத் ஏசிக் கொண்டு சீட்டாடியவர்கள் சுருட்டாமல் போன பாயைச் சுருட்டிக் கொண்டிருந்தார். நிஸ்தாரும் சேர்ந்து பாயைச் சுருட்டினான்.

உபைத்தின் அறைக்கு முன்னிருந்த திண்ணையிலும் முன்பந்தலிலும் தான் இப்போது புழங்கினார்கள். நிஸ்தாரிடம் மேசையிலிருந்த ரப்பர் ஜக்கைக் கொடுத்து தண்ணீர் எடுத்து வரும் படி உபைத் கூறினான். கிணற்றடியைச் சுற்றி மதில் கட்டப்பட்டிருந்தது. தண்ணீர் அள்ளுவதற்குப் போட்டிருந்த தகட்டுவாளி அவிழ்ந்து கிணற்றுள் அமிழ்ந்ததினால் ஒரு ரப்பர் வாளி கட்டப்பட்டிருந்தது. அதை அமிழ்த்துவதற்கு பல முறை வாளியைத் தூக்கிப் போடவேண்டியிருந்தது. வாழிக்குள் தண்ணீர் ஏறினால் அள்ளுவது இலகுவாக இருந்தது. தண்ணீரை அள்ளிய பிறகுதான் வெள்ளைவெள்ளையாய் நீல நிற ஜக்கில் நாவரை வழிந்து போயிருந்தது. கிணற்றடி மண் அவ்வளவு துப்பரவு இல்லை என்று பட்டதும் வாசலுக்கு வந்து மண் எடுத்தான். கழுவி எடுத்தபோது சிக்கனமாக பாவித்தும் வாளியிலிருந்து தண்ணீர் முடிந்து போனது. அடுத்த முறை வாளியை நீரில் அமிழ்த்துவது முன்னரை விடக் கஷ்டமாக இருந்தது. உபைத் சில மாம்பழங்களுடன் கிணற்றடிக்கு வந்து வாளியிலிருந்த மீதித் தண்ணீரில் கழுவினார். நிஸ்தார் முன்னே போக, உபைத் கழுவிய மாங்காயை இரண்டு கைகளிலும் எடுத்து உதறியபடி உள்ளே போனார்.
'ஜொக்கு வெளிச்சிருக்கு' என்று உபைத் சிரித்தார்.

உபைத் செருப்புப் போடாமலே கிணற்றடிக்குப் போன காலில் ஒட்டிய ஈரமண்ணை தட்டாமலே வந்ததை நிஸ்தார் கவனிக்கும் போதுதான் பார்த்தான். திண்ணை நிறைய மண் கிடந்தது. தும்புத்தடியை எடுத்து கூட்டத்தொடங்கினான். உபைத் திண்ணையில் புதிதாகப் போடப்பட்ட மேசையில் ஒரு தாளை விரித்து



பாண்வெட்டும் பல்லுக்கத்தியால் சிரமப்பட்டு மாங்காயை வெட்டி, கூட்டிக் கொண்டிருந்த நிஸ்தாரிடம் வந்து ஒரு மாங்காய்த் துண்டைக் கொடுத்தார். தும்புத்தடி பிடித்த கை என்பதால் சற்று பெரிய துண்டுதான் ஒரே தரத்தில் வாயில் வைத்துவிட்டான். வாடகை வீட்டிலிருப்பவர்களுக்கு மரத்துப்பழம் சொந்தமில்லை. ஆனாலும் தெருவால் போகும்போது கல்லெறியத் தோன்றும் போதே வாசலில் இருப்பதை ஏவல் விலக்கல் பார்ப்பார்களா?

'இன்டைக்கு மினிஸ்டர் இர்ஷாட்டை பேப்பருக்கு 'இன்ரவி' ஒன்று எடுக்கப்போன. அவர் சென்னார் ஓங்கொட போட்டோ இப்ப இங்கிலிஸ் பேப்பர்லதானே வருகுது எண்டு. நீங்க வெளியே இருந்து சொல்றத உள்ளுக்கு வந்தே செய்றது லேசாயிருக்கும் எண்டும், கட்சிப்பேப்பர் ஒண்டு செய்யணுமாம் வரட்டாம் எண்டும் சொல்லியிருக்கார்'. பதினைந்தாம் திகதி வரை டைம் தந்திருக்கார்" என்று சொன்னபடி, நாட்காட்டியில் பேனாவால் பதினைந்தாம் திகதிக்கு வட்டமிட்டபடி 'ஆறாம் நம்பர் என்ட நியுமொலஜி நம்பர்' என்றார்.



RangaRakes tamilnavarasam.com

# 9

இப்திகாரை முதலில் நிஸ்தார் அவர்களின் பூசாத வீட்டிற்குள் படிக்கலாம் என்று கூட்டிவந்தான். அவன் அதிகநேரம் அங்கு படிக்காமல் அனேகமாக வெளியே போய்விடுவான். அதனால் இப்திகார் தனித்துப் போய்விடுவான். நிஸ்தாரின் முன் இரவுகள் உபைத்தின் பத்திரிகைக் காரியாலயத்தில் கழிந்தன. இப்போது பின் இரவுகளில் கூட வராமல் போனதில் அவர்களின் வாப்பா எழுப்புவதற்கு வர ஆரம்பித்தார். இப்திகாரின் இரவுகள் தனிமையானதால் முதலில் ஜிப்ரி கொப்பியுடனும் நீலப்போர்வையோடும் வந்தான். பின்னாடி புர்கான் சிவப்பு நிற தலையணையுடன். சுவர்களில் எல்லாம் திருக்குறளை எழுதியொட்டினால் இலகுவாக மனனமாகிவிடும் என்ற நிஸ்தாரின் திட்டத்தினால் ஜிப்ரி எழுதி ஒட்டியதில் இப்திகார் அடைந்த மகிழ்ச்சி அப்பப்பா.....

திருக்குறள் ஒட்டி சிலநாட்களில் நிஸ்தாரின் வெளிநாட்டிலிருந்த சகோதரர் அனுப்பிய பணத்தில் வீடு பூச ஆரம்பித்தார்கள். எல்லாத் திருக்குறளும் கழற்றி எடுக்கும்போது கிழிந்ததால் கசக்கி எறிந்து விட்டார்கள். வீடு பூசிய கையோடு ஈரச்சுவரில் வெள்ளையும் வைத்து விட்டார்கள். படிக்கும் அறை, பழைய படிக்கும் அறைக்கு அடுத்தபடியாக இருக்கும் சின்னதாக ஒரு ஜன்னல் உள்ள அறைக்கு மாற்றப்பட்டு விட்டது. வீட்டின் படுக்கையறை என்பதால் நல்ல விசாலமாக எடுத்திருந்தார்கள். பாத்ரூம் பக்கம் கதவில்லை என்பதால் மட்டையால் அடைத்து அதில் அர்ஜுனாவும், அரவிந்தடிசில்வாவும் இருக்கும் ஒரு போஸ்டரும் ஒட்டப்பட்டிருந்தது. நிலத்தில் புதிதாகப் போடப்பட்டிருந்த திண்ணையில் ஈரம் கசிந்து கொண்டிருந்தது.

அறை மாறியதைக் கொண்டாடும் முகமாக மூன்றுபோத்தல் 'பியர்' வாங்கினார்கள். அது ஒரு செவ்வாய்க்கிழமை. சலீத்தும், நிஸ்தாரும் அதற்கு முன்னரே பாவித்திருந்தாலும் புர்கான், ஜிப்ரி, இப்திகார் மூவருக்கும் புதிது. புர்கானை சலீத் 'பியர்' வாங்க கூட்டிக்கு போனது மிக வற்புறுத்தி என்றாலும் புர்கான் வாங்கிவந்ததன் பின்னர் காட்டிய பெருமிதங்களை என்னசொல்வது.

மெல்லிய நிலா வெளிச்சம். பழைய வீட்டை மெதுவாகத் திறந்து நிஸ்தார் பீங்கான்களை எடுத்தான். சத்தம் கேட்டுவிட்டது உம்மா. 'என்னது' என்றார்.
'உம்மா சின்னச் சாப்பாடு ஒண்டு பிங்கான் எடுக்கன்' என்றான் நிஸ்தார்.



'போகக்கொள மறந்திடாம கதவ பூட்டிப்போட்டுப்போ செரியா' என்றா உம்மா.

கட்டிலில்தான் ஐந்து பேரும் இருந்தார்கள். கட்டில் பலகை நிசப்தத்தை இடைக்கிடை உடைத்தது. முதலில் சாப்பிட்டார்கள். உறைப்பு அதிகம், விக்கத் துவங்கிவிட்டது.
'என்னடா ஒறப்பு இப்பிடிஇரிக்கி' என்றான் இப்திகார்
'பியருக்கு முந்தி சாப்பிர்ரண்டா இப்பிடித்தான் நல்ல ஒறப்பா இருக்கனும்' என்று அனுபவசாலி போல் புர்கான் சொன்னதற்கு,
'எங்கிட மச்சான் சென்ன பொறகு என்ன?' என்றான் சலித்.

பியருக்கு சோடா ஊற்றும் மகத்தான வேலையை ஜிப்ரிதான் ஆரம்பித்து வைத்தான். எல்லோரும் அவரவருக்கு ஊற்றிக் கொண்டார்கள். குடித்து முடிந்தது. எல்லோரும் எழும்பி நின்று பார்த்தார்கள் ஒருத்தருக்கும் கால் தள்ளாடவில்லை. புர்கான் இலேசாக நடந்து பார்த்தான். தள்ளாடவே இல்லை. ஆடவேண்டும் போல் இருந்தது. மெதுவாக செய்து பார்த்துவிட்டுச் சிரித்தான். ஜிப்ரி 'பியருக்கு ஒன்றும் செய்யாது' என்றான்.
நிஸ்தார் எழும்பிச் சென்று கிளாசைக் கழுவி கிணற்றில் வைத்துவிட்டு வந்தான். ஒரு போத்தலை முன்னுக்கு இருந்த வெட்டை வளவில் புர்கான் எறிந்தான். சலித் 'ஒரு புறம் வேடன் மறுபுறம் நாகம்...' என்ற வாணி ஜெயராமின் பாடலை பாட ஆரம்பித்தான். 'கேற்றை' நிஸ்தார் அவர்களின் வாப்பா பூட்டி விடுவதால் எல்லோரும் மதிலுக்கு மேலால் பாய்ந்து கொண்டு சாறனை மடித்துக் கட்டிய படி நடந்தார்கள். தெரு விளக்குக் கம்பத்தை அண்மிப்பதற்குகிடையிலேயே வெறும் போத்தல்களை எறிந்து விட்டார்கள்.

நிஸ்தாருக்கு அதிகாலையிலே விழிப்புத் தட்டி விட்டது. ஜிப்ரியின் போர்வைக்குள்தான் அவனும் படுத்திருந்தான். இரவு ஜிப்ரியின் பல்லால் நீவி நீவி சிவந்த உதட்டில் உதட்டை வைத்த போது குளிர்ந்திருந்ததினால் வந்த அருவருப்பு இன்னும் மனதில் இருந்தது. புர்கானும் சலீத்தும், இப்திக்காரும் ஒரு போர்வைக்குள்தான் படுத்திருந்தார்கள். வெளியே வந்து பார்த்தான். உழவு இயந்திரம் தள்ளுவதற்கு எழுப்பாமலே வெளியே போய் விட்டது. எழுப்பி உழவு மெசினைத் தள்ளிவிட்டு அதிகாலையில் படிக்கச் சொல்வார் வாப்பா. 'கேற்' 'ஆ' என்று திறந்து கிடந்தது. போய்ப் பூட்டி விட்டான். வானம் ஈரநீலத்தை



RangaRakes tamilnavarasam.com

அப்போதுதான் இழக்க ஆரம்பித்தது. படிக்கலாம் என்று நினைத்தான். பாடல் கேட்க வேண்டும் போல் இருந்தது. அறையில் 'டேப்' வசதி இல்லை என்பதால் ராசு நல்ல பெருமாளின் 'எண்ணங்கள் மாறலாம்' என்ற கதைப் புத்தகத்தை எடுத்து வாசிக்க ஆரம்பித்தான்.

புர்கான் 'நல்லா விடிஞ்சிற்றா' என்றபடி முகத்திலிருந்த போர்வையை உதறினான். சலீத்தும் இப்திகாரும் சொல்லி வைத்தாற்போல் புரண்டு குப்புறப் படுத்தார்கள். புர்கான் எழுந்து மேசையில் கிடந்த உடைந்த துண்டுக் கண்ணாடியில் முகத்தைப் பார்த்து விட்டு தலையை வாரிக் கொண்டான்.
கொப்பியை எடுக்கும்போது
'அறாம் ஒன்டுமில்ல. இரவு செஞ்சத கடசும் முதலுமா நல்லாச் செஞ்சிருக்கலாம்' என்றான் புர்கான்.
நிஸ்தார் அதற்கு, 'ஓண்டா' என்றான்.
புர்கான் 'ஜிப்ரி டேய்.... சலீத் டேய்...' என்று எழுப்பத் தொடங்கினான்.



# 10

நிஸ்தாரில் சற்றுக் கூடுதலாகவே சிபானியின் எண்ணம் அலைமோதியது. 'தெருவின் திருப்பத்திலாவது எமது கண்கள் சந்தித்தன' என்ற கவிதையை சிபானியிடம் முபாரிசின் தங்கச்சி பர்சானா காட்டியதும், எதுவுமே பேசாமல் போன அன்று விட்டு மறுநாள் காலைக் கூட்டத்திற்கான பனியில் நனைந்த உயரமான புற்கள் சப்பாத்துக்களையும், வெள்ளை றவுசர்களையும் நனைத்து அசிங்கப்படுத்தும்போது கால் பெருவிரலில் சிறிய காயக் கட்டுடன் சிபானி வந்தாள். புல்லுக்குள் வரிசையாக வரும்போது காலை வைப்பது சிரமமாக இருந்தது. அதிபர் பேச ஆரம்பித்து சில நிமிடங்களில் பெண்களின் வரிசையிலிருந்து ஒரு சலசலப்பு வந்து அடங்கியது. நிஸ்தாருக்குப் பிறகுதான் தெரிந்தது, காலில் போத்தல் விழுந்து காயம் வந்ததும், பிறகு காலைக்கூட்டத்தில் பள்ளியில் வைத்து மயங்கிவிழுந்ததும்.

அதன் பிறகு அடுத்தவார இறுதிப்பகுதியில் தான் பள்ளிக்கு வந்தாள். புதிதாக பர்தா அணிந்து வர ஆரம்பித்திருந்தாள். தூய வெண்ணிறம். பர்தா சற்றுப் பெரிதாகவே இருந்தது. அன்று நிஸ்தாரின் வகுப்பறைப் பக்கமாய் இரண்டொருமுறை வந்திருந்தாள். முபாரிஸ்தான் ஓடிவந்து சொன்னான் நிஸ்தாரிடம்,
'சிபானி வந்திரிக்கா அவ இன்னா போறா' என்று
தென்னோலைக்கு மறைவில் நின்று மேற்பல்லால் உதட்டைக் கடித்தபடி பார்த்துக்கொண்டு நின்றவள், கைக்குட்டையை உதறி மடித்தாள். நிஸ்தார் வகுப்பறைக் கம்பிவலையில் முகத்தை வைத்தபடி பார்த்துக் கொண்டிருந்தான். அவளுடைய நண்பி வந்து சேர்ந்ததும் மீண்டும் நடந்து போனவள். நிஸ்தாரின் பக்கம் வேகமாய்த் திருப்பிப் பார்த்துவிட்டு நடந்தாள்.



RangaRakes

tamilnavarasam.com

நிஸ்தார் சனிக்கிழமையன்று 10.30க்கு சிபானிக்கு ரியூசன் கிளாஸ் இருப்பதை கவனத்தில் கொண்டு உபைத்தின் பத்திரிகைக் காரியாலயத்திற்குப் போனான். ஜன்னல் திறந்திருந்தது. உள்ளே யாருமில்லை. கதவு பூட்டியிருந்தது. உபைத் வருவான் என்ற எதிர்பார்த்திருந்தான் நிஸ்தார். வரவில்லை. ஜன்னலைத் திறந்து போட்டுவிட்டு இவ்வளவு நேரம் எங்கு போனார் என்று யோசித்தபடியே வெளியிறங்கும்போது சாம்பல் நிறத்தில் நீலச் சதுரக் கோடிட்ட சேட்டும், பழுப்பு நிற டெனிம் ரவுசரும் அணிந்திருந்தான்.

எதிர்பார்த்திருந்தபடியே சிபானியும், நளிமாவும் தெருவில் வந்தார்கள். நீர்க்குழியை கடக்க இருவரும் இருபக்கமாகத்தான் நகரவேண்டும். நகரும்போது சிபானி நிஸ்தாரைப் பார்த்து,
'இஞ்ச ஒங்கொளோட கொஞ்சம் கதைக்கனும்' என்றாள்.
நிஸ்தாருக்கு நெஞ்சுக்குள் இடித்தது.
பைசிக்கிளில் இருந்தபடியே காலைக்குத்தி, 'என்ன' என்றான்
'நீங்க எல்லாருக்கிட்டையும் எனக்கு ஒங்களோட விருப்பம் எண்டு செல்றயளாம்' என்றாள் சிபானி.
நிஸ்தார் சுட்டுவிரலை நீட்டியபடி, 'நான் அப்படி ஒத்தருக்கிட்டையும் செல்லல்லெ. நான் பொய் செல்ரெல்ல' என்றான் நிஸ்தார்.
சிபானி எதுவுமே பேசாமல் நின்றாள்.
நிஸ்தார் 'நாம பிறகு சந்திப்போம். வாறன்' என்று சொல்லிவிட்டு பைசிக்கிளை மிதித்தான்.

முபாரிசின் வீட்டைத் தாண்டித்தான் சிபானி கிளாசுக்குப் போகவேண்டும் என்பதால், நிஸ்தார் முபாரிஸ் அவர்களின் வீட்டில் ஏற்கனவே றஸீதாவிடமும், றிஜிஸ்ஸிடமும் சிபானியைக் காட்டுவதாகச் சொல்லியிருந்தான். சில்மியாவும், பர்சானாவும் சிபானியிடம் இருந்த உறவை கொஞ்சம் பலப்படுத்திக் கொண்டார்கள். டியூசன் கிளாசுக்கு வரும் நேரம் அடுப்படியில் இருந்த றஸீதாவிடம் நிஸ்தார் வந்து,
'றிஜிஸ் எங்க நீங்களும் சிபானியைப் பார்க்கனும் எண்டலவா, வாங்கோ' என்றான்.
'நாங்க நேத்துப் பார்த்திட்டம். என்னடா அப்பிடி முள்ளு, கடும்பெருமையாக்குமா? நிமிர்ந்து உத்துப்பாத்துப்போட்டு அறாம் சிரிக்கயில்லே பெய்த்தா. செல்லு மதினிமாரையும் மாமியாமாரையும் கண்டா புள்ளா சிரிக்கனும் எண்டு' என்றாள் றிஜிஸ்.



நிஸ்தாருக்கு நின்று கதைக்க நேரமில்லாமில்லை. வருகிறாளா என்று பார்க்க ஓடினான். முதுகை வெளிப்பந்தலின் கம்பிக்காலில் சாய்த்தபடி நின்றான். நளிமாதான் முதலில் வந்தாள். பின்னால் சற்றுத் தாமதித்தே வந்த சிபானியின் கண்கள் நிஸ்தாரைத் தேடின. அவனைக் கண்டதும் சட்டென்று குனிந்து கொண்டாள். நிஸ்தாருக்கு இன்னுமொரு தடவை முன்னால் வந்து சிபானியைப் பார்க்க வேண்டும் போல் இருந்தது.

சிபானி முபாரிஸ் அவர்களின் வீட்டுக்கு முன்னால் கடந்து செல்லும் வீதி போல் இரண்டு வீதிகளைக் கடந்து மூன்றாவது தெருவால் மடிந்து, நேராய்ப்போய் பிரதான வீதிக்கு வரும்போது, நிஸ்தார் முபாரிஸ் அவர்களின் வீட்டிலிருந்து பிரதான வீதியால் அவளை சந்தித்து விட்டு வருவது இதற்கு முன்னர் பல தடவை நடந்திருக்கிறது. அப்படிக் குறுக்கறுத்து விட்டு வரலாமென்று நினைத்தான். இன்று இன்னுமொரு தடவை என்பது அருவருப்பாய் இருந்தது.

நிஸ்தார் மண்டபத்துக்குள் நுழையுமுன்பே ' ஒங்களப்பத்தி சிபானி அவியிர வகுப்புப் புள்ள ஒன்று கதைச்சிச்சி... வாங்கோ' என்றாள் பர்சானா.
'என்ன எண்டு செல்லுங்கோ' என்றான் நிஸ்தார்.
'அந்த வகுப்பிலேயே ஒங்கள எல்லாருக்கும் புடிக்குமாம். சிபானிதான் ஊம மாதிரி இன்னும் ஒண்டும் கதைக்கல்லையாம். அனேயமா விருப்பமாத்தான் இருக்குமாம். நீங்களும் ஒண்டும் கதைக்கிறல்லையாம். நல்ல சோடி என்று நக்கலடிக்குது புள்ளையள்' என்று சிரித்தாள்.

முபாரிஸ் அவர்களின் குடும்பத்திற்கென்று பொதுவான முக அமைப்பு இருந்தது. பர்சானா முபாரிஸின் கறுப்பும், தடித்த முகமும் கலகலப்பான இயல்புமுடையவள். றிஜிஸ் கடும் வெள்ளை, முகத்தில் சில கரும்புள்ளிகள், சுருண்ட கேசம், நிமிர்ந்த உடம்பு.

சில்மியாவை அன்று காணவில்லை. அனேகமாக கிளாசுக்குப் போயிருக்க வேண்டும். இல்லை என்றால் தாயின் சகோதரியின் வீட்டில் ரீ.வி. பார்க்கப் போயிருக்க வேண்டும்.



RangaRakes tamilnavarasam.com

# 11

உபைத் கொழும்பிற்குப் போய் அமைச்சர் இர்சாட்டை சந்தித்துவிட்டு வந்து, அவசர அவசரமாக அறையை விட்டு வெளியேறாமலே எழுதிய நாற்பத்தி மூன்று பக்கப் புத்தகத்தை, ஒரு மணிக்கு மட்டக்களப்பு பஸ்ஸில் ஏறுவதற்கு முன் பிறிண்ட் எடுத்துத்தர வேண்டும் என்று டைப்செட் செய்பவரிடம் சண்டை போட்டுக் கொண்டிருந்தார். பயணத்திற்கு உடுத்து தயாராகவே இருந்தார். நிஸ்தாரைக் கண்டபின்புதான் அவரையும் அழைத்துச் செல்லலாம் என்று நினைத்தார்.

'உங்கள காலையிலிருந்து தேடினன். நான் மட்டக்களப்புக்குப் போப்போறன். வாறயளா?' என்றார் உபைத்.

நிஸ்தார் எதுவுமே யோசிக்காமல் 'வாறன்' என்றான்.

இன்னும் மட்டக்களப்பிற்கு நிஸ்தார் போயிருக்கவில்லை. சாதாரணமாக போகக்கூடிய சூழலும் இல்லை. அவனுக்கு போகக்கூடிய நிர்ப்பந்தங்களும் இல்லை.

'பஸ்ஸிக்கி இன்னம் காமணித்தியாலம்தானிருக்கி. ஒங்குட பைசிக்கிள வெச்சிப்போட்டு வாங்க ஒபிஸில' என்று உபைத் நிஸ்தாரிடம் பத்திரிகைக் காரியாலயத் திறப்பைக் கொடுத்தார்.

'டைப் செட்டிங்' செய்தவர் கடைசிப் பிறிண்ட் எடுக்குமுன்னே, நிஸ்தார் பைசிக்கிளை வைத்துவிட்டு நடந்து வந்து விட்டான். பையில் ரியூசன் பீஸ் நூறு ரூபாய் இருந்தது. அதுவும் அவனைக் கொஞ்சம் உசாராக்கியிருந்தது.

'ஊட்ட செல்றல்லையா?' என்றார் உபைத்.

'சென்னா உடமாட்டாங்க, செல்லத்தேவல்ல' என்றான் நிஸ்தார்.

சோம்பல் முறித்துக் கொண்டு வெளியிறங்கிய டைப்செட் செய்பவர் றோட்டுக்குப் போனதும் 'உபைத் பிறதர் பஸ்வருகுது' என்றார்.

'நிஸ்தார் பேக்க எடுங்கோ' என்றார் உபைத். அந்த பேக் வர்ணப்பட அட்டையால் செய்து கறுப்பு நாடா போடப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு பஸ் ஸ்டாண்டில் உள்ள ஹொட்டலில் ரீ குடித்து விட்டு வெளியே வந்து பஸ்ஸிற்குக் காத்துக் கொண்டிருக்கும்போதுதான் நிஸ்தார் கேட்டான். 'நாம ஆர சந்திக்கப்போறம்' என்று.



உபைத்திற்கு நிஸ்தாரிடம் உள்ள அழகே இதுதான்.

'ஏன் இவ்வளவு நேரம் கேக்கல்ல'

'கேக்கனும் போல இல்ல'

'பழைய எம்.பி ஸியாஉர் றஃமான் என்கிறவர்க்கிட்ட போறம்'

அதன் பிறகு பேச்சுத் தொடரவில்லை. ஏறாவூரை நோக்கி ஒரு பழைய 'எல்ப்' வேனில் போனார்கள். திடீரென்று மழை இருட்டிப் பெய்தது. றோட்டோரப் புற்கள் நனைந்தன. மழை நின்றபோதும் வெளிக்கவில்லை. சிறிய மழை இருட்டும் இரவின் இழையும் கலந்து கொண்டன.

வேனிலிருந்து இறங்கி உபைத் வேகமாய் நடந்தார், நிஸ்தாரும் ஈடுகொடுத்து நடந்தான். கொஞ்ச தூரம் போனதும் ஒரு வயது போனவரிடம்,

'ஸியாஉர் றஃமான் எம்பிர வீடெது' உபைத் கேட்டார்.

'அந்தாரிக்கம்பி' என்றார்.

வேன் இறக்கிவிட்ட இடத்திற்கு நேரேதான். மீண்டும் திரும்பி நடந்தார்கள். பாதையின் தார்ச் சூட்டில் மழை ஆவியாகிக் கொண்டிருந்தது.

உள்ளே நுழையும்போது ஒருவர் வந்து,

'உபைத்தானே வாங்கோ'

உங்களத்தான் மச்சான் காத்திருந்துபோட்டுப் போறார், இரிங்கோ இன்னா வந்திடுவார்' என்றார்.

'என்ன பிந்தின' என்றார் வீட்டுக்காரர்,

'ஏறாவூருக்கு வாகனம் கஷ்டமாயிருந்திச்சி அதான்' என்றார் உபைத்.

'ஒங்குட கட்டுரையெல்லாம் பாத்திருக்கன். பிறகு காணல்ல, இப்பதான் மச்சான் 'புது உணர்வு' என்று ஒரு பேப்பர் நடத்துறதா சென்னார்' என்றார் வீட்டுக்காரர். உள்ளே இருந்து ரீ வரும்போது வெளியே இருந்து 'ஹோண்' சத்தம் கேட்டது. ஏற்கனவே உபைத்தை ஸியாஉர் றஃமான் கண்டிராதபோதும் ஆளைப் பார்த்தவுடன் யூகித்துக் கொண்டு 'அஸ்ஸலாமு அலைக்கும் உபைத்' என்று கையைக் கொடுத்தார்.

'வஅலைக்குமுஸ்ஸலாம்' உபைத்தும் கைகளைக் கொடுத்தார்.

உபைத் எழும்பும்போது நிஸ்தாரும் எழும்பி நின்றார். ஸியாஉர் றஃமான் சிரித்தபடி நிஸ்தாரிடமும் கையைக் கொடுத்தார்.

உபைத்திடம் 'இவர்...? என்று நிஸ்தாரைக் காட்டிக் கேட்டார்.

'இவர் நிஸ்தார் எண்டு, நண்பர்' என்றார் உபைத்.



RangaRakes tamilnavarasam.com

முன்னர் ரீ கொண்டு வந்த பையன் மீண்டும் சியாஉர் றஃமானுக்கு ரீ கொண்டுவந்ததைக் கண்டதும்
'இல்ல... வேணாம்... அவன் புடிச்சித் தந்தான். குடிச்சிப்போட்டுத்தான் வாறன் மச்சான்' என்றார் வீட்டுக்காரரைப் பார்த்து.
சியாஉர் றஃமான் தனது சிவப்பு நிற ரீ சேட்டைக் குனிந்து பார்த்து விட்டு
'இப்பையும் இந்தக்கலர் ரீ சேட்தான் தாறாங்க ஆக்கள்' என்றார்
தடித்த உதடுகள், கண்ணைச் சிறிதாக்கும் புன்னகை, அகன்ற நெற்றி, சுமாரான நிறம் பருமனான உடம்பு, புது வெள்ளைச் சாறன் உடுத்திருந்தார்.
'வீட்டபோவம் என்றதும்' நிஸ்தார் தான் முதலில் எழும்பினான். சியாஉர் றஃமான் தான் புது 'டொயாட்டோ' வேனை ஓட்டினார். அவருக்கு அருகில், முன்னால் T-56 துப்பாக்கியுடன் இருந்த அவரது செக்குறுட்டி ஏறிக்கொண்டார். உபைத்தும், நிஸ்தாரும் பின்னால் ஏறிக்கொண்டார்கள்.

இடியப்பம் குண்டு குண்டாய் இருந்தது. அக்கரைப்பற்றுக் கடையப்பம் என்றால் பன்னாடைபோலும், வீட்டப்பம் என்றால் தட்டையாகவும் தடிப்பாகவும் இருக்கும். இடியப்பம் என்றால் பொதுவாக அவை அப்படித்தனே இருக்கும். உபைத்தான் நிஸ்தாருக்கும் பரிமாறினார் சியாஉர் றஃமான். 'கடும் கூச்சமா ஆளிற்கு?' என்றார் நிஸ்தாரைப்பார்த்து
நிஸ்தார் எதுவுமே பேசவில்லை சிரித்தான்.
சியாஉர் றஃமானைப் பார்த்து. 'மினிஸ்டர் சுய விமர்சனம் செய்ய றெடியா இருக்கார். கீழ் மட்டத்திலேதான் மோசம். தனி கொந்தராத்து அரசியல்' என்றார் உபைத்.
'முஸ்லிம்கள்ள அரசியல் எண்டா என்ன எண்டு கட்சியில இரிக்கிற நிறையப்பேருக்குத் தெரியாது. மக்களும் அப்படித்தான். தொழிலும், புனர்வாழ்வுக் காசும் இருந்தாப் போதும். அதுக்கெண்டே அலைறானுகள். எப்போதாவது தோள்களில் அடிக்கும்போதுதான் கட்சியின் அரசியல் ஞாபகமே வருது. அப்போதுதான் கேள்வி கேட்க ஆரம்பிக்கிறார்கள்' என்றார் சியாஉர் றஃமான்.
நிஸ்தார் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.



'தலைவர் நெனச்சிக்கிட்டிருக்கார் மக்களுக்கிட்ட தேர்தல் வரக்கொள பேசினா சரி மீண்டும் அந்தப்பழைய அலை வருமெண்டு. ஒருநாளும் சும்மா இருந்து திண்டுக்கிட்டிருந்த சாம்ராஜ்ஜியங்கள் நிலைத்திருந்ததாக ஆரும் சொல்ல முடியாது. கட்சியைக் கீழ் மட்டத்திலிருந்து கட்டியெழுப்பவில்லையென்றால் அடுத்து வரும் தேர்தலில் முஸ்லிம்களின் ஒரே கட்சியும் சிதைந்து போய், முஸ்லிம்களின் ஒரே ஸ்தாபனமும் சிதைந்து போய் மீண்டும் ஒரு பாரிய நெருக்கடிக்கு உட்பட்டு பாரிய தாக்குதலுக்குட்பட்ட பின் முஸ்லிம்களும் தமிழர்கள் மாதிரி துவக்குத் தூக்கிப் போராடவேண்டிய காலம் இமை வெட்டுவதற்குள் வந்துவிடும்.' என்றார் உபைத்.

'தமிழர்கள் ஒரு தரப்பினருக்கு எதிராகத்தான். நாம அப்பிடியில்லையே...' என்றார் சியாஉர் றஃமான்.
நிஸ்தார் சாப்பிட்டுவிட்டு கைகழுவி விட்டான். உபைத் நிஸ்தாரைப் பார்த்து
'தயிரிருக்கி கரைக்கெல்லையா?' என்றார்
நிஸ்தார் ' தேவல்ல' என்றார்
'வழமையில கரைக்கிறல்லயா? எல்லாம் சாப்பிடலாம், சாப்பிடணும்' என்றார் சியாஉர்றஃமான்.
'கரைக்கான் – இப்ப புள்ளா சாப்பிட்டன்' என்றான் நிஸ்தார்.
'வாயிலயிருந்து ஒரு வார்த்த வாறத்திற்கு எவ்வளவு நேரம் எடுத்திரிக்கி பாருங்கோ' என்றார் சியாஉர் றஃமான்.
நிஸ்தாருக்கு ஒரு வாழைப்பழத்தை இடக்கையால் தூக்கிக் கொடுத்தார்.



RangaRakes tamilnavarasam.com

வேன் போய் நின்றது. உபைத்தின் பத்திரிகைக் காரியாலயம் போல்த்தான் வீடு. முன்னுக்கு ஒரு அரசசார சனசமூக நிலையத்தின் பெயர்ப் பலகை இருந்தது. அதைப் பார்த்ததும் உபைத் பெயர்ப் பலகையின் பக்கம் போய் கையைக்காட்டி
'நம்முட ஆக்கள் இந்த விசயத்தில என்ன மோசம் தெரியுமா' என்றார்
'என்னத்திலதான் உருப்படி' என்றார் சியாஉர் றஃமான்.
செக்குறுட்டிக்காட் ஓடிவந்து கதவைத் திறந்தான். உள்ளே போய் எல்லா பல்புகளையும் போட்டான். முன் கதவு வீட்டை விடவும் அதிக பழையது போல் இருந்தது. முன்னறையில் ஒரு நீளமான வாங்கு கிடந்தது. ஒரு மூலையில் தண்ணீர் காயாமல் இருந்தது. நிஸ்தார் பேக்கை வாங்கில் வைத்தான். சியாஉர் றஃமானும் உபைத்தும் உள்ளறையில் கிடந்த மேசையில் எதிர் எதிராக அமர்ந்தார்கள்.

நிஸ்தாரை 'பேக்குக்குள்ள அந்த புக் புறூப் இரிக்கி எடுத்துக்கு வாங்கோ' என்றார் உபைத்
'அந்த வாங்கத் தூக்கிக்கிட்டு வந்து இஞ்சால போடுங்க' என்றார் சியாஉர் றஃமான் செக்குறுட்டியிடம். அவன் அதைத் தூக்குமுன் கையிலிருந்த துப்பாக்கியை ஒரு மூலையில் வைத்தான். வாங்கைப் போட்டதும் அதில் நிஸ்தார் இருந்தான். சியாஉர் றஃமான் சில வெள்ளைக் காகிதத்தை எடுத்து மேசையில் வைத்தார். கையில் பேனா இருந்தது. தனது இயக்க ரீதியான வாழ்வு பற்றிப் பேச ஆரம்பித்தார் . சில நிமிடங்களில் நிஸ்தாருக்கு நித்திரை வரவே வாங்கில் படுத்துக் கொண்டான். தன் நாவில் நஞ்சு சுரக்கும் வரை பின்னால் வேறு இயக்கத்தினர் துரத்தியது. முஸ்லிம் ஏரியாக்களில் தன்னைத் தேடும் போது தமிழ் வீடுகளில் அவர் அடைக்கலம் புகுந்தது. தனது பெயரைச் சொல்லும் போதே இப்போதும் இயக்கத்தின் பெயர் ஒட்டிக்கொள்வது என்று எல்லாவற்றையும் சியாஉர் ரஹ்மான் கொட்டித்தீர்த்த பின்புதான், உபைத் தனது புரூப் பிரதிகளை வாசிக்க ஆரம்பித்தார்.

செக்குறுட்டிக்காட் பக்கத்துவீட்டுக்கு 'ஹீட்டர்' வாங்கப்போனவன் மழையில் நனைந்து வந்தான். அதன் பின்னர்தான் மழை அதிகரித்தது. அவன் தேநீர் ஊற்றி கொடுக்கும் போது நேரம் இரண்டு மணியிருக்கும். உபைத் நிஸ்தாரை எழுப்பினார்.
'நிஸ்தார் நிஸ்தார்'
'நித்திரை கொறையத்தான் பஸ்ஸில வந்த டையட்' என்றார் சியாஉர் றஃமானைப் பார்த்து உபைத்.



'பிளேண்டி இரிக்கி குடிங்கோ' என்றார் நிஸ்தாரைப்பார்த்து சியாஉர் றஃமான்.
'எல்லார்ர பாய் தலகாணியும் வேனுக்க இரிக்கி கொண்டாங்கோ' என்றார் செக்குறுட்டியைப் பார்த்து சியாஉர் றஃமான்.
செக்குறுட்டிக்காட் எழும்பிக் கொண்டு ஓடினான் வேனைத் திறந்து உள்ளே இருந்த பாய் தலகாணியை அள்ளிக்கொண்டு வெளியே வந்தான். கூரையிலிருந்து மழை ஓய்ந்த பின் சில துளிகள் வீழ்ந்தன.
'நிஸ்தார் தூங்குரண்டா தூங்கலாம்' என்றார் சியாஉர் றஃமான்
'பரவால்ல' என்றான் நிஸ்தார்.
உபைத் மீதியை வாசிக்க ஆரம்பித்தார்.

காலையில் உபைத்தான் முதலில் கண்விழித்தார். நிஸ்தாரை எழுப்பும் போதே சியாஉர் றஃமானும் எழும்பினார். தலையணையைப் பாய்க்குள் வைத்து சுருட்டியதைக் கண்டு நிஸ்தாரும் அவ்வாறு செய்தான். முதலில் கிணற்றடிக்கு உபைத் ஒரு சிகரட்டைப் பற்றவைத்துக்கொண்டு போனார். நிஸ்தார் பிறகு போகும்போது உபைத் வாளியில் தண்ணீர் அள்ளிக் கொண்டு அப்போதுதான் கக்கூஸ் பக்கம் போனார். நிஸ்தார் பற்பொடியால் பல்லைத் தீட்டி கழுவியபிறகுதான் பார்த்தான். விரல்கள் பற்பொடியின் சிவப்பு நிறத்தில் இருந்தன. கிணற்றுக் கொட்டில் விரலை உரசிக் கழுவினான்.

சியாஉர் றஃமான் தலையணையை மடியில் வைத்தபடி இருந்தார். உபைத்தின் டவலால் முகத்தைத் துடைத்தபடி நிஸ்தார், சியாஉர் றஃமானைப் பார்த்துக் கேட்டான். 'நீங்க இயக்கத்திற்குப் போனது அறிவு பூர்வமாகத்தானா? இல்ல துவக்குக் கவர்ச்சியிலா? போனதற்குப் பிறகு இயக்கங்களின் 'பெக்கிறவுண்டிலதான் இந்த 'ஐடியோலஜி' வந்ததா?' என்று.
'நான் பார்த்தன் இரவு உபைத்தோட ஒரு பையன் வந்து தூங்கிறான் எண்டு. இது கடும் விளக்கமாயிருக்கே கதையெல்லாம் கேட்டயளா' என்றுவிட்டுச் சிரித்தார். நிஸ்தாரும் சிரித்துவிட்டு முகத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான்.
'எங்கிட உம்மா என்னைத் தாலாட்டினதே மஸ்தான் சாயுபு பாடல்களால்தான். மிச்சம் சின்னப்பருவத்திலேயே எனக்கு சிவப்புநிறப் புத்தகங்களோடு உறவு இருந்திச்சி அதற்குப்பிறகு தமிழ் மக்களோடதான் என்னோட உறவுகள் அதிகம். அதனால் தமிழ்



RangaRakes tamilnavarasam.com

இயக்கங்களின் வருகை என்னிடம் ‘குயிக்காக’ வந்து சேர்ந்திடுச்சு. அப்படிச் சேர்ந்ததில் நான் இருந்த இயக்கமும், கொள்கை ரீதியாக பலமானதென்று எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப் பட்டது’ என்றார்.
கிணற்றடி வாளிச்சத்தம் கேட்கவே சியாஉர் ற:ஃமான் எழும்பி,
‘உபைத்... நிஸ்தார் வாயைத் திறந்து அவர்ர கேள்வியைக் கேட்டுட்டார்’ என்றார்.

ஒரு வயோதிபர் வேனைக் கண்டு கையைப் போட்டார் கையில் பன்பேக் இருந்தது. சியாஉர் ற:ஃமானின் வேன் என்று தெரிந்துதான் கைபோட்டிருந்தார். இல்லையென்றால் இந்தப் புதுவேனைப் பார்த்துக்கொண்டு கைபோட்டிருக்கமாட்டார்.
‘எங்க சுகமா’ என்றார் சியாஉர் ற:ஃமான்
‘பரவாயில்ல வாப்பா’ என்றார் வயோதிபர்
‘பருப்பிருக்கா’ என்றார் சியாஉர் ற:ஃமான்
முன்னாலிருந்து கேட்டது முதியவருக்குக் கேட்காததால்
‘விளங்கல்ல வாப்பா’ என்றார் வயோதிபர்
‘பருப்பிருக்கா’ என்றார் உபைத். உபைத்திற்கு அருகில் தான் இருந்தார் முதியவர்
‘ஓம்’
‘எங்க எடுங்க’ என்றார் உபைத்
‘எவ்வளவு போட்ட பக்கட்? அம்பது ரூபாட பக்கட் தரயா’ என்றபடி பைக்குள் இருந்து எடுத்து உபைத்திடம் கொடுத்தார் . உபைத் காசைக் கொடுத்தார்.

மட்டக்களப்பு பஸ் ஸ்டான்ட் வரையிலும் வேனிற்குள் யாரும் எதுவுமே பேசவில்லை.
உபைத்தும் நிஸ்தாரும் பஸ்ஸில் புறப்படும்போது அந்த வயோதிபர் ஒரு நீல நிற றப்பர் ஸீட்டில் முத்திரியம் பருப்புப் பக்கட்டுக்களைப் பரப்பி விற்றுக் கொண்டிருந்தார். மட்டக்களப்பு வாவியோரமாய் நின்ற சவுக்கு மரங்களின் ஊடாக காற்று ஓசையுடன் வீசியது.



# 12

வெள்ளிக்கிழமை அக்கரைப்பற்று வியாபாரிகள் ‘ஜும்ஆ’விற்கு பிறகு கடைமூடி ஓய்வெடுத்தாலும் ஊரார் எல்லோரிடமும் அந்த ஓய்வு வந்துவிடும். வெள்ளிக்கிழமை மாலைகளில் குடும்பத்தின் பெண் அங்கத்தவர்கள் கூடிவிடுகிறார்கள். ஆண்களெல்லாம் வீதி வீதியாகச் சுற்றி கடற்கரையை அடைகிறார்கள். மகிழ்ச்சி தரும் மாலையாகவே அது கழிகிறது.

சிபானியின் வீட்டாரும் மொட்டை மாடியில் கூடிவிட்டார்கள். வீதியில் போகின்றவர்களின் பார்வைகளெல்லாம் அவர்களைப் பார்க்கத் திரும்பும். அதனால் சிபானியின் உம்மா கீழே இருந்து பார்ப்பவர்களுக்குத் தெரியாதபடி பின் சுவரோரமாய்க் கதிரையைப் போட்டுக்கொண்டிருந்தா. அவரின் தங்கை நளீமாவின் உம்மாவும் அவ்வாறுதான். சிபானி, நளீமா, ஹாறிஜா மூவரினதும் பார்வைகள் வீதியின் புதினத்தில் இருந்தாலும் கடைசியாய்ப் பார்த்த திரைப்படத்தைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தார்கள். சிபானியின் தம்பி ஒரு நூலில் போத்தலைக்கட்டி போத்தலை மூன்றடி சுவருக்கப்பால் இறக்கி, கிணற்றில் நீர் அள்ளுவது போல் பாசாங்கு செய்து கொண்டிருந்தான். நளீமா அவனை ‘சும்மா இருடா’ என்றுவிட்டுத்தான் பார்த்தாள், நிஸ்தார் வருகிறான்.
‘ஹாறிஜா இன்னா வாறவர்தான் நிஸ்தார்’ என்றாள்.
நிஸ்தார் ஒரு சிவப்பு நிற மோட்டார் சைக்கிளில் மெதுவாய்த்தான் போய்க் கொண்டிருந்தான். ஹாறிஜாவிற்கு நன்கு பரிச்சயமான முகம். இருந்தாலும் இப்போதுதான் அந்தப்பெயருக்கான முகம் இதுவென்று தெரியும். றோஸ் நிற சேட்டும், நீல நிற றவுசரும் அணிந்திருந்தான். மேலே நிமிர்ந்து பார்ப்பதற்கு அவனது கண்கள் எத்தனித்தன. சிபானியும் ஒரு தரம் திடீரென்று திரும்பிப் பார்த்தாள். இன்னொரு தரம் பார்க்கவேண்டும் போல் இருந்தது.
‘டெயிலி மோட்டர் சைக்கிள்ள வெருவார்’ என்றாள் நளீமா.
‘எவடத்த ஊடு’ என்றாள் ஹாறிஜா.
‘கைறாத் பள்ளியடிய, அவியிர வாப்பா காக்காமாரெல்லாம் வெளிநாட்டில. எங்கிட ஸ்கூல்ல அவியிர சின்னாப்பாவும், மாமாவும் படிச்சுக் குடுக்குற’ என்றாள் நளீமா.
‘பர்சானா அவியர காக்காட கடும் கூட்டாளி. பர்சானாயிர ஊட்டான் என்னரமும்



RangaRakes tamilnavarasam.com

இரிக்கிறாம் என்றாள் சிபானி’
சிபானியின் தம்பி நூலில் கட்டப்பட்ட போத்தலை சுழற்றி எறிந்தது அவர்களுக்கு நடுவில் வந்து விழுந்து உடைந்தது.
‘டேய் என்ன வேலடாயிது’ என்றபடி கையை அடிக்க உயர்த்தியபடி நெருங்கினாள். அவன் முதுகு நெளிவதைப் பார்த்துவிட்டு திரும்பி வந்துவிட்டாள்.

ஹாறிஜா தேங்காய் துருவிக்கொண்டிருந்தாள். சிபானி, மற்றப் பிள்ளைகள் எல்லாமே பள்ளிக்குப் போய்விட்டனர். உம்மா இறைச்சி அரிந்து கொண்டிருந்தாள். ஹாறிஜாவிற்கு கதையை ஆரம்பிக்க சற்றுத் தயக்கமாக இருந்தது.
‘சிபானிக்குப் பின்னால நிஸ்தார் எண்டு ஒருபொடியன் சுத்துறாம்’ என்றாள்
‘ஆர் சென்ன’
‘சிபானி அவியதான்’ என்றாள் ஹாறிஜா
‘என்னையாம் ஒண்டும் பேசிறல்லையாம் விருப்பமாக்கும் சுத்துறானாம்’
‘உனக்குத் தெரியுமா மாமாவோட செல்லுவோமா?’
‘சீ வேணாம் இன்னம் பாப்பம்’ தேங்காயில் ஒரு துண்டு இடறி வீழ்ந்தது. கொஞ்சம் மெதுவாகத் துருவினாள் அந்தப்பாதி முடியும் தறுவாய்க்கு வந்திருந்தது.
‘ எவடத்த ஊடு, தெரியுமா’
‘மம்முறயின் காக்காட மகன் முபாரிசோட கூட்டாளி. அவியிர ஊட்டெல்லாம் நல்லாப் பொளங்குறாம்’ என்றாள் ஹாறிஜா. துருவிய தேங்காய்ப்பூவுக்கு மேல் சிரட்டையைக் கவிழ்த்து வைத்தாள் துருவிலையை எடுத்து குசினி மேசைக்குள் ஓரமாய் சாய்த்து வைத்தாள். சல்வாறியில் ஒட்டியிருந்த துரும்பையும், தேங்காய்த் துகளையும் குனிந்து தட்டிவிட்டாள்.

சிபானியின் வீடு வந்து திடீரென நிற்கும் பின்தெருவில் பிள்ளைகள் கிரிக்கட் விளையாடிக் கொண்டிருந்தனர். சிபானியும், ஹாறிஜாவும் பின்கதவடியில் இருந்தார்கள். சிபானியின் சட்டை முழங்கால்களோடு இருந்தது. கரும்பச்சை நிறம். சிபானிதான் முதலில் ரீயுசன் கிளாசை முடித்துவரும் பர்சானாவைக் கண்டாள். பர்சானா நின்று சிரித்தாள். ‘என்ன’ என்று பர்சானாதான் முதலில் கேட்டதும்



ஹாறிஜா எழுந்தாள். ஹாறிஜாவைத் தொடர்ந்து பின்னால் சிபானி போனாள். அருகே போகும்வரை பர்சானா சிரித்தபடி நின்றாள்.
‘வாங்கோ பர்சானா’ என்றாள் ஹாறிஜா
‘இல்ல மணி....இரண்டு கிளாஸ் தொடர்ந்து. போறன் இன்னொரு நாளக்கி...’ என்றாள் பர்சானா.
‘ஒவ்வொரு தரமும் இப்பிடித்தான் செல்றயள் வாங்களன்’ என்றாள் ஹாறிஜா.
‘வாங்கோ பர்சானா ராத்தா.... ஏன் எங்கிட வீட்டையெல்லாம் வெரமாட்டயளா’ என்றாள் சிபானி.
‘வாங்களென்’ என்று மீண்டும் ஹாறிஜா கெஞ்சுவது போல் கேட்கவே, பர்சானாவும், போகவேண்டும் என்ற எதிர்பார்ப்பிலே இருந்தாள். உள்ளே போகலாம் என்று தீர்மானித்து,
‘ம்....’ என்று தலையாட்டினாள்
‘என்ன கிளாஸ்’ ஹாறிஜா கேட்டாள்.
‘ரெண்டு. ஒண்டு.... எக்கனோமிக் சலாம் சேர், மத்தது... றிபாஸ் சேர்ர தமிழ்’
‘கடும் அலுப்பு மூணு மணித்தியாலம்’ என்று பேசிக்கொண்டே மண்டபத்திற்குள் போன ஹாறிஜா கதிரையைக் காட்டி ‘இருங்கோ பர்சானா’ என்றாள்.
பர்சானா கொப்பிகளை ரீப்போவில் வைத்தபடி இருந்தாள். வீடு எங்கிலும் குளிர் பரவிக் கிடந்தது.
‘எப்பஇருந்து ஒங்களுக்கு ‘ஸ்கூல் ஸ்டார்ட்’ என்று ஹாறிஜாவைப் பார்த்துக் கேட்டாள் பர்சானா.
‘அடுத்த புதன்கிழமை மட்டுக்கு’ என்றாள்
சிபானி ஒரு கதிரைக்குள் அமர்ந்து கொண்டு கன்னத்தில் கைகளைக் குத்தியபடி இருவரும் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்தாள்.
‘ஒங்குடவாப்பா பொறினிலதானே. எனக்கி அவர்ர முகம் சரியா ஞாபகம் இல்ல. போட்டோ இருக்கித்தானே பாக்கலாமா?’ என்றாள் பர்சானா.
ஹாறிஜா எழும்பினாள். உள்ளே போகவேண்டியவள் முன்விறாந்தைக்கு வந்து தைத்துக்கொண்டிருந்த உம்மாவிடம், ‘இதுதான் பர்சானா. மம்முறயின் காக்காட மகள். எங்களோட கன்னாள் கூடி கதைக்கிற ரீ ஊத்துங்கம்மா. வந்து நிஸ்தார்ர வெளக்கத்தையும் லேசாக் கேளுங்கம்மா’ என்றாள் ஹாறிஜா.

அப்படியே போய் மீண்டும் மண்டபத்தை பர்சானாவிற்கு புன்னகைத்தபடியே கடந்தாள். சிபானியும், பர்சானாவும் அதனைக் கவனிக்காமலே பேசிக்கொண் டிருந்தார்கள். ‘அல்பத்தின்’ முதல் பக்கத்திலிருக்கும் அவர்களின் வாப்பா கார் ஒன்றில் சாய்ந்த படியிருக்கும் புகைப்படத்தை பர்சானாவிடம் காட்டினாள்.



RangaRakes tamilnavarasam.com

அல்பம் பார்த்து முடிவதற்குள் ஹாறிஜாவின் உம்மா ரீயோடு வந்தார். பர்சானா அவரைப் பார்த்ததும் சிரித்துவிட்டு மற்றப் பக்கத்தைப் புரட்டினாள்.

'என்னமணி' என்றார் சிபானியின் உம்மா.

அதற்கும் பர்சானா சிரித்தாள்

'வாப்பா இப்பையும் கடைசெய்றாரா?, வயலும் செய்றா? என்றார் உம்மா.

'ஓம்'

'கனக்கையா மணி'

'எட்டேக்கரென்னையோ'

'எங்கால சாகாமத்துப் பக்கமா?'

'ஓம்'

'காக்கா படிக்கிறா'

'ஓம் ஏ/ எல் படிக்கிறார். இந்த வரிசம் எக்சாம் எழுதின.'

'ஒங்குட காக்காட கூட்டாளியா மணி நிஸ்தார் எங்கிறவர்'

'ஓம்'

'அவர் ஒங்கிட ஊட்டெல்லாம் வாறாமா?'

'சின்னப்பருவத்திலிருந்து காக்காவேட கூட்டாளி'

'அவர் என்னையாம் மணி சுத்துற'

'அவர் அநேகமா புள்ளையளுக்கும் பெறகால போறல்ல. சிபானியோட கொஞ்சம் கடும் விருப்பம் போல, கதைக்கிறத பார்த்தா' என்று மிகவும் கூச்சப்பட்டு சிரித்துக் குனிந்தபடி சொன்னாள்.

'கல்யாணம்தான் பண்ணுவாரேண்டா டைம் வரக்கொள வரட்டும். அப்ப பாப்பம். சிபானிக்கு ராத்தாவெல்லாம் இரிக்கித்தானே.... அல்லாஹ் நாடினாப் போல நடக்கட்டும்'

'அதான் எல்லாம் அல்லாஹ் நார்ர படிதான்'

'ஆர்ர மகன் அவர்'

'கைறாத் பள்ளியடிய மூத்தம்பி றைவர் எங்கிறவர்ர மகன்'

'ஆ... அவர்ர மகனா...? அவியிரவாப்பா இவியிர வாப்பாவோட கடும் கூட்டாளி. கன்னாள் ஜெயிலானிக்கு அவியிர குடும்பமும், எங்கிட குடும்பமும் ஒண்டாப்போயிரிக்கம் இப்பதான் அந்த ஒறவெல்லாம் இல்ல' என்றார் உம்மா. சிபானி 'ரீ ஆறுது குடிங்கோ' என்று பேச்சை முடித்துக் கொண்டாள்.

ஓடையால் வந்து வெளியேறும் போது ஹாறிஜா பர்சானாவின் காதோரமாய்க் கேட்டாள். 'நிஸ்தார் கலியாணம் பண்ணுவாரா?' பர்சானா ஆமென்று தலையை ஆட்டினாள். குனிந்தபடி சிவந்து போய்நின்றாள் சிபானி.



# 13

பத்துவருட கடந்தகால பரீட்சை வினாத்தாள்களை எழுதும்படி இஸ்லாமிய நாகரிகப் பாட ஆசிரியர் சொல்லியிருந்தார். ஒருவரிடம் இருக்கும் வினாத்தாள் இன்னொருவரிடம் இல்லையென்பதாலும் விடையைக் கலந்துரையாடி எழுதினால் நன்றாக இருக்கும் என்பதாலும் பாடசாலையின் கேற்றிலிருந்து முதலாவதாக இருக்கும் மண்டபத்தின் வெளி மூலையில் இருந்த மின்சார விளக்கு வெளிச்சத்தில் மேசையை இரண்டாக இணைத்து நீளமான வரியாகப் போட்டு எழுதிக்கொண்டிருந்தார்கள். இப்திகார், ஜிப்ரி இருவரும் இடைவிடாமல் எழுதினார்கள். அயல்கிராமத்திலிருந்து வந்த முபீர், நன்கு எழுதினாலும் மற்ற இருவரில் அஸ்வர் மட்டும் தூங்கித் தூங்கி மேசையில் வீழ்ந்தான். சம்சுதீனின் கண்கள் பழம் போல் சிவந்தாலும், கலந்துரையாடலில் கொஞ்சம் பலமாகவே இருந்தான். நிஸ்தார் சற்றேனும் எழுதவில்லை. கொப்பிகூட வாங்கவில்லை. தவறாமல் வந்தான். ஆனால் சலீத்திற்கு கொப்பியிருந்தது. எழுதவேண்டும் போல் இருந்தாலும் உறுப்பெழுத்து எழுதியதில் சோர்ந்ததும், ஜென்சி, வாணிஜெயராம் என்று பாடல்களைத் துவங்கிவிடுவான். புர்கானுக்கு எதுவுமே தட்டுப்படாமல் புரண்டான்.

இப்திகார் அன்று குஞ்சம் பிரித்துவிட்ட ஜம்பரும் வெறுமேலுமாகவே இருந்தான். அவன் கழுத்தில் கிடந்த அரைநாடாக்கொடிக் கூட்டை எல்லோரும் தட்டி 'சயனைட்' என்று கிண்டல் செய்ததில் அவன் ஒரே சிடுசிடுப்பாக இருந்தான். இப்திகாரின் சேட்டால் திண்ணையைத் துடைத்துவிட்டு சேட்டை தலைக்கு வைத்துப் படுத்துக்கொண்டு சலித் பாட ஆரம்பித்தான். 'கண்ணே கலைமானே கன்னிமயில் எனக்கண்டேன் உனை நானே...' என்று. பாட்டின் கிறக்கத்தில் தலையசைத்துக்கொண்டு குனிந்திருந்த இப்திகார் எழும்பினான். கதிரையிலிருந்த சேட்டைக் காணவில்லை. சலீத்தின் வேலையாகத்தான் இருக்கும் என்று புரிந்து கொண்டான். கதிரையைத் தட்டிவிட்டவாறு எழும்பி

'மடையா ஓத்தாள்தான் நீ, அதுக்குள்ள கோல்ஸீப் இருக்கிடா' என்றான்

'ஓக்கா'

சிரித்துக்கொண்டே இப்திகாரின் சேட்டினுள் இருந்து எடுத்த சிகரட்டைப் பறித்தான்.

சலீத் அவனது றவுசர் பைக்குள் இருந்து நெருப்பெட்டியை எடுத்தான். இப்திகார் சிகரட்டைக் கொடுத்தான். சலீத் வாங்கி உதட்டில் தொங்கவிட்டபடி கொழுத்தி வைத்தான். அவன் விரல்களில் வழமையான சிறிய நடுக்கம் இருந்தது.

ஜிப்ரியின் கொப்பியில் ஒரு மழைத்துளி விழுந்தது. அவன் கத்தா மரத்திலிருந்து



RangaRakes tamilnavarasam.com

விழும் பனித்துளியா என்று பார்த்தான். அதற்கிடையில் மழைத்துளிகள் வேகமாக விழ ஆரம்பித்துவிட்டன. தூங்கிக்கொண்டிருந்த அஸ்வர் கண்களை விழித்து கொப்பிகளை அள்ளிக்கொண்டு உள்ளே ஓடினான். எல்லோரும் மேசைகளைத் தூக்கிக்கொண்டு ஓடினார்கள். மூன்று கதிரைகளைத் தூக்க முடியவில்லை. மழை கடுமையாகப் பெய்யத் தொடங்கியது, காற்றும் கடுமையாக வீசியது. மின்சாரம் போய்விட்டது, வீதி மின்கம்பத்தில் விளக்கு எரிந்தது. சற்றேனும் பாடமுடியாவிட்டாலும் அப்போது பாடலை முபாரிஸ்தான் ஆரம்பித்து வைத்தான். சம்சுடன் பெண்குரலில் பாடினான். பாடல் சூடுபிடிக்கத் தொடங்கியது. மேசையில் தட்டும் சத்தம் அதிகரிக்கத் தொடங்கியது. மழை விட்டுக் கொண்டிருந்தது. தட்டியபடி மின் கம்பத்து வெளிச்சத்தில் எல்லோரும் ஆடினார்கள்.

மழை ஓய்ந்தது, முகிலுக்குள் இருந்த நிலவு வெளிவந்தது. கத்தா மரத்தில் வந்து காற்று மோதி பெரும் துளிகள் வீழ்ந்தது. எல்லோரும் கொப்பித்தாள்களைக் கிழித்து நனைந்த பைசிக்கிள் சீற்றைத் துடைத்தார்கள். முபாரிஸ் சத்தம் போட்டுக் கத்தினான்.
‘வாச்சரங்கீள் கேத்தப் பூட்டுங்க போப்போறோம்’
நிஸ்தார் முபாரிஸிடம்,
‘மல்லிகைக் கன்று ஒண்டு இன்டைக்கு எடுக்கனும்’ என்றான்
முபாரிஸிக்கு பூக்கன்று களவெடுப்பதென்றால் அலாதிப் பிரியம்.
‘ஓகே’ என்று கத்தியபடி மிக வேகமாக பைசிக்கிளை பின்னால் சுத்தினான்.
எல்லோரும் ‘கூ’ என்று கத்திவிட்டு சிரித்தார்கள்.
வரும்வழியில் காவி நிறம் பூசப்பட்ட சுவரோரமாய் பைசிக்கிளை நிறுத்திவிட்டு முபாரிஸ் மதிலுக்கப்பால் பாய்ந்தான். வரும்போது சிவப்பு றோஜாக்கந்துடனும் வந்தான். வெள்ளை றோஜா சின்னபதியமும்.
நிஸ்தாரிடம் ‘மல்லிகை இல்ல. இன்னா.’ என்று கொடுத்தான்.
சிவப்பு றோஜாவை திருப்பிப் பார்த்துவிட்டு
‘இதுக்கு இப்ப மார்க்கட் இல்ல’ என்றான் முபாரிஸ்
இன்னோரிடத்தில் மஞ்சள் அலறி பூத்துக்கிடந்தது. அதிலும் ஒரு கந்தை முறித்து நிஸ்தாரிடம் கொடுத்தான். நிஸ்தார் அதை வீசிவிடக் கையை எடுத்ததும், ஏதோ நினைத்துவிட்டு வைத்துக்கொண்டான். நிஸ்தார் அவர்களின் அறையில்தான் எல்லோரும் படுக்கைக்காக வந்தார்கள். தலையணைகள் குறைந்தபோது நிஸ்தார் பழையவீட்டுக் கதவைத்தட்டி



‘உம்மா’ என்றான் வாப்பா தான் ‘ஓ… ஓ…’ என்றபடி கதவைத் திறந்தார்.
‘என்னது’
‘தலகாணி’ எடுக்கனும் என்றான்.
‘உம்மாவுக்கு செரியான வருத்தம்’ என்றுவிட்டு உம்மாவின் பக்கம் திரும்பினார்.

முடி கலைந்து கிடந்தது. முகத்தில் கை சோர்ந்து கிடந்தது, அழும் சத்தம் மிக மெல்லிதாய் வந்தது. கைகால்களெல்லாம் வீங்கி இருந்தது. நிஸ்தார் அருகே இருந்து,
‘என்ன செய்யிது’ என்றான்.
கையை அசைத்து ஒன்றுமில்லை என்பதுபோல் சைகை செய்தார். கால் வீக்கம்தான், முதலில் எழும்பி நடக்கமுடியாது. இருந்தாலும் சிறிது சிறிதாக அதிகரித்து எல்லா வைத்தியரிடமும் காட்டி மாத்திரை விழுங்கும்போது முதலில் இலேசானது, பிறகு வந்தது. பிறகு அது அதற்கெல்லாம் கேட்கவேயில்லை.

தலையணையை எடுத்துக்கொண்டு நிஸ்தார் எழும்பி வந்தான். வெள்ளையடித்த புதுவீட்டுக்கு இன்னும் கதவுகளோ, ஜன்னல்களோ போடப்படவில்லை. நிஸ்தாரின் அறைக்குள் மாத்திரம் தற்காலிகமாக ஏற்படுத்திய மின் இணைப்பில் ஒரு ‘டியூப்லைட்’ எரிந்து கொண்டிருந்தது. நிஸ்தார் வரும்போது அவர்கள் வீட்டின் பின்னால் இருக்கும் பப்பாசி மரத்தில் இரண்டு பழங்களைப் பறித்து வெட்டி சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

‘லைட்’ அணைந்ததும் புர்கான் சிரித்தபடியே சொன்னான்.
‘பரவாயில்லை காலத்தால அவரவர்ர சாறனோட ஒழும்புங்கோ’ என்றான்
எல்லோரும் ‘கொல்’ என்று சிரித்தார்கள்.



RangaRakes tamilnavarasam.com

# 14

நேற்றைய இரவு நிஸ்தாருக்கும் ஜிப்ரிக்கும் இடையே கடும் சண்டை நடந்தது. அறைக்கு இன்று யாருமே வரவில்லை. நிஸ்தாரைக் கிண்டல் செய்யத் தொடங்கி சில நிமிடங்கள் வரை சும்மாதான் இருந்தான்.
'நடிக்கிறெண்டா எல்லாந்தெரிந்திருக்கவேண்டும்' என்று சொன்ன போதுதான் நிஸ்தாருக்கு மூக்கில் கம்புபட்டது.
'நீங்க பெரிய ராஜராஜன்ர தோள்களோட மன்னாதிமன்னன்தானே. காகம் மாதிரி இருந்துக்கு மாறி ஒண்டும் கதைக்காட்டி அரவிந்தசாமி எண்டு நெனப்பா' என்று கதிரையில் வைத்து எழுதுவதற்குப் பயன்படுத்தும் பலகையால் ஜிப்ரிக்கு ஓங்கினான். தலைக்கு மேல் கையை வைத்துக்கொண்டு ஜிப்ரி குறுகிவிட்டான். நிஸ்தார் பலகையைத் தூக்கி எறிந்து விட்டுப் போய்விட்டான். யாரும் தடுக்க முயற்சிக்கவில்லை. நிஸ்தாரின் வீட்டிற்கு முன்னால் இருக்கும் வெறும் வளவிற்கு வலது புறமாக இருக்கும் பள்ளிச் சுவரில் ஏறி அமர்ந்து கொண்டிருந்தான். முபாரிஸும் பின்னால் வந்து ஏறி இருந்து கொண்டான்.
'அவர்ர பிழைதானே' என்றான் நிஸ்தார்.
'இருந்தாலும் ஒங்குடவீட்டவெச்சி அடிக்கப்போடா' என்றான் முபாரிஸ்.
'நான் முதல்ல எவ்வளவு பொறுமையா இருந்தன் எனக்கி எப்பிடி கோபம் வார எண்டு தெரியும்தானே தொடர்ந்து பகிடி பண்ணினா' என்று நிஸ்தார் சொன்னான். அதன்பிறகு பேச்சுத் தொடரவில்லை. பள்ளிவாயலில் ஒரேயொரு 'டியூப் லைட்' மட்டும் எரிந்து கொண்டிருந்தது. பள்ளியினுள் இருண்டு கிடந்தது. இலேசாகக் காற்று வீசியது. இலைகள் உதிர்ந்தன. சற்று நேரத்தின் பின்னால் ஒவ்வொருவராக வந்தனர். ஜிப்ரி மாத்திரம் வரவில்லை குப்புறப்படுத்துக்கொண்டான். வெளிச்சம் இல்லாதிருந்தால் நன்றாக இருந்திருக்கும். இருந்தாலும் இவ்வளவு மூர்க்கமாக நிஸ்தார் இருந்திருக்கக் கூடாது. அவனிடம் பேசும்போதே ஜிப்ரி சொல்லியிருந்தான். கறுப்பாய்ப் பிறப்பதில் தாழ்வு என்று ஒன்றுமில்லை என்றாலும் அழகு இல்லை என்ற கவலை இல்லாமல் இல்லையென்று. அவ்வளவு மென்மைகளெல்லாம் வலிக்குமென்று தெரிந்த பின்பும் அவன் அவ்வளவு வேகமாய் வார்த்தைகளைச் சொடுக்கியிருக்கக் கூடாது.

முபாரிஸ் அறைக்கு வந்து தனது இரவுச் சாப்பாட்டுப் பார்சலைத் தேடினான். காணவில்லை. 'ஆர் சாப்பிட்ட' என்று விசாரித்தான். ஜிப்ரி தூங்கிவிட்டான். புர்கான் அவியதான் சாப்பிட்டிருப்பாங்க என்று புரிந்துகொண்டான்.



'ஓப்பானுகளுக்கு ஒண்டும் வெளங்கிறல்லெ, நான் ராவக்கி என்ன செய்றடா' என்று கத்தினான். ஒருத்தரும் ஒன்றும் பேசவில்லை. சாப்பிட்டு விட்டார்கள் பேசமுடியாது.
நிஸ்தார் 'சோறுகிடக்கும். கறியிருக்கா எண்டுதான் பாக்கனும்' என்று கூறிக்கொண்டு வெளியே வந்தான். ஒரு மீன்துண்டும், ஓரிரு துளிக் கறியும் கிடந்தது. அதில் சோற்றைப் போட்டுப் புரட்டிக்கொண்டுவந்து முபாரிசிடம் கொடுத்தான். அவன் வாங்கும் போது எல்லோரும் மெதுவாகக் கிட்டவந்து அவனுக்குக் கிட்டதாகவே எல்லோரும் ஆளுக்கொரு அள்ளு அள்ளிக்கொண்டனர். முபாரிஸ் மீன்துண்டைப் பிடித்துக்கொண்டான். புர்கான் சிரித்தான். பிறகு எல்லோரும் கொல் என்று சிரித்தார்கள். அன்றைய நிகழ்வெல்லாம் அந்தச் சிரிப்போடு முடிந்துவிட்டதெனத்தான் நிஸ்தார் நினைத்தான். ஆனால் யாருமே இன்று வராததில் அவன் ஆச்சரியம் அடைந்தான்.



RangaRakes tamilnavarasam.com

# 15

நிஸ்தாரும் உபைத்தும் ஏறாவூருக்குப் போய்ச் சேரும்போது இரண்டு மணியிருக்கும். கவிஞர் ஒருவர் வந்திருப்பதாக சொல்லித்தான் உபைத்துடன் நிஸ்தார் போயிருந்தான். புகைப்படத்தில் நிஸ்தார் பார்த்த கவிஞரைக் காணவில்லை. சிங்கம் போல் பியர் அருந்திக் கொண்டே வெள்ளைக்கார நண்பருடன் மதிய உணவு சாப்பிட்டுக்கொண்டிருந்தார். உபைத்தைக் கண்டதும்.
‘வாடாவாடா எவ்வளவு நாளாச்சிடா உன்னைப்பார்த்து சாப்பிட்டாயாடா?’ என்றார் கவிஞர் யோகராஜன்.
‘ஓம் சாப்பிட்டேன்’ என்றார் உபைத்
‘சியாஉர் றஃமான் எங்கடா, உன்னை அவன் கூட்டிவந்து விட்டவனா?’
‘ஓம் போறார் வாறனெண்டுபோட்டு’
நிஸ்தார் அங்கே இருந்த கதிரையில் தொப்பென்று இருந்தான். உபைத் அவசரஅவசரமாக சாறனை மாற்றிக்கொண்டு,
‘எங்க பாத்றூம்’ என்றதற்கு வாயில் கொதிப்பியபடி பாத்றூம் பக்கம் கையைக் காட்டினார். கவிஞர் யோகராஜன்.
‘இவன் சிகரட்டை விடமாட்டானே, என்னடாம்பி நீயும்குடிக்கிறதா?’ என்றுவிட்டு நிஸ்தாரைப் பார்த்துச் சிரித்தார்.

வெளியில் ஓர் ‘பல்ப்’ மாத்திரம் தூரத்தில் எரிந்து கொண்டிருந்தது. வட்டமான சின்ன டீப்போ. அதில் பியர் போத்தல்கள். வளைத்து நான்கு பிரம்புக் கதிரையில் இருந்தார்கள் – யோகராஜன், நிஸ்தார், உபைத், நேர்வேநாட்டு வெள்ளைக்காரன். முதலில் பியர் போத்தல் உடைக்கும், ஊற்றும் சத்தமே கேட்டன தொடர்ந்து. மெல்லிருள்.
‘டேய் உபைத் நீ முதலில் சொல்லு. நான் பிறகு அதை ‘ரான்சிலேசன்’ செய்றன்’ என்றார் யோகராஜன்.
உபைத் சிகரட்டை எடுத்தார்.
‘டேய் முதல்ல வையடா. அந்த வாசம் எனக்கு வாந்தி வாறதேடா’ என்றார் யோகராஜன்.



உபைத் சிகரட்டை பெட்டியினுள் வைத்துக்கொண்டார். உபைத் தொண்டையை கனைத்துக் கொண்டு,
‘எண்பத்தியேழுகளிலெல்லாம் ஜிஹாத் இல்லையென்று சொல்ல ஏலாது. முஸ்லிம் குழுக்கள் ஜிஹாத் என்ற அடிப்படையிலேயே கிழக்கு மாகாணம் முழுவதிலும் இரிக்கிற ஊர்களில் இருந்தாலும் ஒருத்தருக்கொருத்தர் தொடர்பிருக்கவில்லை. அதை ஒருங்கிணைக்க யாரும் முயற்சிக்கவுமில்லை. நினைக்கவுமில்லை, அது தமிழ் இயக்கங்களின் நெருக்குவாரத்தினால் வந்ததினால் பெரியதொரு ‘ஐடியோலொஜி’ இருக்கவில்லை. காசுப்புழக்கம் வந்தவுடனே பிளவுகள் ஆரம்பித்துவிட்டன. அந்நேரம்தான் முஸ்லிம்களின் தனித்துவத்தை வலியுறுத்திக்கொண்டு வந்து, இரண்டு பெரும்பான்மையினருக்குமிடையில் வாங்கிய அடியின் வீக்கம்போல் அதன் வளர்ச்சி ஏற்பட்டது.’ என்றுவிட்டு உபைத் நிறுத்தினார். யோகராஜன் பியர் அருந்திய கிளாசை வைத்துவிட்டு ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார் உபைத் கதைத்ததை. உபைத் யோகராஜன் சொல்வதை கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார். ஆங்கிலம் பேசமுடியாவிட்டாலும் பேசுவது புரியும்.

நோர்வேக்காரர் தூங்கப்போன பின்புதான் சியாஉர் றஃமான் வந்தார். யோகராஜன் சாறனை தொடைவரைக்கும் உயர்த்திக்கொண்டு மணலில் காலைப் புதைத்துக் கிடந்தார். நெருப்புக்கலர் ரீசேட், சிவந்த கண்கள், மூக்கு விரிந்து போயிருந்தது.
‘சிங்களவனையும் இனிமையாகப் பேசமுடியவில்லை, தமிழனையும் இனிமையாகப் பேசமுடியவில்லை முஸ்லிமையும் இனிமையாகப் பேச முடியவில்லை’ என்று சொல்லி முடிப்பதற்குள் அந்த முரட்டு முகத்தில் சோகம் ததும்ப ஆரம்பித்துவிட்டது.
‘முஸ்லிம்கள் செய்யல எண்டா செல்றாய்’ என்றார் யோகராஜன் உபைத்தைப் பார்த்து.
‘அவியளோட நாங்க இருந்தோம்தானே. அப்பதானே அவர்கள் செஞ்சது. நாங்க ஆரம்பிக்கலயே’ என்றார் சியாஉர் றஃமான்.
‘அப்போ கணக்குத் தீர்ந்து பெய்த்தடா.’ என்றார் யோகராஜன்.
‘நாங்க அவர்களின் நியாயமான விசயங்களின் பக்கம் இல்லையென்றில்லை. யாழ்ப்பாணத்து முஸ்லிம்களை வந்து மீண்டும் குடியேறுங்கள் என்று பிரபாகரனைச் சொல்லச் சொல்லுங்கோ, காத்தான்குடி ஏறாவூர் படுகொலைகளை இன்னும்



RangaRakes tamilnavarasam.com

பகிரங்கமாக ஏற்கவே இல்லையே' என்றார் உபைத்.

'அப்பென்ன சாகப்போறியேளா' என்றார் யோகராஜன் சத்தமாக.

'யார் சாகப்போறன் எண்டது' என்றார் சியாஉர் றஃமான்.

'எங்களையும் ஒரு தனித்தேசியம் எண்டு ஒத்துக்கொனும். முஸ்லிம்களும் ஒரு தனியினம்.

ஒரு சிறுபான்மையை, இன்னொரு சிறுபான்மை ஏற்றுக்கொள்ளேலாட்டி தமிழர்களின் போராட்டத்தை எப்படி நியாயம் என்று சொல்வது' என்றார் உபைத்.

'முஸ்லிம்களுக்கு அநீதி இழைக்கப்பட்டது என்கிறதில்தான் எனக்கி இரண்டு கருத்தில்லையே' என்றுவிட்டு யோகராஜன் மீண்டும் கண்ணீர் மல்கி அழுதார். நிஸ்தாருக்கு அவரின் அழுகை புதுமையாக இருந்தது. உபைத்தும் சியாஉர் றஃமானும் நீண்டநேரம் எதுவுமே பேசவில்லை.

நிஸ்தார் சிறுநீர் கழித்துக்கொண்டுவந்து தூங்கி விட்டான். உபைத், சியாஉர் றஃமான் இருவரும் நீண்டநேரம் கதைத்துக்கொண்டிருந்தார்கள். யோகராஜன் தனது 'இல்லறம்' என்ற கவிதையை செப்பனிட்டுக்கொண்டிருந்தார். உபைத், சியாஉர் றஃமான் போனதும் யோகராஜாவின் அருகில் போனார்.

'டேய் உபைத் என்ர கவிதைத் தொகுப்பைப் போட்டுத்தரமாட்டாயாடா?' என்றார்.

'எல்லாக்கவிதைகளையும் 'கலெக்' பண்ணி எடுத்திட்டயளா' என்றார் உபைத்.

'ஓம்' என்றுவிட்டு எழுந்து போய் மேசையில் கிடந்த 'பைலை' எடுத்து விரித்துப் பார்த்தார் உபைத்.

எல்லாக் கவிதைகளும் கொம்பியூட்டரில் டைப்செய்து கால வரிசைப்படி தொகுக்கப்பட்டிருந்தன.

'நந்தலாலா'வில் வந்த இரு கவிதைகளை எடுக்கவேண்டும். மற்றும்படிக்கு எல்லாம் சரி என்றார் யோகராஜன்.

'சுவறா இதப்போட்டுத்தாறன். இப்போ நான் தூங்கப்போறன்' என்றுவிட்டு உபைத் எழுந்து போனார்.

'பல்பை' அணைத்துவிட்டு நிஸ்தார் துங்கிவிட்டான். பாய் தலையணை எல்லாம் உபைத்துக்கும், போட்டுவிட்டுத்தான் தூங்கியிருந்தான். உபைத் நிஸ்தாருக்கு அருகில் படுத்தபடி நிஸ்தாரின் தலையைக் கோதிவிட்டார்....





# 16

1998 ஜுன் 15ம் திகதி வகுப்பாசியர் சுபையிர் மௌலவி கூட வகுப்பறையில் பாடும் மாணவர்களோடு சேர்ந்து தாளம் போட்டார். அன்றிலிருந்து மூன்று நாட்கள்தான் அவர்களின் பள்ளிவாழ்வில் எஞ்சிய நாட்கள். ஒவ்வொரு வகுப்பாய் சென்று ஒவ்வொருவரும் சந்தித்துப் பேசிவிட்டுவந்த மாணவிகள் எல்லாம் அன்று வந்து அங்கு பேசிவிட்டுப் போய்க்கொண்டிருந்தார்கள். இப்திகார், நாம் எல்லோரும் ஒரு நாள் சந்திக்க இந்த வகுப்பறைக்கு இனி வரமாட்டோம் என்பதை வலியுறுத்திக் கொண்டிருந்தான். நிஸ்தாரின் 'ரோஜா வனமே ஊமையாகி' என்ற கவிதையை அபாரம் என்று கத்திக்கொண்டு அலைந்தான். சலித்தை ஜிப்ரியை எல்லாம் கவிதை எழுதுமாறு வேண்டிக்கொண்டான். அவர்கள் மாணவிகளுக்கு காதல் ததும்பும் வார்த்தைகளைக் கோர்த்து ஓட்டோகிராபில் வழங்கிக்கொண்டிருந்தார்கள். நிஸ்தாரைத் தேடி சிபானி வந்து, ஜன்னல் கம்பிவலை ஓரமாய்ப் பார்க்காமலே வழமைபோல் குனிந்து இதழ்களை நோக்கி விரல்களை மேலெழுப்பிய வாறு நகர்ந்தாள். நிஸ்தார் ஜன்னல் கம்பி வலையோரமாய்ப் போய் அவள் இரண்டு, மூன்று முறைகள் திரும்பிப் பார்க்கும் வரை நின்று பார்த்துக்கொண்டிருந்தான். நல்ல வேளை அவளில் காற்று மோதவில்லை. இல்லையென்றால் அழுதிருப்பாள். அவள் மைதானத்தைச் சுற்றிப்போய் வகுப்பறையில் அமரும்வரை அவன் பார்த்துக் கொண்டிருந்தான். பின்னால் ஒரு நண்பனைக் கூட்டிக்கொண்டு போய் எதுவுமே பேசாமல் முகத்தைப் பார்த்துவிட்டு வர மனம் சொல்லியது.

இப்திகார் எல்லோரையும் பாட வரும்படி அழைத்தான். யாருக்கும் அதில் இஷ்டமிருக்கவில்லை. ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாணவியுடன் அழுவதற்கு ஒரு கிராம் குறைவான மனக்கனத்துடன் பேசிக்கொண்டிருந்தனர். ஒரு தூரத்துச் சோகமான குயிலின் குரலுக்காகக் காத்திருந்தது போதுமென்றுபட்டது. அஸ்வரிடம் போய் அவனை இழுத்துக்கொண்டு சிபானியின் வகுப்பறைக்குள் நுழைந்தான். பிள்ளைகளெல்லாம் அவனையே பார்த்தனர். ஏதோ பேசிக்கொண்டிருந்த சிபானி உதட்டைக் கடித்து பேச்சை முடித்துக்கொண்டாள். நிஸ்தாரின் கண்களைப் பார்த்துவிட்டு குனிந்து விட்டாள்.

அஸ்வர் 'டேய் கிட்டப்போய்க் கதையண்டா' என்று நிஸ்தாரின் முதுகைப் பிடித்துத் தள்ளினான். நிஸ்தார் அதிக நெருக்கமில்லாமல் நின்று 'ஹலோ' சிபானி எங்கிறது ஒங்குட பெயர் தானே' என்று கையை உயர்த்தியபடி கேட்டான். அவள் நிமிர்ந்து பார்த்துவிட்டு எதுவுமே பேசாமல் மேசையிலிருந்த கொப்பியை எடுத்து கண்களுக்கு





RangaRakes

tamilnavarasam.com

க்கீழ் மறைத்துவிட்டு இமைகளை மூடிக்கொண்டாள்.

அன்று பின்னேரம் நிஸ்தார் வான்நீல நிற சேட்டும், சாம்பல் நிற டெனிம் ரவுசரும் அணிந்திருந்தான். அன்றுதான் சவரம் செய்த முகம். உதட்டில்படும் மெல்லிய மீசை. சிபானியின் நடைதான் எவ்வளவு சீரானது. தூரத்தில் வரும்போதே சிபானியைக் கண்டுவிட்டான். இலேசான மழை தூறிக்கொண்டிருந்தது. நளீமாவும் சிபானியும் தெருவின் குறுக்கே நின்ற மாட்டைக் கடந்து போகமுடியாமல் நின்றார்கள். முன்னால் வந்த நிஸ்தார் அவர்களை நெருங்கியதும், மாட்டை ஓட்டவேண்டிய நிர்ப்பந்தம் அவனுக்கு வந்துவிட்டது. என்றாலும் அவனது அதிஷ்டம் அவனுக்குப் பின்னால் வேகமாய் வந்த ஒருவன்தான் மழைக்குப் பிடித்துக்கொண்டுவந்த அந்தக் குடையால் தட்டி விரசினான். நிஸ்தார் பெருமூச்சு விட்டான். சிபானிக்கும் நளீமாவுக்கும் சிரிப்பு வந்துவிட்டது. நிஸ்தார் சிவப்பு நிற மோட்டர்சைக்கிளை வேகமாகச் செலுத்தினான். சிபானி திருப்பிப் பார்த்தபோது மழையின் உக்கிரம் அவனைத் தாண்டி அவள் பக்கம் வந்து கொண்டிருந்தது.

உபைத்தின் பத்திரிகைக் காரியாலயத்திற்குப் போய் உபைத்தின் துவாயில் தலையைத் துவட்டிக்கொண்டான் உபைத் உடுப்புகளை மடித்துக்கொண்டிருந்தார். ‘நிஸ்தார் அவடத்த ஒழுகுது. ‘புக்ஸ்’எல்லாம் இருக்கிது. என்னெண்டு பாருங்கோ’ என்றார். நிஸ்தார், அண்ணாந்து கோப்பை வைத்திருந்த இடத்திற்குமேல் பார்த்தபடி பெரிசாக ஒழுகமாட்டா என்றான்.
‘இல்ல நான் இன்டைக்கு கொழும்புக்குப் போறன் வெரச்சொணங்கும்’
‘என்ன ஒரு மாசமாகுமா’
‘தெரியா கூடஆகும். இஞ்சவந்து நீங்க படிங்கொளன்’
‘அது நல்லம் ஏனெண்டா எங்கிடஊட்ட படிச்சாக்களெல்லாம் அன்டைய சண்டைக்குப் பொறகு ஒவ்வொராளா மாறிட்டாங்க. இப்பொராள் புதிசா வாற எங்கார். ஆள இஞ்சாலையே கூட்டிக்கு வந்தாச் சரி’ நிஸ்தார் மேசையில் கிடந்த பிளாஸ்ரிக் அடிமட்டத்தை வளைத்து விட்டான். பின் அதனால் கன்னத்தில் தட்டினான். உபைத் றௌசரைப் பணித்துவிட்டு சேட்டை முன்னால் பிடித்து ரவுசருக்குள் செருகினார். சேட்டை உள்ளுக்குள் விட்டு செருகி பெல்ட்டைப் போட்டுக்கொண்டார். தனது பையினுள் கையை விட்டு விரலில் செருகியவாறு கறுப்புநிற சீப்பை எடுத்து தலையிலிருந்த பட்டுப்போன்ற சொட்டுமுடியையும் வாரிக்கொண்டார். உடுப்பை மடித்துவைத்த பைக்குள் இருந்து, முகத்துக்கு பூசும்



‘பெயாரன் லவ்லி’யை எடுத்துப் பூசிக்கொண்டு மீண்டும் அதை வைத்துக்கொண்டார். நிஸ்தாரைப் பார்த்து,
‘ஜன்னலெல்லாம் அடைங்கோ’ என்றார்.
நிஸ்தார் எல்லா ஜன்னல்களையும் அடைத்து விட்டு வெளியே வந்ததும், கதவை உபைத் பூட்டி நிஸ்தாரின் கையில் திறப்பைக் கொடுத்து தன்னை விடச் சற்று உயரமான நிஸ்தாரின் தலையைத் தடவி விட்டார், கன்னத்தைத் தட்டிவிட்டார்.



RangaRakes                tamilnavarasam.com

# 17

முபாரிஸின் உம்மா சுளகில் இருந்த கடைசி வாய் அரிசையும் குவியலில் கொட்டினார். நீட்டியபடி இருந்த ஒற்றைக்காலையும் மடித்தார். அரிசி குவித்திருந்த சாக்கை இழுத்து அருகே எடுத்து வைத்தார்.
'சில்மியா அரிசிப்பானைய எடுத்துக்கு வா எண்டு சென்னலவா' என்று சத்தமிட்டுச் சொன்னார்.
சில்மியா வேகமாக நடந்து போனாள், நிஸ்தார் கதிரைக்குள் காலைத் தூக்கி வைத்தபடி எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தான்.
'இப்ப அரிசி பொடைக்கிற மிசின் வந்திட்டாமே' என்றான்
'ஓமாம் நம்முடபக்கம் அதுவெரல்ல அது வந்தா என்னலேசும்மா எவளவெண் டாலும் குடுத்து நான் அதிலதான் குத்துவன்' என்றார் உம்மா.
'செலநேரம் ஊறல் அரிசி மாதிரி முழுசிமுழிசா இரிக்கும் என்னெண்டுதெரியா'
'இங்க குருணலும் வேறையாத் தாறாம். அப்பிடி எண்டா அரிசி இடியும் தானே'
'இஞ்சால எண்டா மூணாம்குறிச்சிப்பக்கம் வந்துட்டாமே'
'ஓம் இஞ்சால சவுதா போடையாம் எண்டு கதச்சா' என்றபடி அளந்து சில்மியா கொண்டு வைத்த பானைக்குள் கொட்டிக்கொண்டே தொடர்ந்தும் கதைத்தார்.
'அரிசி கையால குத்துற காலத்தில நானும் குத்திருக்கன். ஒருமொற நாங்க நாலாமஞ்சாம் வகுப்பு படிக்கக்கொள வயலுக்கபோனம் மழபுடிச்சிற்று. உம்மா அங்கதான் இரிக்கிற. நாங்க போனநாங்க ரெண்டுகிழம மட்டுக்கு நிண்டுதான் வந்த, வளச்சி வெள்ளம், ஆறுமுறிஞ்சி பெய்த்து. நெல்லுக்குத்தினா உம்மா, நானும் சேந்து குத்தினன். மொதல்ல குத்தணும். பெறகு தீட்டணும் என்னபாடும்மாதேய்' என்று விட்டுச் சிரித்தார்.

சியாத் ஒரு ரப்பர் மலர்ச்செண்டை எடுத்துக் கொண்டு வந்தான். அதைக்கண்டதும் உம்மாவின் முகம் சிவந்தது.
'டே அறவாப்போவாய் கொண்டுபோய் அத வெய்யண்டா' என்றதும் சியாத் திரும்பி மண்டபத்துப் பக்கம் எடுத்துக்கொண்டு திரும்பும்போது. றிப்னாஸ் அவனிடம் 'காட்டுபாப்பம்' என்றான். சியாத் அதைக் காட்டமறுத்து வேகமாய் நடந்ததும் றிப்னாஸ் பாய்ந்து மற்றக்கையால் பிடித்துக்கொண்டான். அவன் அந்தப்பக்கமாயும் இவன் இந்தப் பக்கமாயும் இழுத்துக் கொண்டிருந்தபோது சில்மியா போய் அதை வாங்கி எடுத்துக் கொண்டுபோய் 'கபினட்'டின் உள் வைத்தாள். றிப்னாஸுக்கு வந்த கோபத்தில் சியாத்திற்கு வெறும் முதுகில்



ஓங்கி ஒரு அடிபோட்டான். சியாத் மாறி அடிக்க ஓங்கியபடி விரட்டவும், ஓடிப்போய் குசினியுள் புகுந்தான். றிப்னாஸைக் கண்டதும் றஸீதா 'என்னயென்ன இஞ்ச வெட்டக்கறங்கு பாப்பம்' என்றாள். றிப்னாஸ் கையை உதறியபடி ஓடிப்போய் றிஜிஸிக்குப் பின்னால் நின்று கொண்டிருந்தான். சியாத் தேங்காய் துருவிக்கொண்டிருந்த றிஜிஸிக்கு முன்னால் நின்று கொண்டிருந்தான். 'டேய்' என்றபடி றிப்னாஸிற்கு என்னவென்று தெரியாமலே ஒரு கிள்ளு கையில் போட்டுவிட்டு றிஜிஸ்
'போதும் போ' என்றாள் சியாத்திடம். றிஜிஸிக்கு தெரியும் றிப்னாஸில் பிழை இல்லையென்றால் பின்வாங்கமாட்டான் என்று.



RangaRakes tamilnavarasam.com

# 18

தெருவில் பைசிக்களில் வரும்போது 'டேய் ஒன்னத்தான் தேடிப்போய் வாறன் மச்சான்' என்றான் இப்திகார், நிஸ்தாரைக் கண்டதும். நிஸ்தார் பல்ப் வெளிச்சம் விழாத இருள் பக்கமாய் விலகி நின்றான். இப்திகாரும் நகர்ந்து நின்றான்.
'நாளைக்கு புதுக்கூட்டாளிமார் கொஞ்சப்பேரோட ஒலுவில் பீச்சிக்குப் போரன் ஜம்பர் ஒன்று வேணும்' என்றான் இப்திகார்.
'எனக்கிட்ட இல்லையே'
'வேறாருக்கிட்ட இரிக்கி'
'முபாரிஸிக்கிட்ட இரிக்கி, அங்கருந்துதான் வாறன். அவனில்ல, போய்ப்பார்.
'வாறன் மச்சான்' என்றுவிட்டு பைசிக்கிளை மிதித்தான் இப்திகார்.

இப்திகார் முபாரிஸ் வீட்டில் முன்விறாந்தையில் பைசிக்கிளை சாத்தும்போது அது கம்பிக் காலை உரசியபடி நின்றது. கண்களை மூடிச் சிரித்தபடி வரும்போது பர்சானா முன்னே நின்று 'என்னது அவ்வளவு அவசரம்?' என்றாள்.
திண்ணைக்கதவைத் தாண்டிச் செருப்போடு போனவன், திரும்பி வந்து செருப்பைக் கழற்றிவிட்டு 'முபாரிஸ் எங்கே' என்று கேட்டான்.
'காணல்ல' என்றாள் பர்சானா,
'எங்க றஸீதாத்தா' என்று கேட்டபடி றோட்டோர மண்டபத்தைப் போய்ப் பார்த்தான்.
றஸீதா ரீவி பார்த்துக்கொண்டிருந்தாள்.
'கண் கவனம்' என்றுவிட்டு சிரித்தபடி, திண்ணையின் கிணற்றடிப்பக்கக் கதவருகே வந்து அடுப்படியில் வேலை செய்து கொண்டிருந்த றிஜிஸைப் பார்த்து
'என்ன றிஜிஸ் சுகமா கெடக்கயளா?'
திரும்பும்போதுதான் கவனித்தான் ஊஞ்சலில் சில்மியா பிள்ளையை வைத்துக் கொண்டிருந்தாள். பிள்ளைக்கருகில் போனவன் ஊஞ்சலின் கயிற்றைப் பிடித்து நிறுத்தி விட்டு 'இல்ல அவரசம், என்றபடி திண்ணையின் ஓரம் படித்துக்கொண்டிருந்த பர்சானாவின் முன்னால் மேசையின் மேல் அமர்ந்து கொண்டான்.
'நாளைக்கு ஒலுவில் பீச்சுக்கு சாப்பாட்டுக்கு போற அது சம்பந்தமா முபாரிஸ்ஸைக்



கொஞ்சம் சந்திக்கணும்.' என்று விட்டுச் சிரித்தான். அவனுக்குள் எவ்வளவு வேகம்.
'முபாரிசைத் தேடினன் என்று செல்லுங்கோ' என்றுவிட்டு மீண்டும் வேகமாய் இறங்கி நடந்தான்.

மனிதன் மட்டுமா இறக்கிறான்? லெட்சியங்களும் அவனது கனவுகளும் சேர்ந்துதானே இறக்கின்றன. ஒரு பெண்ணின் மீதான தாகம் தீராமலே ஒரு இளைஞன் இறந்து விடுகிறான். சுவர்க்கம் இல்லை என்றால் அவன் கதி என்ன? மரணம்தான் உறக்கம்போல் விழிகளும் உறங்கி மனமும் உறங்கி ஏதுமில்லை என்றால் வானலோகத்து தேவதைகள் வரார். இங்கே மதுக்கிண்ணங்களை உடைத்தெறிந்ததன் பயன் என்ன? நேற்று லெட்சியங்கள் பற்றிப் பேசிய தாளமுடியாச் சுமைகள் பற்றி தன்னம்பிக்கையுடன் பேசியவன் ஒரு குடும்பத்தின் குமர்காரியங்களை, தளர்ந்த ஒரு தந்தையின் தோள்களுக்கு மாற்றிவிட்டு மரணித்துவிட்டான்.

கனவுகளும் இறந்துதானே போகின்றன. அதன் பிறகு அவன் காதலி அழுதென்ன பயன். அவன் கேட்ட 'உன்னை காதலிக்கிறேன்' என்ற வார்த்தையை கோடானுகோடி ஆண்டுகள் அவள் உச்சரித்தாலும் அவன் காதுகளில் விழுமா என்று தெரியாது. ஆனால் அவன் அவளின் எந்த மரண ஓலத்திலும் அவளின் செவிவழியாக புகுந்து கொள்வான். அவளின் கண்ணீர் வழியே கன்னத்தில் புரள்வான். இப்திகாரை கடலின் அலைகள் ஓர் இரவு முழுவதும் புரளவைத்தன. இருந்தும் புதைந்த திக்கிலிருந்து அவன் வேறு தூர திசை போகவில்லை. இப்திகாரிலிருந்து நீரொழுக அவனை ஒலுவில் கிராமத்து மக்கள் தூக்கிவருவதைக் கண்டு அவனின் நண்பர்கள் அழுததை, மண்ணில் அடித்து அழுததை கிராமமே சொல்லியழுதது. நண்பர்கள் முதலில் நம்ப மறுத்தார்கள். முபாரிஸ் அவர்களின் வீட்டுக்கு அந்த மரணத்தை. சுமந்து வந்தவள் சில்மியாதான். அப்போது ஜிப்ரியும், முபாரிஸும் றோட்டில் கதைத்துக் கொண்டிருந்தனர். நிஸ்தார் றிஜிஸுடன் பேசிக் கொண்டே ஊஞ்சலாடிக் கொண்டிருந்தவன், 'அவன் மௌத்தாகமாட்டான்' என்றுவிட்டு இருந்து விட்டான். ஜிப்ரியும், முபாரிஸும்



RangaRakes tamilnavarasam.com

மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு ஒலுவிலுக்கு ஓடினார்கள். நிஸ்தாருக்கு மரணஅலை ஓசை கேட்காமலுமில்லை. அவன் நம்ப விரும்ப வில்லை.

ஓர் இரவு முழுவதும் நிலா வெளிச்சத்தில் கடல் ஓரமாய் நடந்தார்கள். இருள் கடல் எல்லாம் ஒன்றுதான். மர்மங்களை உள்ளடக்கியதாக இருந்தாலும் உரசிவிட்டுப் போகும்வரை அந்த மர்மங்களைப் பற்றி யோசிப்பதும் இல்லைதான். நான்கு கிராமங்களின் கடற்கரை ஓரமாய் உள்ள அடம்பன் கொடியின் ஒரு துளிர் கூட விடாமல் நசுங்கும் படி நடந்தார்கள். தென்னோலைகள் அன்று எதுவுமே பேசாமல் விட்டுவிட்டன. மீனவ வாடிகள் மர்மத்தின் திட்டுப்போல் ஆகின. அவர்களின் வலைகளை மிதித்து நாசம் செய்தார்கள். இப்திகாரைத் தேடுவதில்தான் அந்த ஒலுவில் கிராமத்து மனிதருக்கு என்ன வெறித்தனம். இப்திகாரின் நண்பர்களோடு அன்றிரவு முழுவதும் அவரும் அலைந்தார். இறுதியில் இப்திகாரின் மையத்தை முதலில் கண்டுபிடித்து, கிடந்தவனைத் தூக்கி எடுத்தது அந்த மனிதர்தான்.

மண்ணுரசிய காயத்துடன் இருந்தது அவன் முகம். அவனின் உம்மா அலறும் சத்தம் காதில் தேங்கிக்கொண்டிருக்கிறது. முபாரிஸின் மார்பில் இப்திகாரின் வாப்பா புரண்டுகொண்டே இருந்தார். முபாரிஸ் பயந்து போனான். நண்பர்கள் நான்கு மூலையிலும் இடைவிடாமல் தொடர்ந்து மையித்தைத் தூக்கினார்கள். அவனின் வாப்பாவைத் தவிர வேறுயாரின் கைக்கும் மாற அவர்கள் விரும்பவில்லை. கடற்கரையோரமாய் உள்ள மையித்துவாடியில் இப்திகாரைத் துக்கி குழியில் வைக்கும் போது காற்றும் அழுதது.



# 19

மழை இலேசாகத் தூற ஆரம்பித்தது. பாடசாலை கேட்டில் வாச்சர் நிஸ்தாரைக் கண்டதும் 'நீங்க வந்தா வரச்சொல்லட்டாம் எண்டுபோட்டு முபாரிஸ் அலிய உள்ளுக்குப் போறாங்க போங்கே' என்று சொன்னதும் நிஸ்தார் வேகமாக நடந்தான். சற்றுத் தூரம்தான் போயிருந்தான். சில்மியாவைக் கண்டான். 'காக்கா ஜிப்ரி எல்லாம் இன்னாதான் போறாங்க' என்று அவர்கள் போன திசையைக் காட்டிவிட்டுப் போனாள். அப்போது பள்ளியின் இடைவேளை மணியடித்து எல்லாப் பிள்ளைகளும் வெளியே வந்து விட்டனர்.

இடையில் நிஸ்தாருக்கு முன்னால் விரல்களைப் பிசைந்தபடி நளீமா வந்து நின்றாள். என்ன என்பது போல் நிஸ்தார் பார்த்தான்.
'ஒங்கொளோட சிபானி கொஞ்சம் பேசணுமாம். இன்டவெல் முடிஞ்சி கெள்ளீறுக்குப் பின்னால நிக்காவாம், வெரட்டாம் எண்டு சென்னா' என்றுவிட்டு எப்போதும் போல் வெடுக்கென்று திரும்பிச் சென்றாள்.

ஜிப்ரி, முபாரிஸ், சலீம் மூவரும் அதிபரைச் சுற்றி நின்றார்கள். அதிபர் இரண்டு புத்தகங்களைப் பிடித்து தனது தொடையில் கையால் தட்டிக்கொண்டிருந்தார். அவர்கள் பேசுவதற்கு எதுவுமே இல்லை போல் இருந்தது.
'இப்திகாரின் புத்தகத்திற்கு இவர் ஒண்டும் எழுதல்லையா?' என்று கேட்டார்.
'எழுதித்தாரனென்றிருக்கார்' என்றான் முபாரிஸ்
அதிபர் முன்னால் செல்ல நான்கு பேரும் பின்னால் நடந்தார்கள். சலீத் மெதுவாக 'இப்திகார் கண்டிருந்தால் சேர்ர கையில இருக்கிற இரண்டு தமிழ்ப் புத்தகத்தையும் வாங்கிருப்பான்' என்றான். யாருமே ஒருவரை ஒருவர் பார்க்கவில்லை.

சிபானி மெல்ல மெல்ல நடையின் வேத்தைக் குறைத்துக்கொண்டாள். சிறிது தொலைவில் ஏற்கனவே நளீமா நின்று கொண்டாள். அந்த மெல்லிய சீரான நடையில் குளறுபடி வருமே என்று நிஸ்தார் அஞ்சினான். மென் றோஸ் நிற விரல்களை ஒருமுறை பிசைந்து கொண்டாள். நிஸ்தாரின் கண்களைப் பார்த்தாள்.
'இனி நீங்க எனக்கிப் பின்னால் சுத்த வேணாம்' என்றாள்
'இதுக்குத்தான் கூப்பிட்டயளா' என்றான்
'நான் ஒங்களால எவ்வளவு கத கேட்டிருக்கன். இனி வெரொணாம்'



RangaRakes tamilnavarasam.com

‘நீங்கதான் பேசிறயள் என்னையும் கொஞ்சம் பேச உடுங்களன்’

‘எங்கிட குடும்பம் அப்பிடிப்பட்ட குடும்பமில்ல எனக்கேலாது’

‘நான் செல்றதையும் கொஞ்சம் கேளுங்க’

‘நான் ஒங்குட கால்ல உழுந்து கேக்கன் எனக்கிப்பின்னால சுத்தாதங்கோ’

‘ச்செ.... இல்ல... ஞ்ச இப்பிடியெல்லாம் ஏன் கதைக்கயெள்’

‘உங்களுக்கு நல்லா இரிக்கா? இப்பிடிச்செய்றயள்’

‘செரி..... நான் இப்ப போறன்.... செரி வேறொன்றும் கதைக்க வேணாம்’ என்று சத்தம் போட்டு கையை உயர்த்தியபடி சொன்னான். அவள் திரும்பி வேகமாக நடந்தாள்.

---



RangaRakes

tamilnavarasam.com